REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI
வார மலர்




## தலைக்கு மேல் வெள்ளம்

எங்கே இந்த இடப்பெயர்வுகள்?



## குடாநாட்டில் பாதுகாப்பு மீண்டும் இறுக்கமடைகிறது

## மீண்டும் கலங்கும் மக்கள்

# குடாநாட்டின் பாதுகாப்பு மீண்டும் இறுக்கமடைகிறது

குடாநாட்டில் மீண்டும் இருண்ட யுகம் ஒன்று உருவாகி வருகிறதா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

சாவகச்சேரி வர்த்தகர் ஒருவரின் மகன் கடத்தப்பட்டு, கப்பம் கோரப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டு, புதைகுழியில் புதைக்கப்பட்ட கொடூர சம்பவத்தின் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் சம்பவங்கள் இருண்ட உலகம் மீண்டும் அரங்கேற்றப்பட் போகின்றதா? என்ற கேள்வியை எழுப்புவது நியாயம்தான்.

கடந்த வருடம் மே மாதம் வன்னியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவடைந்த பின் படிப் படியாகச் சீராகி வந்த குடாநாட்டு நிலைமை தற்போது அச்ச நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.



கோத்தபாய ராஜபக்ஷ

2005 -2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடாநாட்டில் கடத்தல், கப்பம் கோரல், கொலை, காணாமல் போதல், கற்பழிப்புகள் போன்ற சம்பவங்கள் தாராளமாக இடம் பெற்றன. கடத்தப்பட்ட பலர் இன்னமும் இருக்கும் இடங்கூடத் தெரியாத நிலையில் உள்ளனர்.

கடத்தப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சுடப்பட்டு வீதிகளில் வீசப்பட்டனர். பிள்ளைகள், மனைவி, தந்தை, தாய் முன்பாகவே பலர் கொலை செய்யப்பட்ட வெறியாட்டம் அரங்கேற்றப்பட்டது.

காரண, காரியமின்றியே கடத்தப் பட்டவர்கள் பலர்; கொல்லப்பட்டவர்கள் பலர்.

மீண்டும் அத்தகைய நிலை ஒன்று இப்போது தோற்றுவிக்கப்பட்டுள்ளதா? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

* சாவகச்சேரியில் வர்த்தகரின் மகனான கபிலநாத் என்ற மாணவன் கடத்தப்பட்டு 30 லட்சம் ரூபா கப்பம் தருமாறு கோரப்பட்டது. கப்பம் வழங்காத நிலையில், அப்பாவியான அந்த மாணவன் கொலை செய்யப்பட்டு வீட்டு வளவுக்குள் குழிவெட்டிப் புதைக்கப்பட்டான். பின்னர் சடலமாக மீட்கப்பட்டான்.

* அந்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது. அந்த வழக்கை விசாரணை செய்யும் நீதிவானுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

* மானிப்பாயைச் சேர்ந்த இருவர் கடத்தப்பட்டு சுண்டுக்குழியில் உள்ள வீடு ஒன்றில் வைக்கப்பட்டு கப்பம் கோரப்பட்டது. கப்பம் தருவதாக சமயோசிதமாக அவர்களது உறவினர்களும் பொலிஸாரும் இணைந்து செயற்பட்டு, கடத்தப்பட்டவர்களை மீட்டதுடன், சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

* நவாலியில் சிறுவன் ஒருவன் வானில் கடத்தப்பட்டு, நாக்கில் மயக்க ஊசி ஏற்றப்பட்டு, பின்னர் பற்றை ஒன்றில் மயங்கிய நிலையில் வீசப்பட்டான். பின்னர் அந்தச் சிறுவன் உயிருடன் மீட்கப்பட்டான்.

* அந்தச் சம்பவத்தை அடுத்து வலிகாமம் பிரதேச பாடசாலை மாணவர்களைக் கடத்தும் செயற்பாடுகள் வெள்ளை வானில் வந்தோரால் முன்னெடுக்கப்பட்டன. தினமும் கடத்தல் குறித்த சம்பவங்கள் வெளியாகின. இதனால் பாடசாலைக்கு மாணவர்களை அனுப்புவதைக் கூடப் பெற்றோர்கள் நிறுத்திவிட்டனர். பெற்றோர், மாணவர்கள் மத்தியில் அச்ச நிலைதோற்றுவிக்கப்பட்டது. பெற்றோர் தமது வேலைப்பழுவுடன் பாடசாலை களுக்குப் பிள்ளைகளைக் கூட்டிச் செல்வதும், மீண்டும் வீட்டுக்கு அழைத்து வருவதும் தினமும் தொடர் கதையாகின்றது.

* மானிப்பாய், கட்டுடைப் பகுதியில் இரவு நேரத்தில், வன்னியில் இருந்து வந்த இளம் பெண் ஒருவர் இருவரால் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

* நெல்லியடியில் கடந்த 2ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாதோரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

குடாநாட்டில் மீண்டும் அரங்கேறியுள்ள இத்தகைய சம்பவங்கள் மக்களை அச்சத்தில் உறைய வைத்துள்ளன. மக்கள் பெரும் திகில் அடைந்த நிலையில் உள்ளனர்.

இவற்றுக்கு முடிவு வராதா என்ற ஏக்கம் சகலரது மனங்களிலும் குடிகொண்டுள்ளது. இந்தப் பயங்கரமான நிலைமை தொடர்பாக பாதுகாப்புக்குப் பொறுப்பான யாழ். பிராந்திய படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க விளக்கம் அளித்துள்ளார்.

யாழ். நகரில் 51ஆவது படையணி அலுவலகத்தில் ஞாயிறன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில், இந்தப் பயங்கர நடவடிக்கையைக் கட்டுப்பாட்டில் கொண்டவர எடுக்கவிருக்கும் செயற்பாடுகளை விளக்கிக் கூறியுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாண நிலைமைகளை ஆராய முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் சகிதம் யாழ்ப்பாணம் வந்த பாதுகாப்பு அமைச்சுச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்து விஷேட கவனம் செலுத்தியுள்ளார்.

தற்போதைய நிலைமையைச் சீராக்க உடன் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து களத்தளபதிகளுடன் விரிவாக ஆராய்ந்த கோத்தபாய, சில முடிவுகளை அறிவித்துள்ளார்

* சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* இராணுவத்தினரின் வாகன ரோந்து, நடைரோந்து ஆகியன உடன் ஆரம்பிக்கப்படவேண்டும்.

* வீதித்தடைகளோ, புதிய காவலரண்களோ அமைக்காமல் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

* முன்னர் இருந்தது போன்று படையினரின் பிரசன்னத்தை அதிகரிக்க வேண்டும்.

* கூடுதல் எண்ணிக்கையான படையினரை பணியில் ஈடுபடுத்தல்.

இந்த முடிவுகள் உடனடியாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

முக்கிய கேந்திர நிலையங்களில் உள்ள காவல் நிலையங்களில் வாகனங்கள் சோதனை செய்யப் படுகின்றன. பொதுமக்களின் உடைமைகள் பரிசோதிக்கப்படுகின்றன.

கொலை, கொள்ளை, கடத்தல், கப்பம் கோரல் போன்றவற்றை முடிவுக்கு கொண்டுவர குடாநாட்டின் பாதுகாப்பை இறுக்க வேண்டியுள்ளது எனத் தெரிவிக்கும் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஆதரவு தரவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

தற்சமயம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள், மக்கள் மனதில் தோன்றியுள்ள அச்ச நிலையை நீக்கக் கூடியதாகவும் சுமுகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாகவும் அமைய வேண்டும். இதையே அமைதியை விரும்பும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அது நிற்க -

யாழவன்

# அபிவிருத்திக்கு காட்டும் ஆர்வம் தீர்வு விவகாரத்திலும் வேண்டும்

நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் அபிவிருத்திக்காக உழைப்பதற்கும் அரசுக்கு ஆதரவு - ஒத்துழைப்பு - வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிகளிடம் கோரியுள்ளார்.

மேதின நிகழ்வுகளில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இந்தப் பகிரங்க அழைப்பை எதிர்க்கட்சிகளிடம் விடுத்துள்ளார்.

கடந்த 30 வருடங்களாக அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் தடையாக இருந்த போர் முடிந்து விட்டது. இனி நாட்டை அபிவிருத்தி செய்ய சகல கட்சிகளும் கைகோக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும்



மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க,

என்ற விடயத்தில் இரண்டு பட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால் அபிவிருத்திக்கு முன்னர், போர் ஏற்பட்டதற்கான அடிப்படையை ஆராயவேண்டும். போருக்குக் காரணமான மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் தீர்வை முதலில் காண வேண்டும்.

அத்தகைய தீர்வு காணும் விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கான தீர்வை கண்டபின்பே அபிவிருத்தியில் சகல மக்களும் தமது பங்களிப்பை வழங்கக் கூடிய சூழல் உருவாகும்.

நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து முதலில் நாட்டின் தேசிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும். அதன்பின்பே அபிவிருத்தி பற்றி சிந்திக்க வேண்டும்.

கடந்த 30 வருடங்களாக நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாக இனப்பிரச்சினை இருந்துள்ளது என்ற யதார்த்த நிலையை சிங்களத் தலைமைகள் எப்போது உணர்ந்து கொள்ளத் தயாராகின்றனவோ, அப்போதுதான் நாட்டின் அபிவிருத்தியையும் முன்னெடுக்கும் வாய்ப்பு ஏற்படும். கடந்த நான்கு வருட ஆட்சிக் காலத்தில், சர்வகட்சிக்குழு, நிபுணர் குழு என்று அமைத்து, காலத்தை இழுத்தடித்தது போன்று, இந்தியாவின் உதவியுடன் மீண்டும் விஷேடகுழு எனக் காலத்தை இழுத்தடிக்க முயற்சி எடுக்கப் படுமானால், நாட்டில் அபிவிருத்திக்கு வாய்ப்புக் குறைவாகவே இருக்கும் என நோக்கர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்கும் அதேநேரத்தில், அதேயளவு முன்னுரிமை இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்திலும் காட்டப்பட வேண்டும். அப்போதுதான் நாட்டின் முன்னேற்றமும் அபிவிருத்தியும் சாத்தியமாகும். யதார்த்த நிலை இதுதான்.

***




# எதற்காக இந்தத் திசை திருப்பல்கள்?

பிரதான பிரச்சினையிலிருந்து கவனத்தைத் திருப்புவதற்காக, உப பிரச்சின்னகளை உருவாக்குவதும், அவற்றின் மீது கவனத்தைக் குவிப்பதும் அரசியலில் உள்ள ஓர் உபாயமாகும்.

பிரதான பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அந்தப் பிரச்சினையை தமது நலனுக்காகத் தீர்க்காமலே தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காக இந்த உபாயம் பின்பற்றப்படுவதுண்டு.

இலங்கையின் அரசியலில் இனவிவகாரம் என்பது முக்கியமான ஒரு முதலீடு. சிங்கள அதிகார வர்க்கத்துக்கும் அது சிறந்த முதலீடு. தமிழ்த்தரப்புக்கும் அது நல்லதொரு முதலீடு. தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்களுக்கும் இனமுரண் என்பது மிகவும் வருவாய் ஈட்டித்தரும் ஒரு முதலீடு.

'இனமுரண் இல்லாமற்போனால், என்ன செய்தியைப் பிரசுரிக்கலாம்; போர் நின்று விட்டது. இனிமேல் எதைப்பற்றி எழுதலாம்' என்று பல ஊடகங்கள் கவலைப்பட்டன.

போர் முடிவுக்கு வந்தபோது பல 'போர்க்காலப் பத்திரிகையாளர்கள் போர் முடிந்தவுடன் திகைப்படைந்து நின்றமை இங்கே குறிப்பிடத்தக்கது. ஆனால், அவர்களுக்கும், இந்த அரசியல் வாதிகளுக்கும் ஊடகங்களுக்கும் ஒரு வாய்ப்பும் வழியும் கிடைத்துள்ளன-போருக்குப் பின்னர்.

மகிந்த ராஜபக்ஷவே அந்த வாய்ப்பையும் வழியையும் ஏற்படுத்திக் கொடுத்தார். இதை அவர் தனது தேவைகளுக்காகவும் நலனுக்காகவுமே செய்தார். நெல்லுக்கிறைக்கும் நீர் புல்லுக்கும் பொழியும் என்பார்கள். மகிந்த ராஜபக்ஷ நெல்லுக்கிறைத்தாரா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், அவர் தன்னுடைய தேவைகளுக்காக உருவாக்கிய பிரதான பிரச்சினையிலிருந்து திசையைத்திருப்பும் உபாயங்கள் ஏனைய அரசியலாளர்களுக்கும், ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் வாய்ப்பாகின.

கடந்த ஓராண்டுக்குள் நடத்தப்பட்ட மூன்று தேர்தல்களும் இதற்கு உதாரணம். இப்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசாங்கம் பெறுவதற்காக எதிரணியில் இருக்கும் தரப்புகளுடன் முயற்சி.

இந்தமாதிரி இன்னும் பல விஷயங்கள் வரப்போகின்றன. போர் முடிந்து ஓராண்டாகிறது. இந்த ஓராண்டுக்குள் எத்தகைய நல் விளைவுகளை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது?

நாட்டின் முக்கிய பிரச்சினைகளாகிய இனப்பிரச்சினைத்தீர்வு, ஜனநாயக மீள் நடவடிக்கை, பொருளாதார முன்னேற்றம், மீள் குடியேற்றம் ஆகிய எவற்றிலும் போருக்குப் பிந்திய முன்னேற்றங்கள் என்று எதுவுமே ஏற்படவில்லை.

ஆனால், மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்து ஏராளம் வெற்றிகள் அவருக்குக் கிடைத்துள்ளன. நடைபெற்ற தேர்தல்களில் அவர் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்றுள்ளார். எந்தப் பெரிய தியாகங்களையும் செய்யாமல், எந்தப் பெரிய நன்மைகளையும் ஏற்படுத்தாமல் அவர் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார்.

அவருக்குக் கிடைத்த இந்த வெற்றி இலங்கைத் தீவில் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததற்கும் சாவுகளை நிறுத்தியதற்குமானது என்று சொல்லப்படுகிறது. இதில் ஓர் உண்மையுண்டு. ஆனாலும் பிரதான பிரச்சினைகளில் கைவைக்காமல், அவற்றைத் திசை திருப்பும் உபாயத்தையே மகிந்த ராஜபக்ஷ கையாள்கிறார். அத்தகையதொரு அரசியல் உபாயத்தையே தமிழ்த்தேசியக்



கூட்டமைப்பும் கொண்டுள்ளது. அதாவது மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் உபாயத்தையே கூட்டமைப்பும் பின்பற்றுகிறது.

பிரதான பிரச்சினைகளாக இருக்கும் மீள் குடியேற்றம், பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு, அவர்களின் பிரதேசங்களுக்கான புனரமைப்பு போன்ற 'அதிமுக்கிய' பிரச்சினைகளைப் பற்றி

**-அருள் மனோகரன்**

எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல், உப பிரச்சினைகளைப் பிரதான பிரச்சினைகளாகக் காட்டும் காரியங்களே இப்போது நடைபெறுகின்றன.

உண்மையில், வடக்கு கிழக்கில் நடைபெற்ற போரின் பாதிப்புகள் மிக அதிகம். இப்போது போர் முடிந்து விட்டது. போர் முடிந்தும் ஓராண்டாகிவிட்டது. இந்த ஓராண்டிலும் இந்தப் பாதிப்புகளின் விவரத்தை திரட்டியிருக்க வேண்டும். அப்படித் திரட்டிய விவரத்தை - செய்யப்பட்ட மதிப்பீட்டை சர்வ தேச சமூகத்தின் முன்னும் இலங்கை அரசாங்கத்திடமும் கொடுத்திருக்கவும் வேண்டும்.

இதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசியல். பாதிக்கப்பட்ட மக்களின் தரப்பிலிருந்து சிந்தித்திருந்தால் நிச்சயமாக இது நடந்திருக்கும். ஆனால், இந்த முக்கியமான பணி நடக்கவேயில்லை.

போர் முடிந்த பின்னர் பாதிக்கப்பட்ட பிரதேசத்தையும் அந்த மக்களையும் மறுவாழ்வளித்து மீள் நிலைக்குக் கொண்டு வருவது முதன்மையானது. இது ஒரு சர்வதேச வழமையும் கூட. ஆனால், இத்தகைய முதன்மை நடவடிக்கை இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை.

அரசாங்கம் மீள்குடியேற்றத்தைப் பொறுப்புடன் நடத்தவேயில்லை. அதில் அதற்கு அக்கறையுமில்லை. போர்க்குற்றங்களுக்கு நிகரான குற்றம் மீள்குடியேற்றத்தை முறைப்படி செய்யாததும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வளிக்காமல் இருப்பதும்.

ஆனால், இந்தக் குற்றச்செயல்கள் நடக்கின்றன. இதைக் கவனப்படுத்தாமல் ஐ.தே. கூட்டமைப்பும் தவறுக்கு ஒத்துழைக்கிறது. இதுவரையில் மறுவாழ்வு நடவடிக்கைக்கான முயற்சிகளையும் கூட்டமைப்பு மேற்கொள்ளவில்லை. இது மிகப் பெரிய தவறுமட்டுமல்ல குற்றமுமாகும்.

போர்ப் பாதிப்புகளின் மத்தியில் வாக்களித்திருக்கும் மக்களை இதுவரையில் கூட்டாகச் சென்று எந்த அரசியல் கட்சியும் சந்திக்கவில்லை.

இதில் ஈ.பி.டி.பியும் உள்ளடங்கும். அவர்களும் மக்களிடம் வாக்குகளைப் பெற்றுள்ளனர். அவர்களுக்கும் மக்கள் வாக்களித்துள்ளனர். வெறுமனே கண்துடைப்புக் காரியங்கள் மறுவாழ்வு நடவடிக்கைகள் ஆகா.

இந்த அதிமுக்கிய பணியை மேற்கொள்வதை விடுத்து, தமிழ்க் கட்சிகள் வெறுமனே ஊடக அறிக்கைகளை மட்டுமே விடுத்துக் கொண்டிருக்கின்றன. பிரச்சினைகளைப் பகிரங்கப் படுத்துவது, மக்களுக்காகக் குரல் கொடுப்பது என்பவை அவசியமானவை. ஆனால், அதிலும் தெரிவுகள் முக்கியம்.

போரில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் முக்கியமா? கீரிமலைக் கேணியில் குளிப்பதற்கான -பிதுர்க் கடன்களைக் கழிப்பதற்கான விவகாரம் முக்கியமா? இவ்வளவுக்கும் கீரிமலைக்குச் செல்வதற்கோ, அங்கே சடங்குகளைச் செய்வதற்கோ தடைகளும் இப்போதில்லை.

இதுபோல யாழ்ப்பாணத்தில் விடுதி கட்டப்படும் விவகாரம் உள்ளிட்ட சிறு பிரச்சினைகள் பிரதான பிரச்சினைகளாக்கப்பட்டு இவையே கவனம் கொள்ளவைக்கப்டுகின்றன. ஆட்கடத்தல் விவகாரங்கள். போன்றவையும் இதனுள் அடங்கும்.

இவற்றுக்குக் குரல் கொடுப்பது அவசியமே. ஆனால், இவை மட்டும் தான் பிரச்சினைகளல்ல. அல்லது இவைதான் முதன்மைப் பிரச்சினைகளுமல்ல. போரில் பாதிக்கப்பட்ட மக்கள் வாகரை, படுவான்கரை, வன்னி என்று பரந்துள்ளனர். கிழக்கில் மட்டும் 30,000 வரையான விதவைகள் உள்ளனர். இந்தப் பிரச்சினைகளை கையாள்வதற்கான செயற்திட்டம் ஏதாவது இதுவரையில் வகுக்கப்பட்டிருக்கிறதா? கிடையாது. அங்கே பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் மோசமான வாழ்க்கையில் அவலப்படுகின்றார்கள்.

போர்க்கைதிகள், ஊனமடைந்தவர்கள், உழைப்பாளர்களை இழந்தவர்கள், தொழில் அழிக்கப்பட்டவர்கள், உடமைகள் இல்லாத நிலையில் உள்ளவர்கள், குடிநீருக்கே கஷ்டப்படுகிறவர்கள் என்று பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினை மிகப்பெரியது.

உண்மையான கவனத்தை இதில்தான் குவிக்கவேண்டும். இதுதான் அரசாங்கம் தட்டிக்கழிக்கும் விவகாரம். ஆனால், இதையே தமிழ்க்கட்சிகளும் செய்கின்றன. இது திட்டமிட்டோ அல்லது தற்செயலாகவோ கவனிக்கப்படாமல் இருக்கிறது.

எனவே சமாந்தரமாக முக்கியமான பிரச்சினைகளை இணங்காணவும் அவற்றுக்குத் தீர்வுகாணவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதுவே அவசியம்.

எல்லாவற்றின் பேராலும் கடந்த முப்பது ஆண்டுகளாக துன்பங்களை அனுபவித்த மக்கள்,துயரங்களோடே வாழ்ந்த மக்கள் சபிக்கப்பட்டவர்களாக தொடர்ந்தும் கைவிடப்படுவது நல்லதல்ல. இந்த மக்களைப் பொருட்படுத்தாமல் எந்த விடுதலையும் சாத்தியமல்ல.

ஆகவே, திசை திருப்பல்கள் இனியும் வேண்டாம். புதிய திசைவழியே தேவை. *

சுடர் ஒளி

மே. 09 - மே. 15, 2010

85, ஜெயந்தலல்விமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## அவசர காலச்சட்டம் ஏன்?

அவசரகாலச் சட்டம் தொடர்பான சில சரத்துக்கள் நீக்கப்பட்டுள்ளன. பொலீஸ் பதிவு, ஊரடங்குச்சட்டம், கூட்டங்களை நடத்துவதற்கான தடை, ஒன்று கூடுவதற்கான தடை என்று சில சரத்துக்கள் மட்டும் நீக்கப்பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்து இருக்கத்தான் செய்கின்றன. புலி ஆதரவு அமைப்புகள் என்று அரசாங்கம் கருதும் அமைப்புகள் மீதான தடையும் தொடரத்தான் போகிறது.

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் முடிவடைந்து எதிர்வரும் 18 ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகப் போகிறது. தற்போதாவது அரசாங்கம் சில சரத்துக்களை நீக்கியது வரவேற்கத்தக்கதுதான். எனினும் அவசர காலச் சட்டம் முற்றாக நீக்கப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது. அதனை முற்றாக நீக்கினால் மட்டுமே நாட்டில் ஜனநாயகத்தைப் பேணமுடியும். மக்களின் சுதந்திரத்துக்கு ஓரளவு உத்தரவாதம் அளிக்க முடியும்.

மக்களைப் பாதுகாக்கவே அவசர காலச்சட்டம் என்கிறது அரசு. ஆனால் மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தது போன்று, அவசர காலச்சட்டம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களைப் பாதுகாக்கவில்லை. அவசரகாலச் சட்டம் முழுமையாக அமுலில் இருந்த காலத்தில் கொழும்பிலும், புறநகர் பகுதியிலும், நாடு முழுவதும் பொது மக்கள் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டுள்ளனர். பலர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழ் வர்த்தகர்களிடம் கப்பம் பெறப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்ட விதிகளில் ஒரு பகுதியே தற்போது அகற்றப்பட்டுள்ளது. புலிகளின் அபாயம் இன்னும் நீங்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் இதற்குக் காரணம் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசுக்கு எதிரான பிரசாரங்களை முறியடிப்பதற்கு அவசர காலச் சட்டத்தின் சில விதிகள் தேவை என்றும் அவர் கூறுகிறார்.

எமது நாட்டைப் பொறுத்தவரை 2009 மே 18 ஆம் திகதிக்குப் பின்னர் புலிகளின் எந்த ஒரு தாக்குதலும் இடம் பெறவில்லை. அவர்கள் இருப்பதற்கான எந்த ஒரு தடயமும் காணப்படவில்லை. ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் பயம் இன்றி யாழ்ப்பாணம் போய் வருகிறார்கள். படையினரும் பதற்றம் இன்றி சர்வசாதாரணமாக அங்கு இருக்கிறார்கள். ஆகவே புலிகளின் அபாயம் இன்னும் நீங்கவில்லை என்று கூறுவது விசித்திரமாகவே உள்ளது.

ஒரு சமயம் நாடு கடந்த தமிழீழ அரசு அமைக்கும் முயற்சி குறித்து அரசு பீதி அடைகிறதோ தெரியாது. இதனை முறியடிக்க அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். ஆனால் இது வெறும் பூச்சாண்டி என்கிறார் வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள். இலங்கை அரசாங்கம் இதனைப் பெரிது படுத்தத் தேவையில்லை என்றும் அவர் கூறுகிறார்.

ஆகவே அவசர காலச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அவசர காலச் சட்டம் அமுலில் இருக்கும் வரைதான் மனித உரிமைகள், ஊடக சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றில் சர்வதேச கவனம் இருந்து கொண்டிருக்கும்.

ஆகவே அவசர காலச் சட்டத்தை முற்றாக நீக்குவது மூலமே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசாங்கம் நற்பெயரைச் சம்பாதிக்க முடியும்.



ஆறாவது நாடாளுமன்றத்தில் முஸ்லிம் உறுப்பினர்கள் 25 பேர் இருந்தார்கள். இப்போது அந்தத் தொகை 18 ஆகக் குறைந்து போயுள்ளது. அதாவது, இம்முறை 07 நாடாளுமன்ற உறுப்பினர்களை முஸ்லிம் சமூகம் இழந்திருக்கின்றது. எண் கணிதப்படி இது இழப்பாக இருந்தாலும், முஸ்லிம் சமூகத்துக்கு உண்மையில் இது இழப்புத்தானா? முன்னைய நாடாளுமன்றத்தில் இருந்த 25 உறுப்பினர்களாலும், முஸ்லிம் சமூகம் அடைந்தவை என்ன? இப்போது இந்த 07 உறுப்பினர்கள் இல்லாமல் போனதனால் இழந்தவைதான் என்ன?

இரண்டு கேள்விகளுக்கும் ஒரே விடை ஒன்றுமில்லை என்பதுதான்!

இன்னும் சொன்னால், ஒரு சமூகம் பெற்றுக் கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையால், அந்தச் சமூகத்தின் வெற்றியோ தோல்வியோ நிர்ணயிக்கப்படுவதில்லை.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் மு.காங்கிரஸ் 11 உறுப்பினர்களோடு நாடாளுமன்றம் சென்றது. கடைசியில் 04 பேரோடு திரும்பி வந்தது.

மு.கா.வின் அந்த 11 பேரில் பலர் ஆளுங்கட்சிக்குத் தாவி அமைச்சரானார்கள். கட்டடங்கள் கட்டினார்கள், பாலங்கள் அமைத்தார்கள், தொழில்களைப் பெற்றுக் கொடுத்தார்கள். ஆனால் கடைசியில் - நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் அவர்களில் பலர் தோற்றுப் போனார்கள்!

**-மப்றூக்**

அது போலவே, இம்முறை - இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மு.கா.வும் சரிந்து போயுள்ளது. கடந்த முறை அந்தக் கட்சி பெற்றுக் கொண்ட வாக்குகளிலும், உறுப்பினர் தொகைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

ஆக, ஆளுங்கட்சியிலிருந்து கொண்டு அபிவிருத்தி என்கிற பெயரில் கட்டிடங்கள் கட்டித் திரிந்த முஸ்லிம் அமைச்சர்களையும் மக்கள் தோற்கடித்திருக்கின்றார்கள். எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு எதுவுமே செய்யாமல் அரசுக்கெதிராகக் குரல் மட்டுமே கொடுத்துக் கொண்டிருந்த மு.கா.வுக்கும் மக்கள் அடி கொடுத்திருக்கின்றார்கள்.

அப்படியென்றால், இந்த இரண்டு தரப்பாருமே முஸ்லிம் சமூகம் எதிர்பார்த்த எதையும் அல்லது ஏராளமானவற்றைச் செய்யவில்லை என்றுதானே அர்த்தமாகிறது?

ஆளும் தரப்பைச் சார்ந்து போவது தான் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எப்பொழுதும் நல்லது என்கிறதொரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு, அரசின் காலடியில் மண்டியிட்டுக் கிடந்தார்கள் முஸ்லிம் பிரதிநிதிகளில் சிலர்!

அதுபோலவே, சரணாகதி அரசியலை செய்வதற்கு ஒருபோதும் நாம் தயாரில்லை என்று, வீறாப்புப் பேசிக் கொண்டு ஆளுந்தரப்பின் முட்டையில் மயிர் பிடுங்கிக் கொண்டிருந்தார்கள் முஸ்லிம் பிரதிநிதிகளின் மற்றொரு தரப்பினர்.

ஆனால், இந்த இரண்டு கோட்பாடுகளாலும் முஸ்லிம் சமூகத்துக்கு நல்லதுகள் எதுவுமே பெரிதாக நடக்கவில்லை. அப்படியென்றால், இந்த இரண்டுக்கும் அப்பால் அல்லது இந்த இரண்டுக்கும் இடைநடுவில்தான் இருக்கிறது, முஸ்லிம் சமூகத்தின் நலனை முன்னிறுத்திச் செய்ய வேண்டிய அரசியல்!

அப்படியென்றால், அதுபற்றித்தான் இனி நாம் பேச வேண்டும், சிந்திக்க வேண்டும், கலந்துரையாட வேண்டும்! ஏனெனில், மக்களுக்கான அரசியல் அங்குதான் இருக்கின்றது.

இருந்தாலும், மக்களின் நலன் பற்றிப் பேச நமது அரசியல் தலைவர்களில் அதிகமானோர் இன்று தயாராக இல்லை!

பிரமுகர்களுக்காக கட்சி இல்லை, கட்சிக்காகத்தான் பிரமுகர்கள்! கட்சிகளுக்காக மக்கள் இல்லை, மக்களுக்காகத்தான் கட்சிகள் என்றெல்லாம் மேடைகளில் தத்துவம் பேசி மக்களை உசுப்பேற்றித் திரியும் நமது தலைவர்களிடம், சமூகம் குறித்த உருப்படியான சிந்தனைகள் எவையுமே இல்லை!

இதேவேளை, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் நிறுவகம் - தாமே என்று சுயபிரகடனம் செய்து கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸிடமும் - முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எதிர்காலம் குறித்த திட்டங்கள் எவையும் இல்லை என்பதும் கசப்பானதோர் உண்மையாகும்.

உதாரணமாக, இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் பற்றிப் பேசுவதற்கு இந்த அரசாங்கம் அரசியல் கட்சிகளையெல்லாம் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் அழைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த வேளையில் முஸ்லிம் சமூகம் சார்பில் முன்வைப்பதற்கு மு.கா.விடம் ஒன்றுமே இல்லை.

கடந்த காலங்களில் புலிகள் தமக்கான தீர்வுத் திட்டத்தை அப்போதைய அரசுகளிடம் முன்வைத்த போதெல்லாம், மு.கா. வெற்றுக் கைகளுடன் வெறுமனே - வாய் பார்த்துக் கொண்டு மட்டுமே நின்றது. புலிகளுக்கு எதைக் கொடுக்கின்றீர்களோ, அதைப் போல எங்களுக்கும் தர வேண்டும் என்று குழந்தைத்தனமாய் அடம் பிடிக்க மட்டுமே மு.கா.வால் முடிந்தது.

இப்போதும், மு.கா. அந்த நிலையில்தான் இருக்கிறது!

திறந்து சொன்னால், முஸ்லிம் சமூகத்தின் மீட்பர்களாக அல்லது மேய்ப்பர்களாக தம்மைக் காண்பித்துக் கொள்ளும் அத்தனை அரசியல்வாதிகளும் தமது கட்சி அரசியலை மட்டுமே செய்து கொண்டிருக்கின்றார்கள்.

எல்லா நேரமும் - நமது அரசியல் தலைவர்கள், கட்சி நலனை அடிப்படையாகக் கொண்டுதான் தமது அரசியல் காய்களை நகர்த்துகின்றார்கள். கடந்த காலங்களில் அரசுக்குத் தமது ஆதரவைக் கொடுப்பதற்காக நமது தலைவர்கள் நடத்திய பேரங்களின் போது கூட, தமக்கு என்னவெல்லாம் வேண்டும் என்று கேட்டதை விடவும், தமது அரசியல் எதிரிகளுக்கு எவற்றையெல்லாம் கொடுக்கக் கூடாது என்றுதான் அதிகம் கேட்டார்கள்.

ஆக, முஸ்லிம் சமூகம் தனது பிரதிநிதிகளாக அனுப்பிக் கொண்டிருப்பதெல்லாம், இந்த வகையைத் தானா? ஆமாம், மகா ஜனங்களே, ஆமாம்!

ஆகக்குறைந்தது, தலைவர்களைப் பற்றி மக்கள் சிந்திப்பதைப் போலாவது, தமது மக்களைப் பற்றி இந்தத் தலைவர்கள் சிந்திப்பதில்லை!

அப்படியென்றால், மக்களைப் பற்றிச் சிந்திக்காதவர்களை எப்படித் தலைவர்கள் என்று சொல்கிறீர்கள் என்று தானே நீங்கள் கேட்கிறீர்கள்? உங்கள் கேள்வி நியாயமானது. ஆனாலும், ஆண்டாண்டு காலமாக, நாம் அப்படித் தானே சொல்லி வருகின்றோம்.

சில நாட்களுக்கு முன்னர், நண்பரொருவருடன் பேசிக் கொண்டிருந்த போது, இம்முறை முஸ்லிம் அமைச்சர்கள் நிறையப் பேரை நாம் இழந்து விட்டோம் எனக் கவலைப்பட்டுக் கொண்டார். 'உண்மைதான், கடந்த நாடாளுமன்றத்தில் அமைச்சர்களும், பிரதியமைச்சர்களுமாக 14 பேர் இருந்தார்கள். இம்முறை 03 முழு அமைச்சர்கள், 02 பிரதியமைச்சர்கள் என்று 05 பேர் மட்டும்தான்!

நீங்கள் சொல்லுங்கள்! இந்த எண் கணிதக் கணக்கை வைத்துக் கொண்டு, முஸ்லிம் சமூகம் எதையாவது இழந்து விட்டதாக நீங்கள் நினைக்கின்றீர்களா?'

ஸ்கிரீன் பிரின்டிங் பாவனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
SCREEN PRINTING CONSUMABLES AND EQUIPMENT

ஸ்கிரீன் பிரின்டிங் பாவனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கு மிகச் சிறந்த ஒரு இடத்தை தேடுகிறீர்களா?

"நெலூஸ் சோர்ஸ் வன்"

Nelu's Source

இலங்கையின் முதல் தர ஸ்கிரீன் பிரின்டிங் வழங்கல்

ஸ்கிரீன் துணிவகைகள், கலர் க்ரோமா (ஸ்கிறீன் பிரின்டிங் தீந்தை) ஸ்குயிஜீஸ் (squeegees), புடவை அச்சிடும் தீந்தை, Autotype (UK) நிறுவனத்தால் காட்சிப்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களும் பிலிம்களும், ஸ்கிரீன் பிரின்டிங் இயந்திரங்களும் மற்றும் பல வகைகளும்.

• விற்பனையாளர் வலைப்பின்னல்
எங்களுடைய விற்பனையாளர் வலைப்பின்னல் காரணமாக விசேடமாக வடக்கு, கிழக்கு விற்பனையாளர்களை எல்லா விபரங்களுடனும் கீழுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலதிக விபரங்களுக்கு சமல் ஹின்தெனிய என்பவரை 0777373631 தொலைபேசி மூலம் தொடர்பு கொள்க.

• ஸ்கிரீன் பிரின்டிங் பயிற்சித் திட்டம்
2 நாள் பயிற்சித் திட்டமும் உண்டு

Nelu's Advertising Services (Pvt) Ltd.
188, High Level Road,
Nugegoda.
Tel : 0112852820



# தலைக்கு மேல் வெள்ளம்

குறுக்காலபோவான்



மகாலிங்கம் சதீசன் என்கிற அந்த இளைஞர் புதிய கடை ஒன்றைத் திறப்பதற்கான ஆயத்தப்பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டி ருக்கிறார். இன்னும் ஓரிரு நாள்களில் வேலையெல்லாம் நிறைவுற்று கடையைத் திறக்கலாம் என்று அவர் மகிழ்வடைந்து கொண்டிருந்த வேளையில் 'ச்' என உறுமிய படி கடை வாசலில் வந்து நிற்கிறது ஒரு மோட்டார் சைக்கிள். அதில் வந்தவர்கள் சதீசை பெயர் சொல்லி உரிமையோடு அழைத்தார்கள். தன்னுடைய நண்பர்களில் யாரோ தான் இவ்வாறு உரிமையோடு அழைப்பதாக எண்ணி கடையின் முகப்புக்கு ஓடி வந்தார் சதீஸ். கண்மூடித் திறப்பதற்கிடையில் 'டுமீல்! டுமீல்!' என்று வேட்டோசை எழுந்தது. கடையில் முகப்பில் செழித்திருந்த காட்டுப்பூவரசு மரம் முழுதும் இரத்தத்தில் மூழ்கிவிட, முனகியபடியே சாய்ந்து வீழ்ந்தார் சதீஸ். இரவின் மிக அடர்த்தியான மௌனத்தை தூக்கிச் சாப்பிடுவது போல ஒருமுறை ஓங்கி ஒலித்து அடங்கியது அந்த வேட்டொலி. குடாநாட்டில் ஏறக்குறைய 18 மாத காலமாக குடியிருந்த அமைதியை அந்தத் துப்பாக்கி ஓசை கலைத்துவிட்டிருந்தது. மெல்ல மெல்ல இயல்பு நிலையைத் தளம்பச் செய்யும் வகையில் அண்மைக்காலமாக சில சம்பவங்கள் (கடத்தல், கொள்ளை) நடந்தேறியிருந்தன. ஆயினும் அவை எவையுமே இத்தனை தூரம் குடாநாட்டு மக்களை அதிர்வுக்குள்ளாக்கியதில்லை. ஆனாலும் மே 02ஆம் திகதி முன்னிரவு நேரத்தில் யாழ்ப்பாணத்தின் வடமாராட்சிப் பகுதியில் உள்ள நெல்லியடியில் இனந்தெரியாதோரால் இந்த இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் எல்லோரையும் உறைய வைத்திருக்கிறது. துப்பாக்கிக் கலாசாரம் முடிவுக்கு வந்துவிட்டது என்று நினைத்திருந்த மக்களின் மனங்களில் இந்தப் படுகொலை ஒரேயடியாக மண்ணை வாரிப் போட்டிருக்கின்றது.



சிறுவயதிலேயே படித்த கதை ஒன்றை இச்சம்பவம் ஞாபகத்துக்கு கொண்டு வரச் செய்கின்றது. தன் வகுப்பிலே பென்சில் ஒன்றைத் திருடிக்கொண்டு வீட்டுக்கு வந்தான் ஒரு சிறுவன். அவன் பென்சில் கொண்டு வந்ததை கண்டும் காணாதது போல'இருந்தாள் அவனது தாய். இது அவனுக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. தன் தாய் என்ன தவறு செய்தாலும் தண்டிக்க மாட்டாள் என்ற துணிச்சலில் அவன் விடுகின்ற தவறுகளின் எண்ணிக்கை அதிகரித்து. ஒரு கட்டத்தில் அவன் கொலை செய்யும் அளவுக்கு குற்றவாளியானான். அவனது குற்றம் நிரூபிக்கப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. அதன் போது தன்னுடைய கடைசி ஆசையாக தன் தாயைச் சந்திக்க அவன் விரும்பினான். அவனை கடைசியாகக் காண கண்ணீரோடு வந்தாள் அந்தத் தாய். ''அம்மா! உன்னிடம் ஒரு ரகசியம் சொல்ல வேண்டும்'' என்று கூறியவாறு தாயின் காதருகே நெருங்கினான் மகன். அடுத்த நொடியே தாயின் காது துண்டானது. ''நான் பென்சில் திருடும் போதே என்னை நீ தண்டித்து, திருத்தி நல்வழிப்படுத்தியிருந்தால் இப்படி நான் கொடூரமான குற்றவாளியாகியிருப்பேனா?'' என்று கூறியவாறு அழத்தொடங்கினான் மகன்.

இந்தக் கதைபோல [illegible] குடாநாட்டில் கடைசியாக நிகழ்ந்துள்ள நெல்லியடிச் சூட்டுச் சம்பவம் அமைந்துள்ளது. திருட்டுக்கள், ஆள்களைக் கடத்துதல், தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்தல் முதலான சமூக விரோதச் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் மெல்ல மெல்ல முளைவிட்டு அண்மைக்காலங்களில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வீரியம் கொண்டு தலைவிரித்தாடி வருகின்றன. ஆனால் இவற்றையெல்லாம் உரிய முறையில் பாதுகாப்புத் தரப்பு கண்டுகொள்ளவில்லை. ஒருசில விடயங்களில் பொலிஸார் துணிச்சலோடு செயற்பட்டு காரியங்களை ஆற்றியிருந்தாலும் கூட இத்தகைய அசாதாரணமான சம்பவங்கள் தொடர்ந்தும் நிகழாமல் இருப்பதற்கான எந்தவொரு முன்னேற்பாட்டு நடவடிக்கையிலும் இறங்கவில்லை. குடாநாட்டின் பாதுகாப்போடு தொடர்புடையவர்களின் இத்தகைய விட்டேத்தித்தனம், குற்றம் சிறுவனைப் போல - ஒருவித துணிச்சலையும் அளித்தது. இத்தகைய துணிச்சல் காரணமாக குற்றச் செயல்களின்' எண்ணிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்தனவே தவிர குறைந்தபாடாய் இல்லை.

இந்த நிலையில் 'தன்கையே தனக்குதவி' என்கிற ரீதியில் குடாநாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழலை முடிவுக்குக்கொண்டு வருவதற்காக தன்னிச்சையாக சில குழுக்கள் உருப்பெற்று ஒருசில செயற்பாடுகளிலும் ஈடுபட்டன. சென்றவாரம் குடாநாடெங்கும் ஒட்டப்பட்டிருந்த எச்சரிக்கை துண்டுப்பிரசுரம் கூட இத்தகைய குழு ஒன்றின் வேலைதான். இதைவிட 'மக்கள் சக்தி' என்கிற அமைப்பு ஒரு ஆக்கபூர்வமான செயற்பாட்டில் இறங்கியிருந்தது. தொழிலாளர் தினத்திற்கு அடுத்த நாளான மே 2ஆந் திகதி யாழ். முனியப்பர் கோயிலில் இருந்து ஓர் ஆர்ப்பாட்டப்பேரணியை நிகழ்த்த அந்த அமைப்பு குடாநாட்டு மக்களிடம் அழைப்பு விடுத்திருந்தது. யாழ்ப்பாணத்தில் தலைவிரித்தாடும் குற்றச் செயல்களைக் கண்டித்தும் அவற்றை உரியவர்கள் உடனடியாக கட்டுபடுத்த வேண்டும் என்று கோரியும் இந்தப் பேரணி நிகழவிருந்தது. ஆனால் அங்கேயும் வன்முறையேவிளையாடியது.

ஆர்ப்பாட்டப்பேரணி நடைபெற திட்டமிட்டிருந்த நாளுக்கு முதல் நாள் இரவு ஏற்பாட்டார்களுக்கு ஏராளமான அச்சுறுத்தல்கள் தொலைபேசியூடாக விடுக்கப்பட்டன. ''ஆர்ப்பாட்டஊர்வலத்தை நீங்கள் நடத்துவீர்களானால் அடுத்த நாள் உங்கள் இறுதி ஊர்வலத்தை நாங்கள் நடத்தவேண்டியிருக்கும்'' என்று அந்த அச்சுறுத்தல்காரர்கள் மிரட்டினார்கள். இத்தகைய மிரட்டல் சங்கதிகள் தெரியவராத பொதுமக்கள் பலர் அன்று காலை முனியப்பர் கோயிலுக்கு வரத்தொடங்கினார்கள். ஆனால் அங்கேயும் அவர்களுக்கு இன்னொரு வகையில் அச்சுறுத்தல் காத்திருந்தது. திடீரென அப்பகுதி முழுதும் சீருடைகளால் நிறைந்தது. ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ள வந்தவர்கள், குறித்த வீதியூடாகப் பயணித்தவர்கள் எல்லோருமே துருவித்துருவி விசாரிக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர். அதன் பின் பொலிஸ் அனுமதியில்லாத ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளமுடியாது என்று கூறி பொதுமக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். தம்முடைய இயல்பு வாழ்வைச் சீரழிக்கும் அச்சுறுத்தல்களுக்கு முடிவு கட்டக்கோரி மக்கள் தன்னெழுச்சியோடு, சமூக அக்கறையோடு, எவ்வித அரசியல் பின்புலங்களும் இல்லாமல் ஏற்பாடு செய்திருந்த ஜனநாயக ரீதியிலான ஓர் எதிர்ப்பு நடவடிக்கை சத்தம் சந்தடியில்லாமல் கருவிலேயே கலைந்து போனது. ஆக மொத்தம் இத்தகைய குற்றச்செயல்களுக்கு எதிரான தம் உணர்வுகளை வெளிப்படுத்தும் மக்கள் நடவடிக்கையை பாதுகாப்புத் தரப்பு ஏன் அனுமதிக்கவில்லை என்ற கேள்வியும், ஒருவேளை இத்தகைய சம்பவங்களின் பின்னணியில் அவர்களும் இருக்கிறார்களா என்ற சந்தேகமும் ஒரே நேரத்தில் மக்கள் மனதில் எழுந்தன. ஜனநாயக ரீதியிலான செயற்பாடு என்ற வகையில் தேர்தல்களை நடத்துவதில் காட்டுகின்ற அக்கறையில் ஒரு துளியை, மக்களின் ஜனநாயக ரீதியிலான இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு காட்டமுடியாமல் போனது ஏன்? என்ற வினாவும் எழவே செய்கிறது.

குடாநாட்டில் பெருகி வரும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தக் கோரும் மக்களின் குரலை அடக்கிய அதே தினத்தில் பலாலியில் ஒரு சந்திப்பில் ''யாழ்ப்பாணத்தில் நிலவும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்காக இங்கு மீளவும் இறுக்கமான முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன'' என்று யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி தெரிவித்தார். அவர் அந்த வார்த்தைகளைக் கூறி முடிப்பதற்கிடையில் பலாலியில் இருந்து சில மைல் தொலைவில் உள்ள நெல்லியடியில் யுத்தம் முடிவடைந்த பின்னர் முதலாவது சூட்டுச் சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது. இந்தச் சம்பவத்தில் இளைஞர் ஒருவரின் உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டிருக்கிறது.

குற்றச் செயல்கள் இத்தனை தூரம் - துப்பாக்கிச் சூடு நிகழும் அளவுக்கு - குடாநாட்டில் ஆழ வேரூன்றியமைக்கு பாதுகாப்புத்தரப்பின் அசட்டையீனமே காரணம். எனவே தான் 100 மீற்றர் இடைவெளியில் இரண்டு காவலரண்கள் அமைந்திருக்க அதற்கு நடுவில் உள்ள கடையில் குறித்த இளைஞனை இனந்தெரியாதோர் சுட்டுக் கொல்ல முடிந்திருக்கிறது. ஆகவே இதுவரையில் கண்டும் காணாதவர்களாய் குற்றச்செயல்கள் பெருகக் காரணமாக இருந்துவிட்டு வெள்ளம் தலைக்கு மேல் போன பிறகு அணை கட்ட வெளிக்கிடுகிறது அரசுத் தரப்பு. ஒரு வேளை தம்முடைய படை நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிப்பதற்காக வேண்டும் என்றே இத்தகைய குற்றச் செயல்களை ஆளும் தரப்பு பெருக விட்டிருக்கக் கூடுமோ என்ற சந்தேகத்தை பலர் தமக்குள்ளேயே எழுப்பிக் கொள்கிறார்கள். பாவம்! அப்பாவி மக்கள்! அவர்களுக்கு இதைத்தவிர வேறு என்ன செய்யமுடியும். ❋

# மீண்டும் கலங்கும் மக்கள்



போர்க்காலத்தில் அடுத்ததாக என்ன நடக்கும் என்று தெரியாத அச்சம், கலக்கம், புரியாமை, குழப்பம் எல்லாம் நிறைந்த நிலையில் மக்கள் வாழ்ந்தனர். அது போர்க்காலம் என்பதால் அப்படி இருந்தது. அது ஏற்க முடியாத நிலை என்றாலும் போர்தான் எல்லாவற்றையும் தீர்மானிப்பது என்பதால் அவை நடந்தன. மக்கள் அவற்றை ஏற்கமுடியாவிட்டாலும் தாங்கிக் கொண்டனர்.

ஆனால், இப்போது அப்படியல்ல. இது போர் முடிந்த காலம். அமைதிச் சூழல் என்றாலும், இந்த அமைதிச் சூழல் என்பது போருக்குப் பின்னான இயல்பு நிலையை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக அச்சுறுத்தல் நிறைந்த நிலைமையை நோக்கிச் செல்கிறது.

யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் கடந்த இரண்டு மாதங்களாக நடந்துகொண்டிருக்கும் ஆட்கடத்தல், படுகொலை போன்ற சம்பவங்கள் மக்களை மீண்டும் கலவரப்படுத்தியிருக்கின்றன.

இந்தச் சம்பவங்களின் பின்னணி என்ன? இதற்கெல்லாம் யார் காரணம்? யார் பொறுப்பு? என்பதைப் பற்றி பலவிதமாக அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இந்த அபிப்பிராயங்களின் உண்மைத் தன்மை பற்றிச் சரியாக எமக்கு எதுவும் தெரியாது. ஆனால், இந்தச் சம்பவங்களில் சில பொலிஸ் பிரிவினால் இனங்காணப்பட்டுள்ளன. சில சம்பவங்களை பொலிஸ் முறியடித்தும் உள்ளது.

**-ஜோசவ் தயாளன்**

சாவகச்சேரியில் நடந்த படுகொலையை ஸ்ரீலங்கா பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு இனங்கண்டு, நடவடிக்கை எடுத்துள்ளது. மானிப்பாய்ப் பொலிஸ் பிரிவு யாழ் குருநகரில் நடந்த கடத்தலை முறியடித்து சிக்கியவர்களை மீட்டிருக்கிறது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் மக்களுக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுத்துள்ளன. எனினும், அபாயவிளக்கு அணையவில்லை. நெளுங்குளம் - வவுனியாவில் ஓர் இளைஞர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நெல்லியடி - யாழ்ப்பாணத்தில் ஓர் இளைஞர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

அப்படியாயின், அகால மரணங்களின் காலம் மீண்டும் தொடங்கிவிட்டதா என்று மக்கள் அஞ்சுகிறார்கள். இந்தச் சூழலை முறியடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். படைத்தளபதி வாக்குறுதி வழங்கியிருக்கிறார். அதன்படி நடவடிக்கைக்காக படையினரின் பிரசன்னம் அதிகரிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இயல்புநிலை ஒன்றைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சகலருக்குமுரியது. அரசாங்கத்துக்கு இதில் கூடுதலான பொறுப்புண்டு. இப்போது ஆயுதத்தைத் தூக்க வேண்டிய தேவை யாருக்கும் இல்லை. அதற்கான தரப்புகளும் இல்லை. அப்படியென்றால் என்னதான் நடக்கிறது? போரை முடித்ததாகச் சொல்லும் அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வை வைக்கவில்லை, மீள்குடியேற்றத்தை அர்த்த பூர்வமாக மேற்கொள்ளவில்லை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கவில்லை என்பதெல்லாம் இருக்கட்டும்.

இப்போது நாங்கள் கொஞ்சம் நிம்மதியாக இருப்பதற்கு வழிவிட்டால் போதும் என்று மக்ககள் சொல்கிறார்கள். வடக்கு கிழக்கில் இருந்து படையினரை விலக்கவேண்டும் என்று எழுகின்ற, எழுப்பப்படப் போகின்ற கோரிக்கையை முறியடிக்கவே இப்படி அமைதியற்ற நிலை ஒன்று உருவாக்கப்படுகிறதோ என்று சந்தேகிப்போரும் உள்ளனர்.

அப்படியென்றால், சும்மா இருக்கும் படையினருக்கும் வேலை. படை வாபஸும் இல்லை. ஒரு கல்லில் இரண்டு மாங்காயா? அப்பனே இயல்புநிலையிலும் இப்படியொரு இயல்பு நிலையா. என்று கேட்கின்றனர் அவர்கள்.

எதற்கும் நாட்டில் முழுமையான அமைதிச் சூழல் உருவாக வேண்டுமானால், ஜனநாயகச் சூழல் ஒன்று முழுமையாக்கப்பட வேண்டும். அந்த ஜனநாயகச் சூழலே ஏனைய எல்லாவற்றையும் நிர்ணயிக்கின்றது.

போருக்குப் பிந்திய நிலைமை என்பது போர்க் காலத்தையும் விட பயங்கரமானது என்று பொதுவாகச் சொல்லப்படுவதுண்டு. போர் முடிந்த பின்னர் இருக்கும் உதிரிகள் இந்த மாதிரி நடப்பது உலக வழமை.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், ஆபிரிக்காவில் நடந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர் அங்கே நிலைமைகள் இப்படித்தான் மோசமாக - பயங்கரமாக இருக்கின்றன.

எரித்திரிய யுத்தம் முடிந்த பின்னர் வந்த இரவுகள் சிறிது காலம் இப்படி. அநாமதேயமான கொலைக் கரங்களின் பிடியில் இருந்திருக்கிறது.



அதற்காக இலங்கையிலும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்பதில்லை.

இலங்கையில் அமைதியைக் கொண்டு வரவில்லை என்றால் மீண்டும் அமைதியற்ற நிலை உருவாகும் என்று பொதுவாக - உண்மையை - பலரும் சொல்லியிருக் கின்றனர்.

அதற்கு முன்னர், இப்போது பயங்கரமான நாட்கள் இப்படிச் சடுதியாக உருவாகியுள்ளன. இது அரசியல் பின்னணியுடன் நடக்கிறதா? அல்லது உதிரிச் சம்பவங்களா என்பதை முதலில் கண்டறிய வேண்டும்.

இதை இனங்கண்டால் தான் அதற்கேற்றமாதிரி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மக்களின் அச்சம் நீங்கும். இதைக் கண்டு பிடிக்கும் பொறுப்பு பாதுகாப்புக் கும் சட்டத்துக் கும் பொறுப்பானவர் களுக்கு உண்டு.

ஆனால், பாதுகாப்பின் பேராலும் சட்டத்தின் பேராலும் மீண்டும் சுமைகள் வந்தால் அதற்கு என்ன செய்வது?

எனவே, இப்போது ஒரு கூட்டுப் பொறுப்பு சகலருக்கும் ஏற்பட்டுள்ளது. மக்களும் இப்போது விழிப்புடன் இருக்க வேண்டியுள்ளது. மக்களின் பிரதிநிதி கள், சமூக அமைப்புகள் எனச் சகலவும் விழிப்புடன் இருக்க வேண்டியுள்ளது.

இந்த நிலைமைகளின் பின்னால் இருக்கும் சூத்திரதாரிகளை இனங்காண்பது இவர்களின் முதற்பணி. அப்படி இனங்கண்டு, அபாய நிலையை உருவாக்குவோரின் நோக்கங்களை முறியடிக்க வேண்டும். கடந்த முப்பது ஆண்டுகளாக எல்லாவகையான நெருக்குவாரங்களாலும் அவதிப்பட்ட மக்கள் தமிழர்கள். எனவே, மீண்டும் மௌனமாக இருந்து அப்படியொரு நிலை வளர அனுமதிக்க முடியாது.

சனங்களை உறைய வைக்கும் அச்சக்கலாசாரத்துக்கு இடமளிக்கக் கூடாது. இதற்காக ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். விழிப்போடும் எச்சரிக்கையோடும் செயற்பட வேண்டும். *





# உயிர் வலிக்கும் கணங்கள்...!!

## உயிர் குடிக்கும் எறிகணைகள்

அழகும் அற்புதமும் நிறைந்த இயற்கை வளங்கள். ஊர்க் குடிமனைகள் அவற்றைச் சுற்றி பச்சைப்பசேல் எனக் காட்சி அளிக்கும் வயல் வெளிகள். குளக்கோட்ட மன்னனால் அமைக்கப்பட்ட வவுனிக்குளம். இயற்கையாகவே ஓடிக்கொண்டிருக்கும் பாலாறு. சிறப்பு வாய்ந்த ஆலயங்கள். அற்புதங்கள் பல நிகழ்த்தும் கறுத்தப்பாள துர்க்கை அம்மன். வனவிலங்குகள். ஏராளமான ஆரோக்கியமான பறவைகள். - இப்படி செழிப்புகள் நிறைந்த ஆரோக்கியமான ஊர்தான் மல்லாவி.

இந்த ஊரில் கவலையின்றி சந்தோஷமாக வாழ்ந்த மக்களின் இயல்பு வாழ்க்கையை போர் என்னும் கொடூர அரக்கன் சிதைக்க ஆரம்பித்தான். யார்தான் என்ன செய்யமுடியும் ?.... போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த காலமது. திடீரென கூவிக்கொண்டு வந்த எறிகணை வயலூர் பிள்ளையார் கோவில் வயல்வெளியில் வீழ்ந்து வெடித்தது. எதுவும் புரியாத நிலையில் அனைத்து மக்களும் இடம்பெயரத் தொடங்கினர். நாங்களும் பொருட்களை ஏற்றிக் கொண்டு அக்கராயன் சென்றோம். அங்கு சிறு குடிசை அமைத்து ஒரு மாதம் வாழ்ந்தோம்.



அங்கும் எறிகணைகள் வந்து வீழ்ந்த போது வட்டக்கச்சி, சுண்டிக்குளம், விஸ்வமடு, உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம் என்று இடம் பெயர்ந்து சென்று கடைசியில் ஆச்சி தோட்டத்தில் தறப்பாள், பதுங்குகுழி அமைத்து இருந்தோம். கடுமையான எறிகணைவீச்சுக்கள். பதுங்குகுழியை விட்டு வெளியே வர முடியாது. இரண்டு நாட்களாக சாப்பிடவே இல்லை. நாங்கள் இருந்த இடத்தைச் சுற்றி செறிவான எறிகணைத் தாக்குதல்கள் நடத்திக் கொண்டிருந்தனர். அந்த இடத்தில் ஏராளமான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட எமது உடமைகளையும் எடுக்காமல் புதுமாத்தளனுக்கு வந்து சேர்ந்தோம். அந்த நேரம் எமது கையில் எதுவுமே இருக்கவில்லை. பசி ஒருபுறம் வேதனை மறுபுறம். அனைவரும் அழுதுகொண்டு மரத்தடியில் இருந்தோம். பக்கத்தில் இருந்த குடும்பம் எங்களின் பரிதாபநிலையைப் பார்த்து பானை சட்டியும், அரிசியும் தந்தார்கள். உடனே எனது தங்கச்சி கஞ்சி காய்ச்சித் தந்தாள். அந்தக் குடும்பத்தை எம்மால் மறக்கவே முடியாது.

சில நாட்களில் அங்கும் எறிகணை வீழ்ந்து வெடிக்க, பொக்கணை கடற்கரை, பிள்ளையார் கோவிலடியில் தஞ்சம் புகுந்தோம். உண்ண உணவில்லை. மாற்றி உடுக்க உடையில்லை. குடிக்க சுத்தமான தண்ணீர் இல்லை. பசிபட்டினியால் மக்கள் செத்துக் கொண்டிருந்தார்கள். பச்சைக் குழந்தை பசியால் துடித்துக் கொண்டிருந்த வேளை உவர் நீரைக் கொடுத்து, பசியைத் தீர்த்தோம். அங்கும் எறிகணை வந்தது. இனி எங்களால் எங்குதான் ஓடமுடியும் ?

நாலா திசைகளிலும் இருந்து வந்து கொண்டிருந்த எறிகணைகள் சரமாரியாக வெடித்துக் கொண்டிருந்தன. அதிலும் பல மக்கள் கொல்லப்பட்டனர். இனி இப்படி இருந்து பிரியோசனம் இல்லை என முடிவெடுத்தோம். 19.04.2009 அன்று இலட்சக்கணக்கான மக்கள் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள். திடீரென சரமாரியாகப் பொழியப்பட்ட எறிகணைகள் மக்கள் மீது வீழ்ந்து வெடித்தன. அந்த நிமிடத்தை எப்படி நான் சொல்லுவேன்? என்ன கொடூரம் அது? எங்கு பார்த்தாலும் இரத்த வெள்ளம். பச்சைக் குழந்தையில் இருந்து வயது போன பெரியவர் வரை குடல் வெளியேறி, மண்டை சிதறி, கை, கால் துண்டிக்கப்பட்டு இறந்து கிடந்தார்கள். இதைவிட ஆயிரத்துக்கு மேற்பட்டோர் படுகாயங்களுடன் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

அன்றும் எமது பயணம் தடைப்பட்டு திரும்பிச் சென்றோம். ஏதோ ஒரு வகையில் எங்கள் அண்ணாவையும் இழந்துவிட்டோம். நாட்கள் செல்லச் செல்ல இழப்புகளும் அதிகரித்துக் கொண்டே இருந்தன. உவர் நீரையே குடித்து உயிர் தப்பிய மக்களுடன் மக்களாக நாங்களும் 2009 மே மாதம் வவுனியா வந்தோம். தற்போது மீண்டும் மீள்குடியேற்றப் பட்டுள்ளோம். தங்கள் குடும்பத்தில் ஒரு உயிரையும் கொடுக்காத குடும்பங்கள் இங்கில்லை. இதைவிட ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகளையும், கணவன்மார்களையும் புனர்வாழ்வு என்னும் பேரில் தடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு சுடர்ஒளி, உயிர் வலிக்கும் கணங்கள் மூலம் தமிழ் நெஞ்சங்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

அ. சதீஸ்கரன்

## உறவுகளைத் தேடும் காகித மடல்கள்



எங்களுக்கு என்ன நடந்தது? என்ன நடக்கப் போகின்றது ? எங்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது ? எங்கள் உறவுகள் உயிருடன் இருக்கிறார்களா? எங்கள் உறவுகளுடன் சந்தோஷமாக வாழும் எதிர்காலம் ஒன்று எம் வாழ்வில் வருமா?

இவற்றை அறியாத ஏதிலி வாழ்க்கைக்குள் வாழ்ந்து கொண்டு இருக்கும் இனம் ஈழத்தமிழ் இனம். இக்கருத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாய் ஓர் உண்மைச் சம்பவத்தைப் பார்ப்போம்.

இன்று அதிகம் கடிதம் எழுதுபவர்கள் வாழும் நாடு இலங்கை என்றால் இதை யாராலும் மறுக்க முடியாது. கடந்த 30.01.2010 எனக்கோர் கடிதம் வந்தது. கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் படித்தேன்.

அன்புள்ள நிலவனுக்கு... (பெயர் மாற்றப்பட்டுள்ளது) நான் நலம் உன் நலத்துக்கும் இறைவன் துணை புரிவாராக.

தம்பி எனது மகன் - உனது பள்ளித் தோழன் - நீ நிற்கும் இடத்தில் நிற்கின்றானா? எனது மகன் பற்றி எதுவித தகவலும் தெரியாமல் ஆவியாய்த் தவிக்கிறேன். எனது மகனுக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்திருக்காது. எனது பிள்ளை எங்கேயோ ஒரு முகாமில் உயிருடன் இருப்பான் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அந்த நம்பிக்கையில்தான் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன். கடவுள் என் மகனை என்னிடம் சேர்ப்பார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நம்பிக்கை வீண் போகாது.

நன்றி.

எனக் கடிதம் முடிக்கப்பட்டிருந்தது. கடிதத்தை படித்து முடித்த எனக்கு என் இரத்தமெல்லலாம் உறைந்து என் இதயம் இயங்க மறுத்தது. பூமியே என் தலைமேல் உள்ளது போல் தலை கனத்தது. நிச்சயமாக இந்த அம்மாவின் மகன் புதையுண்ட இடத்தில் செடி முளைத்திருக்கும்.

இந்த அம்மாவின் கடிதம் போன்று எத்தனை அம்மாக்களின் கடிதங்கள் வலிகள் தாங்கி ஒவ்வொரு முகாமாய்ப் பறக்கும். சுவரில் எறியப்பட்ட பந்தைப் போன்றே பல கடிதங்கள் பயணம் தொடங்கிய இடத்திற்கே திரும்பிச் செல்லும்.

மேல் கூறிய, தன் மகன் இறந்தது கூடத் தெரியாமல் தன் மகனைத் தேடிக் கொண்டிருக்கும் ஒரு தாயின் துயரக் கதை போன்றே மனைவி - கணவனையும், கணவன் - மனைவியையும், பிள்ளைகள் - பெற்றோரையும் தேடிக்கொண்டு இருக்கும் படலம் தொடங்கி இருக்கிறது.

இலங்கை அரசாங்கத்தினாலேயோ, சர்வதேசத்தினாலேயோ இறந்தவர்களின் உயிர்களைத் திருப்பிக் கொடுக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் இன்று தமிழ் மக்கள் சுமந்து சுமந்து கொண்டு இருக்கும் துன்ப துயரங்களுக்கு சர்வதேச சமூகம் வழங்கப் போகும் நஷ்டஈடு என்ன என்பதே தமிழ் மக்கள் மத்தியில் இன்று எழுந்து நிற்கும் கேள்வியாகும்.

ம. சுமன்.

**அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

# காங்கிரஸ் அரசை நெருக்கும் பல முனைப் பிரச்சினைகள்!



சிதம்பரம்

இந்தியாவில் மன்மோகன் அரசு இரண்டாம் முறையாக பதவியேற்று இவ்வாரம் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. கடந்த ஆண்டு அக்கட்சி பெருவெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைத்த போது இனிமேல் காங்கிரஸை அசைக்கவே முடியாது என்ற எண்ணம் அதன் எதிரிகளிடம் கூடத் தோன்றியது. ஆனால், ஒருவ்வருடம் முடிவதற்குள்ளாகவே அந்த மகத்தான வெற்றியின் பிரகாசம் மங்கத் தொடங்கிவிட்டது. அமைச்சரவை அமைக்கப்பட்டபோது பல புதிய முகங்களுக்கு இடமளிக்கப்பட்டது. ஆனால், இந்த புதிய அமைச்சர்கள் தமது அனுபவமின்மையை காட்டி சோனியா காந்தியையும் மன்



அழகிரி

மோகனையும் பெரும் சங்கடத்தில் ஆழ்த்தினர். இவர்கள் உளறுவாயர்களாக இருந்ததால் கட்சியை வளர்க்கும் செயற்பாட்டை நிறுத்தி இவர்களின் உளறல்களை வியாக்கியானப்படுத்த அல்லது இவர்களிடம் விளக்கம் கேட்கவேண்டியதாயிற்று. வெளியுறவு இணை அமைச்சராயிருந்த சஷி தரூர் வேண்டாத சர்ச்சைகளில் மாட்டி கட்சிக்கும் அரசுக்கும் பெரும் நெருக்கடியை உண்டாக்கினார். கடைசியில் சோனியா காந்தி அவரை வெளியேற்றவும் நேர்ந்தது. இவ்வாறு சி.பி.ஜோஷி போன்ற ஏனைய சில புது அமைச்சர்களும் நாவை சமயோசிதமாக பயன்படுத்தாது கட்சியை திணறடித்தனர். மற்றொருபுறம் ஐ.பி.எல் சர்ச்சையில் மத்திய அரசு சரியாக கடமையை செய்யவில்லை என நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பின. இது தவிர, உணவுப் பொருள் விலைவாசி உச்சத்தில் ஏறிவிட்டதால் வரவு செலவு திட்ட விவாதத்தில் எதிர்க்கட்சிகளின் அனல் பறக்கும் போராட்டத்துக்கு அரசு பதில் அளிக்கவேண்டியுள்ளது. விலைவாசி உயர்வைக் கண்டித்து நாடளாவிய முழு அடைப்புப்போராட்டத்தை கடந்த வாரம் எதிர்க்கட்சிகள் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளன. இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தொடர் போராட்டம் நடத்திவருவதும் குறிப்பிடத்தக்கது.

நக்சலைட்கள்- மாவோயிஸ்ட்கள் தரும் தொல்லை இன்னொருபுறத்தில் அரசை நெருக்கி வருகிறது. சத்திஷ்கரின் தற்தேவாடா பகுதியில் ஒரு தாக்குதலில் 70 பொலிஸார் உயிரிழந்தது கரந்தடி தீவிரவாதத்துக்கு முகங்கொடுக்க இந்தியாவால் இயலாது என்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. உள்துறை அமைச்சர் சிதம்பரம் இதுதொடர்பில் கடும் கண்டனத்துக்குள்ளானார். பதுங்கியிருந்து தாக்கும் உத்திக்கு பதிலளிக்க புதிய வியூகம் அமைக்கும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. இவர்களுக்கு சீன ஆதரவு உள்ளதா என்ற சந்தேகமும் கூடவே ஏற்பட்டுள்ளது. இந்த தாக்குதலை அடுத்து உள்துறை அமைச்சர் சிதம்பரம் பதவி விலக தயாரானார். எனினும் பிரதமர் மறுத்ததால் அந்த ராஜினாமா கிடப்பில் போடப்பட்டுள்ளது. நக்சலைட் மற்றும் மாவோ தீவிரவாதிகள் உள்ளூர் மக்களின் அன்பை வென்றிருப்பதால் அவர்களை கட்டுப்படுத்த முடியாது பொலிஸார் திணறி வருகின்றனர். வருங்காலத்தில் இவ்வாறு நடந்தால் சிதம்பரத்தின் தலை உருள்வது நிச்சயம் எனலாம்.

நாடாளுமன்ற வரவு செலவு திட்ட கூட்டம் நடந்துவரும் நேரத்தில் எதிர்க்கட்சிகளுக்கு சாதகமான பல விடயங்கள் நடந்து வருகின்றன. எதிர்க்கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட பலரின் தொலைபேசிகளை அரசு ஒட்டுக்கேட்டது என்ற குற்றச்சாட்டும் கடந்த வாரங்களில் பெரும் பூதாகரமாக உருவெடுத்துள்ளது. அரசின் தோழமைக்கட்சித் தலைவர்களின் தொலைபேசியும் கூட ஒட்டுக் கேட்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனையடுத்து பிரதமர் பதவி விலக வேண்டுமென எதிர்க்கட்சிகள் நிர்ப்பந்தித்துள்ளன. இதுகுறித்து விசாரணை நடத்துமாறும் கோரப்பட்டது.

இவ்வாறு பல சிக்கல்களில் ஒரே நேரத்தில் மாட்டி முழிக்கும் அவலம் காங்கிரஸ் அரசுக்கு பதவியேற்று ஓராண்டுக்குள்ளேயே ஏற்பட்டுள்ளது. இது போதாதென்று கூட்டணிக் கட்சிகளும் பல அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. உதாரணமாக மேற்கு வங்க மாநிலத்தில் காங்கிரஸின் பங்காளிக் கட்சியான மம்தா பனார்ஜியின் கட்சியுடன் உள்ளாட்சித் தேர்தல் பங்கீட்டில் முரண்பாடு வெடித்துள்ளது. மம்தா பனார்ஜி கூட்டணியை விட்டு விலகிவிட்டார்.

-எஸ். சுரேந்திரஜித்-



கனிமொழி

அவர் விலகியதால் காங்கிரஸ் அரசு ஆட்டம் காண்கிறது. காரணம் இவரது திரிணாமுல் காங்கிரஸ் கட்சிதான் காங்கிரஸுக்கு அடுத்து ஆளும் கூட்டணியில் பெரிய கட்சியா கும். அவரது 19 எம்.பிக்களும் இல்லா விடில் அரசின் பெரும்பான்மை 243 ஆக சுருங்கிவிடும். இதனை 272ஆக மாற்ற ஏனைய கட்சிகளிடம் காங்கிரஸ் தஞ்சமடைய வேண்டி ஏற்படலாம். முலாயம் சிங்கின் கட்சியோ மாயாவதியின் கட்சியோ கைகொடுக்கும் என காங்கிரஸ் நம்பு கிறது. இக்கட்சிகள் காங்கிரஸின் எதிரிகளே என்றாலும் பி.ஜே.பிக்கும் எதிரிகள் என்பதால் சமயத்தில் கைகொடுக்கும் என்பது காங்கிரஸின் நம்பிக்கை. ஆனால், மாயாவதி இந்த ஆதரவுக்கு கைம் மாறாக உத்தரப்பிரதேசத்தில் தனது அரசை காங்கிரஸ் எதிர்க்கக்கூடாது எனக் கோருவார் என்பது நிச்சயம். சமீபகாலமாக உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி உத்வேகம் பெற்று வருகிறது. ராகுல் காந்தியின் பிரசாரமும் உழைப்புமே இதை சாதித்தது என்பது உண்மைதான். இந்த வேகத்தில் போனால் ராகுல் காந்தி, மீதமுள்ள தலித்களையும் கவர்ந்து கொண்டுவிடுவார் என மாயாவதி அஞ்சுவதும் சரியே. எனவே ராகுல் காந்தியின் வேகத்துக்கு ஈடுகொடுக்க ஒரேவழி மத்திய அரசை ஆதரிப்பதாக நாடகமாடுவதே என மாயாவதி கருதுகிறார். கடந்தவாரம் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த வரவு செலவுத் திட்ட வெட்டுத்தீர்மானத்தில் மாயாவதி எவரும் எதிர்பாராத வண்ணம் காங்கிரஸ் அரசை ஆதரித்து வாக்களித்தார். இதை எதிர்பாராத எதிர்க்கட்சிகள் மாயாவதியை திட்டித் தீர்த்துள்ளன. உத்தரபிரதேசத்தில் காங்கிரஸை முடக்கவே மாயாவதியின் இந்த வியூகம் என்பது யாவருக்கும் தெரிந்ததே.

இதேவேளை ஆட்சி தொடங்கி முதலாண்டு பூர்த்தியை அடுத்து மத்திய அமைச்சரவையை மாற்றுவதற்கு சோனியாவும் பிரதமரும் தீர்மானித்துள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன. நாடாளுமன்றத்தில் ஆங்கிலத்திலோ ஹிந்தியிலோ பேசமுடியாத அழகிரி மத்திய அமைச்சர் பொறுப்பில் இருந்து விலகவிரும்புவதாக தெரிகிறது. அவரது இடத்துக்கு கனிமொழி நியமிக்கப்படலாம். இது தொடர்பாக பேசவே இவ்வாரம் கருணாநிதி டில்லிசென்றுள்ளார் என தி.மு.க வட்டாரங்கள் கூறுகின்றன. அத்துடன் தொலைதொடர்பு அமைச்சராக உள்ள தி.மு.க.வின் ராஜா மீது எதிர்க்கட்சிகள் கடும் கண்டனக் கணைகளை தொடுக்கத் தொடங்கியுள்ளன. அவரது



சஷி தரூர்

ஊழல்குறித்து பிரதமரும் எரிச்சலடைந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. கருணாநிதியுடன் ராஜா விவகாரம் குறித்தும் சோனியாவும் பிரதமரும் பேசுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வெளியுறவு இணை அமைச்சர் சஷி தரூர் விலகியதால் அப்பதவியும் வெற்றிடமாயுள்ளது. சுகாதார அமைச்சர் குலாம் நபி அசாத்தும் வேறு துறைக்கு மாற விரும்புகிறார். எனவே அமைச்சரவை மாற்றம் வரலாம் என்பது பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

***

# முதலிரவு அறையில் நடந்த கற்பு பரிசோதனை!

இந்த உலகம் இயந்திரமயமாகிக் கொண்டிருந்தாலும், மனிதர்கள் படித்து அறிவாளிகளாக ஆகிக் கொண்டிருந்தாலும், இன்றும் தன் புது மனைவியிடம் கற்பு சோதனை செய்யும் அறிவிலிகள் இருக்கத் தான் செய்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒருவர் விபுல். இவர் தனது



மனைவியிடம் முதல் இரவிலேயே கற்பு பரிசோதனை நடத்த, அதன் பின்பு நடந்தது மிகப் பெரிய விபரீதம்..!

மேற்கு வங்காளத்தில் உள்ள முபாரக்பூரில் வசிப்பவர் பரியாலால் தாஸ். உள்ளூரில் ஒரு சின்ன தையல் கடை வைத்திருக்கும் இவருக்கு மூன்று மகள்கள் மற்றும் ஒரே ஒரு மகன். மூத்த இரு மகள்களுக்கு கஷ்டப்பட்டு தனது ஏழ்மைக்கேற்ப திருமணம் செய்து வைத்தார். மூன்றாவது மகளான திகாவுக்கு வரன் பார்த்துக் கொண்டிருந்தார். பரியாலால் தாஸின் தூரத்து உறவினரும், புரோக்கருமான பாலி சர்க்கார் புதிய வரன் ஒன்றை கொண்டு வந்தார்.

பையன் டாக்டர் தொழில் செய்கிறார் எனவும், உங்கள் மகள் திகாவுக்கு பொருத்தமாக இருக்கும் என்றும் கூறினார். இதைக்கேட்டு தயக்கமான பரியாலால், ''டாக்டர் என்றால் வரதட்சனை அதிகமாக கொடுக்க வேண்டியது இருக்குமே... முடியாதே'' என்று தமது ஆதங்கத்தை கொட்ட, ''50ஆயிரம் ரூபாயும், ஒரு மோட்டார் சைக்கிளும் வாங்கிக் கொடுத்தால் போதும்'' என்று கூற, ஒப்புக் கொண்டார் பரியாலால்.

சில நாட்கள் கழித்து இரு குடும்பத்தாரும் பேசி திருமணத்தை உறுதி செய்தனர். வங்காளிகள் எங்கேயும், எப்போதும் சாஸ்திரம், சம்பிரதாயத்திற்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள். தடபுடலாக விருந்தும் வைப்பார்கள். திருமண நாளன்று பல சம்பிரதாயங்களை முடித்து விட்டு, முதலிரவு அறைக்குள் திருமணமான தம்பதியரை அனுப்பி வைத்தனர்.

முதலில் பேச ஆரம்பித்தது மணமகன்தான். தான் பிரபல டாக்டர் என்றும், எந்த பெண்ணையும் பார்த்தவுடன் அவள் கற்புடையவளா இல்லையா என்று கண்டுபிடிக்க முடியும் என்றும் கூறினான். பின்னர், 'திருமணத்துக்கு முன்பு யாரையாவது காதலித்தாயா? உங்களுக்குள் ஏதும் உறவு ஏற்பட்டதா?' என்று திகாவிடம் கேட்க, விக்கித்து நின்றாள் புதுப்பெண்!

கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்தவாறே... தாம் அந்தமாதிரி பெண் இல்லை என்றும், யாருடனும் தனக்கு தொடர்பு இல்லை என்றும் அழுத்தமாக கூறினாள் திகா. ஆனாலும் அவளது பதிலில் நம்பிக்கையில்லாமல், மீண்டும் தனது அனுபவத்தைக் கூறி அவளை மிரட்டினான்.

'நான் நிறைய பெண்களைப் பார்த்திருக்கிறேன். எனது அனுபவத்தில் உன்னைப் போன்ற அழகான பெண்கள், கண்டிப்பாக யாருடனாவது தொடர்பு வைத்திருப்பார்கள்'' என்று கூறி திகாவை மிரட்ட... அவளோ கண்ணீர் விட்டு கதறியபடி மறுத்தாள். நேரம் செல்ல...செல்ல... இருவருக்குமான வாக்கு வாதம் முற்றியது. இறுதிவரை விபுல் திகாவை கற்புக்கரசியாக நம்பவில்லை. யாரையோ காதலித்து, உடலுறவு வைத்துக் கொண்டு கர்ப்பமாக இருப்பதாகவும், தன்னை ஏமாற்றி திருமணம் செய்து கொண்டதாகவும் திகா மீது குற்றம் சுமத்தினான்.

கடைசியில் அந்த மகாபாவத்தை செய்தான் அவன்! ஆம்... அவளது ஆடைகளைக் களைந்து, புதுப்பெண் என்றும் பாராமல் அவளை படுக்கையில் கிடத்தி, திகா கற்புடையவளா? என்று சோதித்துப் பார்த்தான். இதனால் மனம் உடைந்த அவள்... கதறிக் கதறி அழுது கொண்டிருந்தாள். அவனோ... எதுவும் கூறாமல் அப்படியே படுத்து தூங்கினான். சில மணி நேரம் அழுது கொண்டிருந்தவள்... ஒரு முடிவுக்கு வந்தாள். தனது சேலையின் உதவியால் தூக்கில் தொங்கினாள் திகா! இதை அறியாத அந்தப் பாதகன் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தான்!



மறுநாள் காலை பெண்கள், அந்த அறையை தட்ட... எந்த 'ரியாக்ஷனும்' இல்லை. பல தடவை அழைத்தும் எந்தப் பதிலும் இல்லை. பின்னர் அனைவரும் சேர்ந்து அறையின் கதவை தள்ளி, திறந்து பார்த்தால் உள்ளாடைகள் மட்டுமே அணிந்தபடி தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள் திகா! பார்த்தவர்கள் அனைவரும் அலறினர். அருகில் படுக்கையில் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தான். விபுலை எழுப்ப... தூக்கில் தொங்கிய திகாவைப் பார்த்ததும் எதுவும் புரியாமல் விழித்தான் விபுல்.

வீடு சோகமயமாக மாறியது. பெண்கள் அழுது கதற... ஆண்களோ என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தனர். பின்னர் அனைவரும் விபுலை அடித்து உதைத்து அருகில் இருக்கும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பொலீஸார் நடத்திய விசாரணையில் விபுல், 'தாம் திகாவை கொலை செய்ய வில்லை என்றும், அவள் கற்புடைவளா என்பதை சோதித்து பார்த்ததாகவும், அவள் ஏற்கனவே கர்ப்பமாக இருந்ததாகவும், அதை சோதித்து பார்த்து அவளிடம் சொல்லி சண்டை போட்டதாகவும்' ஒப்புக் கொண்டான்.

விபுல் மீது கொலை முயற்சி வழக்கை பதிவு செய்தனர் பொலீஸார். தூக்கில் தொங்கிய திகாவின் உடலை மருத்துவர்கள் பிரேத பரிசோதனை நடத்திய தில் அவள் தூக்கில் தொங்கியது மட்டுமே உண்மை என அறிந்தனர். தற்போது நீதிமன்றில் வழக்கு நடந்து வரும் நிலையில், சிறையில் கம்பி எண்ணுகிறான் விபுல்.



சைஸ் ஜீரோ இடுப்பழகு காண்பித்தும் எடுபடாததால், முகூர்த்தத்துக்குத் திகதி குறித்துவிட்டார் ராணி முகர்ஜி. பாலிவுட்டின் பிரபல தயாரிப்பாளர் யாஷ் சோப்ராவின் மகன் ஆதித்யா சோப்ராதான் ராணியின் ராஜா. திருமணத்தை சாதாரணமாக நடத்த வேண்டும் என்பது ராணியின் விருப்பம்.

## ராணிமுகர்ஜி திருமணத்துக்கு ரெடி

'ஹரிபொட்டர்' புகழ் ஜே.கே.ரௌலிங் அரசியலில் அடியெடுத்துவைக்கிறார். இங்கிலாந்து நாடாளுமன்றத் தேர்தலில் தொழிலாளர் கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்துவருகிறார். கட்சி வெற்றியைக் குவித்தால், ரௌலிங்குக்கு முக்கியப் பதவி என வாக்களித்திருக்கிறாராம் கோடன் பிரவுண்.



## ஹரிபொட்டர் புகழ் ரௌலிங் அரசியலில்



''என்னங்க உங்க அம்மாவுக்கு பேய் பிடிச்சிருக்கு.....!''
''பொய் சொல்லாதே... எங்கள் அம்மாவுக்குத்தான் உன்னைப் பிடிக்காதே...!''

# தற்கொலை செய்ய நீதிமன்ற அனுமதி கேட்ட தம்பதி

ராஜஸ்தான் மாநிலம் பாரமர் என்ற இடத்தை சேர்ந்தவர் சேத்ராராம். இவரது மனைவி காமா. சேத்ரா ராமுக்கும் காமாவுக்கும் சில ஆண்டுகளக்கு முன்பு நிச்சயதார்த்தம் நடந்தது.

ஆனால் காமாவின் சகோதரர்கள் மற்றும் தாய்மாமன் ஆகியோர் காமாவை ரேகாராம் என்பவருக்கு கட்டாய திருமணம் செய்து வைத்துவிட்டனர். அவர்கள் ரேகாராமிடம் ரூ.5 லட்சம் பணம் வாங்கி கொண்டு அதற்கு பிரதிபலனாக காமாவை திருமணம் செய்து வைத்தனர்.


ஆனால் இந்தத் திருமணத்தை காமா விரும்ப வில்லை. இதனால் ரேகாராம் காமாவை வீட்டில் கட்டி போட்டு வைத்து இருந்தார். அடிக்கடி கற்பழிக்கவும் செய்தார்.

ஆனால் காமா அங்கிருந்து தப்பி வந்து ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட சேத்ரா ராம் வீட்டுக்கு சென்றார். பின்னர் இருவரும் வீட்டை விட்டு ஓடி திருமணம் செய்து கொண்டனர்.

இதுபற்றி ரேகாராம் ஊர் பஞ்சாயத்தில் புகார் செய்தார். அவர்கள் சேத்ரா ராமும் காமாவும் ரேகா ராமுக்கு ரூ.5 லட்சம் பணம் கொடுக்க வேண்டும். இல்லை என்றால் காமா சேத்ரா ராமை பரிந்து ரேகா ராமுடன் சேர்ந்து குடும்பம் நடத்த வேண்டும் இல்லை என்றால் இருவரும் கொல்லப்படுவார்கள் என்று தீர்ப்பு கூறினார்கள்.

இதையடுத்து இருவரும் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளனர். அதில், பஞ்சாயத்து தீர்ப்பால் எங்களால் வாழ முடியவில்லை. எனவே நாங்கள் தற்கொலை செய்ய விரும்புகிறோம். இதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டு உள்ளனர்.

இந்த நூதன வழக்கு நீதிபதி கவுரவ் கோயல் முன்பு விசாரணைக்கு வந்தது. அவர் இது தொடர்பாக பொலீஸ் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார். ★



## சிறுகதை

# மரண வாக்குமூலம்

ஏகாம்பரம் தினேஸ்

பத்திரிகைச் செய்தி -
**'முகாமில் துப்பாக்கிச் சூடு
இளம் பெண் ஸ்தலத்தில் பலி.
இளைஞன் படுகாயம்'**

எனது இரு கண்களும் மெதுவாகத் திறக்கின்றன. அவற்றில் தெளிவின்மை, உடல்முழுவதும் சோர்வு. இருப்பினும் சோர்வைத் தூக்கிப் போட்டவாறு எனது விழிகள் சற்றுச் சுறுசுறுப்படைய எட்டிய காட்சிகள் மூளையைத் தொடுகின்றன.

இமைத்திரைகள் விலகியதும் எனது புலன்களுக்கு எட்டியவர்கள் அந்த இரண்டு காக்கிச்சட்டைக்காரர்களும் தான். அவர்கள் எனக்காகக் காவலுக்கு வைக்கப்பட்டிருந்த பொலிஸ்காரர்களாகத்தான் இருக்க



வேண்டும். எனது உடலில் பல பாகங்களிலும் பன்டேச்சுக் கட்டுக்கள். எனது இடது கையின் மேலே நுழைவிட்டு அதனூடாக என்னுள்ளே சென்று கொண்டிருக்கும் சேலைன் துளிகள்.

தலையைச் சற்று அசைக்கிறேன். உடல் முழுதும் வலி. கைகளையும் அசைத்துப் பார்க்கிறேன், முடியவில்லை. வலது கையில் கட்டப்பட்ட மருந்துத் துணியினூடாக எட்டிப் பார்த்துக் களைத்துவிட்ட குருதிச் சாயம்.

'நான் யார்..? நான் இப்போது எங்கே இருக்கிறேன்? எனக்கு என்ன நடந்தது?' என்னை நானே கேட்டுக் கொள்ளும் கேள்விகள் என் மூளையைப் பிய்க்கின்றன.

எனது பெயர் சுரேஷ். நான் ஒரு அப்பாவித் தமிழன். முதல் வினாவின் விடையை எனது மூளை இலகுவாகப் புரிந்து கொண்டது. இரண்டாவது வினாவின் விடையைத் தேடி என் எண்ணங்கள் பயணிக்கின்றன.

நான் இப்போது உடல்வலியுடன் படுத்திருப்பது அரச மருத்துவமனை என்பதை நான் இருக்கும் இடத்தை வைத்து என்னால் உறுதியாக ஊகிக்க முடிகையில் எந்த மருத்துவமனை என்பதற்கான எந்தப் பார்வைத் தடயங்களும் என்னிடம் சிக்க மறுக்கின்றன.

அருகே இருக்கும் கட்டில்காரர்களின் சிங்கள, தமிழ்ப் பேச்சொலிகளை வைத்து இது வவுனியா ஆஸ்பத்திரியாகத்தான் இருக்க வேண்டும் என எண்ணுகிறேன்.

சரி நான் ஏன் இங்கு வந்தேன்? நான் இங்கு வருவதற்கான காரணம் என்ன? அதுவும் இத்தனை கொடிய காயங்களுடன்..? என் அருகே ஏன் இந்தப் பொலீஸ்காரர்கள்? அதுவும் எனக்குக் காவலாக....?

இந்த எண்ண அலைகளுக்குத் விடைபகர முடியாது எனது உள்ளம் ஒருகணம் எகிறிக்குதிக்க, உடலிலும் மனதிலும் பதற்றம் பற்றிக்கொள்ள எனது சிந்தனைகளில் சுமதி.

சுமதியின் எண்ணங்கள் எனது இதயத்தில் இறங்கிக் கொள்ள எனது மூளையை நோக்கிச்செல்லும் குருதிக் குழாய்கள் வெடித்துப் பிளப்பது போன்ற பிரக்ஜை. அந்த உணர்வுகள் என்னைக் கட்டிலினின்றும் எழவைக்க இப்போது எனது கைகள் வலியைப் பொருட்படுத்தாமல் அசைகின்றன. சுமதியின் எண்ணங்களினால் எனது உடல்கூட ஒருகணம் சூடேறி அசைகிறது. உடலில் மிச்சமிருந்த கொஞ்சக் குருதியும் கொப்புளித்துப் பாய எனது மூளை மீண்டும் கண்களை இருட்டிவிக்கிறது. இப்போது என்னால் எதுவுமே முடியவில்லை. சிந்தனைச் சிறகுகள் சுமதியை அணைத்தபடி பறக்க ஆரம்பிக்க, எனது மனம் ஓலமொன்று கத்தியபடி ஆரம்பிக்கிறது. நான் விம்முகின்ற இடைவெளிகளில் என் சுமதி என்னுள்ளே புகுந்து என்னை அந்தநாள் நினைவுகளில் இட்டுச்செல்கிறாள்.

****

அப்போது நான் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். சாதாரண தரம் முடிந்து உயர்தர வகுப்புகள் ஆரம்பித்தன. சுமதி தான் கல்வி கற்ற பாடசாலையில் உயர்தர வகுப்புகள் இல்லாத காரணத்தினால் எனது கல்லூரிக்குப் புதுமுக மாணவியாக வந்திருந்தாள். அப்போது தான் அவள் எனக்கு அறிமுகம். வர்த்தகத்துறையில் காலடிவைத்திருந்த எனது கண்கள் நிறைந்த பல்கலைக்கழகக் கனவுகள். அந்தக் கனவுகளை ஊடறுத்து சுமதியின் பேரழகு காதல் எண்ணங்களைப் பொழிந்து என் இதயத்தைத் துளைசெய்தது.

சுமதி கறுப்பி தான் என்றாலும் கறுப்பென்றாலும் 'கன்டோசு' என்று சொல்லும் அளவிற்கு கருமைக்கே பெருமை சேர்க்கும் மேனியாள். அவளது முத்துப்பல், சிரிப்பு என் நரம்பு மண்டலப் முறுக்குகளின் முடிச்சுகளை அவிழ்த்துப் போட்டு என்னுள்ளே உசுப்பேற்றிக் கொண்டிருந்தது. சுமதி என் கண்களிலே மின்னலாகவும் இதயத்திலே இடியாகவும் வெடித்துக் கொண்டிருந்த நாட்கள் அவை.

பொருளியலில் அவள் புலி. கணக்கியலில் நான் புலி. இவ்விரண்டு புலிகளுக்கும் பிடித்த பாடம் வியாபாரக் கல்வி. அந்த நாட்கள் அவள் மீது எனக்கு ஓர் ஈர்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. என் மீது அவளுக்கு ஏதாவது ஏற்படாதா என்ற ஏக்கங்கள் என்னை எங்கோ தொலைத்துக் கொண்டிருந்தன. இருப்பினும் நட்பு நலமுடன் தொடர படிப்பு பல்கலைக்கழகம் நோக்கி ஏ.எல் இரண்டாயிரத்து ஒன்பது என்ற நீண்ட வண்டியிலே ஆயிரக்கணக்கான மாணவர்களுடன் பயணித்துக் கொண்டிருந்தது.

மறுபுறம் இறுதியுத்தம் என்ற சாபக்கேடு எங்களது குலத்தைத் துவசம் செய்யும் நோக்கிலே தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருந்தது. மாவிலாற்றில் ஆரம்பித்த மரணப் பொறி மாத்தளன் வரை நீடிக்கும் என நாங்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. அதுவே எமது வாழ்க்கையில் மண் அள்ளிப்போடும் என எங்களில் யாருக்குமே அப்போது தெரிந்திருக்கவுமில்லை.

எங்களது ஏரோடும் பூமியில் கொடியகுண்டுகள் துளை செய்ய ஆரம்பித்தன. பாடசாலைகள் இழுத்து மூடப்பட நாங்களும் இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. எங்களது எதிர்காலக் கனவுகளில் கிளைமோர்க் குண்டுகள் நேரம் பார்த்து வெடித்துக் கொண்டிருந்தன.

ஒரு வருட கால நட்பு யுத்தத்தினால் இடம்பெயர்ந்து செல்ல நானும் சுமதியும் ஒருவரை ஒருவர் அதன் பின்னர் சந்தித்துக் கொள்ளவில்லை. ஆனால் அவளின் ஏக்கங்கள் என் மனதில் இடிஇடித்து ஒருதலைக் காதல் அடைமழையாய் என் உள்ளத்தின் பள்ளமெல்லாம் உணர்வு கொடுத்து நிரப்பிக் கொண்டேயிருந்தது.

அதன் பின்னர் ஆறு மாதங்கள் கடந்த நிலையில் மீண்டும் என் கண்முன்னே சுமதி. அது இடப்பெயர்வின் இறுதிக்கட்டப் பெயர்வு. சுமதியின் கயல்கண்கள் குழிவிழுந்து உள்ளே சென்றிருக்க, அவள் கலகலப்பின்றி சோகம் தோய்ந்து வாடியிருந்தாள். இத்தனைக்கும் அவள் தனிமையில் நின்றவாறு தவித்துக் கொண்டிருந்தாள். அவள் தனது குடும்பத்தினர் அனைவரையுமே கொத்துக் குண்டுகளுக்குப் பலியாக்கிருந்த கொடுமையை அவள் வாயாலேயே கேட்டபோது எனது குடும்பத்தில் இருவரை இழந்திருந்த சோகத்தை எனக்குள் ஒருகணம் இரட்டிப்பாக்கியது.

அம்மாவின் அனுமதியோடு சுமதியையும் அழைத்துக் கொண்டு தங்கை பிரியாவுடன் வவுனியா முகாம் வந்து சேர்ந்தோம். உறவுகளைப் பிரிந்த சோகத்திலே ஒடிந்து போயிருந்த சுமதிக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது எங்களது குடும்பம் தான்.

சூரியனின் முழுவெப்பத்தையும் உறிஞ்சி எடுத்து உஷ்ணமிக்கும் தறப்பாள் கொட்டகைக்குள் நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்தோம். அரை வயிறுக் கஞ்சி எங்களின் எரிந்து கொண்டிருந்த வயிறுகளை ஓரளவு குளிரவைத்தது. இருப்பினும் நாங்கள் ஏன் வாழ்கிறோம் என்ற கேள்வி எங்களை அடிக்கொருமுறை துடிக்கவைத்துக் கொண்டிருந்தது. எங்களையும் இறைவன் ஏற்றுக் கொள்ளும் நன்னாள் பொன்னாளே என்று எமது ஊமை நெஞ்சம் மௌனமாய் அழுது கொண்டிருந்த நாட்கள் அவை.

அன்று ஒரு நாள் இரவு எட்டு மணி. சுமதி இயற்கைக் கடன் கழிப்பதற்காக வெளியே சென்றிருந்தாள். வழமையாக அம்மாதான் அவளுடன் கூடச் செல்லுவா. ஆனால் அன்று அம்மாவுக்கு காய்ச்சல் அனல் கக்கிக் கொண்டிருக்க, பிரியா தூங்கிக் கொண்டிருக்க சுமதி தனியே வெளியே சென்றாள். எங்களைக் கடவுளும் கைவிட்டு விட்டானே என ஏங்கியபடி நான் எனக்குள் புலம்பிக் கொண்டு படுத்திருந்தேன்.

வெளியே சென்ற சுமதியை நேரம் கடந்தும் காணவில்லையே என எனது மனம் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது. அவளைப் பார்த்து வருமாறு எனது உணர்வுகள் கால்களுக்குக் கட்டளை போட்டுக் கொண்டிருந்தன. எனது பாதங்கள் சுமதியைப் பார்த்து வருவதற்காக நடக்க ஆரம்பித்தன.

சுமதி சென்ற திசையில் அவளைக் காணாது என் கண்கள் புலம்ப கால்கள் பதற்றத்துடன் மீண்டும் நடக்க ஆரம்பித்தன. அங்கே ஒரு மறைவுப் பகுதியில் ஒரு பெண் அலறும் சத்தம் கேட்டு என் இதயம் படபடத்தது. எச்சரிக்கையுடன் அந்த இடத்தை அண்மித்தேன். அவலக் குரல் கேட்டு அருகிலிருந்த கூடாரங்களில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்குகள் அணைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

எட்டிப் பார்த்தேன் என் ஈரக்குலை அதிர்ந்தது. அங்கே சுமதி. அவளைச் சுற்றி நால்வர். அவர்கள் அதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருப்பதைப் போல் எனக்குத் தோன்றியது. 'என்னை விடுங்கோ! என்னை விடுங்கோ!' என் சுமதி பயத்தில் அலறிக் கொண்டிருந்தாள்.

அந்தக் கோரக் காட்சியை மங்கலிருட்டில் மறைவில் நின்று பார்த்த என் கண்கள் இருண்டு கொண்டிருந்தன. என்றுமில்லாதவாறு எனது கைகள் பதறின. எனது தலையில் இடி விழ எனது மூளைவிறைத்துக் குருதியோட்டம் ஒரு கணம் நின்று கொண்டது. என்னையறியாமல் எனக்குள் ஏதோ ஒரு சக்தி ஊடுருவி என்னை மிகவும் பலசாலியாக்கியது........

இப்பொழுது மருத்துவமனையில் இத்தனை காயங்களுடன் உயிரைத் தாங்கியபடி படுத்திருக்கிறேன். என்னைச் சுற்றிப் பொலீஸ்காரர்கள் காவலிற்கு இருக்க. தீவிர கண்காணிப்பில் நான்.

நான் ஒரு கணம் விழித்துக் கொண்டதை அவர்கள் நிச்சயம் அவதானித்திருப்பார்கள். இச்செய்தி வைத்தியர்களின் காதுகளை எட்ட எல்லோரும் இணைந்து விசாரணை என்ற பெயரில் மீண்டும் என்னை...... இனி எத்தனை தடவை என்னை விசாரித்தாலும் நான் சொல்லப் போகும் ஒரே வார்த்தை 'தெரியாது' என்பது தான். அதற்காக நான் பயப்படவில்லை. நான் கவலைப்படுவது எல்லாமே என் சுமதி பற்றித்தான்.

இல்லை! சுமதிக்கு ஒன்றும் ஆகியிருக்காது. எத்தனை பெரிய ஆபத்திலிருந்து அவளை நான் காப்பாற்றியிருக்கிறேன். சுமதி, என் ஆருயிர் அம்மா, தங்கை பிரியா எல்லோரும் நிச்சயம் என்னைப் பார்ப்பதற்காக வருவார்கள் என்ற நம்பிக்கையில் நான் தொடர்ந்தும் என் கண்களை மூடிக் கொண்டே தான் இருப்பேன்.

'நான் சுமதியைத் தேடிச் சென்றேன். அவளைச் சிலர் மானபங்கப் படுத்துவதற்கு முயன்று கொண்டிருந்தனர். அந்தக் கோரக் காட்சியை மங்கலிருட்டில் பார்த்த எனது கண்கள் இருண்டன. என்றுமில்லாதவாறு எனது கைகள் பதறின. எனது தலையில் இடி விழ எனது மூளை விறைத்துக் குருதியோட்டம் ஒரு கணம் நின்று கொண்டது. என்னை அறியாமல் எனக்குள் ஏதோ ஒரு சக்தி ஊடுருவி என்னை மிகவும் பலசாலியாக்கியது....

காப்பாற்றுவதற்காக அந்தக் கூட்டத்தை நோக்கி ஓடிச்சென்றேன். அங்கிருந்த ஒருவனது துப்பாக்கியைப் பறித்தேன்... கணப்பொழுதில் என் விரல்கள் இயங்க ஆரம்பித்தன. வேட்டுச் சத்தங்கள் விண்ணைப் பிளந்தன. அந்த நால்வரும் ஒருவர் பின் ஒருவராக நிலத்திலே வீழ்ந்தனர்.

சுமதியைக் கூடாரத்தை நோக்கி தப்பி ஓடச் சொன்னேன். அவளுக்குப் பின்னால் நானும் ஓட ஆரம்பித்தேன். குற்றுயிராய்க் கிடந்த ஒருவனது துப்பாக்கி என்னை நோக்கி குறிபார்ப்பது கூட அறியாமல் ஓடிக்கொண்டிருந்தேன். நிச்சயம் அவனது தோட்டாக்கள் தான் என்னைப் பதம்பார்த்திருக்க வேண்டும்...''

இதை நான் யார் கேட்டாலும் கூற மாட்டேன். தலையில் பலமாக அடிபட்டதால் பழைய நினைவுகள் அற்றுப்போய் விட்டன என அவர்களாகவே முடிவெடுக்கும் வரை வாக்குமூலம் கொடுப்பது என்ற பேச்சுக்கே இனி இடமில்லை.

எதிர்காலத்தில் நான் சுமதியை மணம் முடித்து அவளுடன் புதிய வாழ்க்கையொன்றை ஆரம்பிக்கப் போகும் கனவுகளோடு - என் நாடித்துடிப்பு அறியாத பாவியாக கட்டிலில் அசைவற்றுக் கிடக்கிறேன்.

- முற்றும் -

# வடமாகாண இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

கார்கில்ஸ் (சிலோன்) பி.எவ்.சி ஆனது இலங்கையில் ஒன்றுபட்ட பிரஜைகளைக் கொண்ட பொறுப்புள்ள ஒரு சமூகஸ்தாபனம்.
பல்வேறுபட்ட வகையிலான பொறுப்புக்களை அது கையாள்கின்றது.
விவசாயம், பசுவளர்ப்பு, கால்நடைவளர்ப்பு மற்றும் FMCG துறைகளில் தமக்குள்ள நிபுணத்துவத்தைக் கொண்டு இலங்கையில் நாம் பணியாற்ற முயல்கின்றோம்.
சமூகத்தில் நட்பு ரீதியிலான தேசிய அபிவிருந்தியில் உலகளாவிய முன்மாதிரியாகத் திகழ்வதை எமது குறிக்கோளாகக் கருதுகின்றோம்.
எமது தொழில் மூலமான வருமானத்தை நாட்டின் மூலைமுடக்குகளுக்கெல்லாம் கொண்டு சென்று அதன் மூலம் உள்ளூர் மட்டத்தில் நிலையான வளர்ச்சிக்கான கருவியாக விளங்க விரும்புகின்றோம்.
ஊக்கம், அர்ப்பணிப்பு மற்றும் புதுமை செய்யும் மனப்பான்மை கொண்ட இளைஞர்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.
சவால் விடுக்கும் மற்றும் துரிதமாக மாற்றமடைந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் பணியாற்றுவதில் மகிழ்ச்சியடையும் இளைஞர்களாக இந்த குறிக்கோளை சாத்தியமாக்க இணைந்து செயல்பட அழைக்கின்றோம்.



## முகாமைத்துவ பயிலுனர்கள்

• தெரிவு செய்யப்படும் பயிலுனர்கள் ஆங்கிலத்தில் விரிவானதொரு பயிற்சிக்குட்படுத்தப்படுவார்கள். • இது மூன்று மாத கால வாடிக்கையாளர் சேவை தொடர்பான சான்றிதழ் திட்டமும் உணவு சந்தைப்படுத்தலில் 18 மாத டிப்ளோமா திட்டமும் அடங்கும். • தெரிவு செய்யப்படுவதற்கு, விவசாயம், அறிவியல், வியாபார முகாமைத்துவம், வர்த்தகம், கணக்கியல், பொருளியல், விருந்தோம்பல், முகாமைத்துவம் அல்லது சந்தைப்படுத்தல் போன்ற ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் / அல்லது தொழில்சார் தகைமை (முழுதும்/பகுதி) 2-3 வருட அனுபவம். • விற்பனை சந்தைப்படுத்தலில் பட்டம் அல்லது அதற்கு ஈடான தகுதி பெற்றிருக்க வேண்டும். • 28 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.



## வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள் /சேவை உதவியாளர்கள்

தகுதிகள்

- 18-24 இடைப்பட்ட வயதினராய் இருத்தல்.
- க.பொ.த (சா/த) ஆங்கிலம், கணக்கியலில் சித்தி.
- ஆங்கிலத்தில் உரையாடும் திறமை.
- கவர்ச்சியான ஆளுமை.
- நேர சூசிகையின்படி வேலைசெய்ய விருப்பம்.
- வார இறுதிநாட்களில் பணியாற்ற சம்மதம்.
- ஆண் பெண் இருபாலாரும்.

## மருந்து கலவையாளர்கள் (நிறைவேற்றதிகாரிகள் மட்டம்)



- தகுதிபெற்ற மருந்து கலவையாளரின் இலங்கை மருத்துவ சபையில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
- மருந்து கலவையில் 2 வருட அனுபவம்.
- ஆங்கிலத்தில் எழுதவும், பேசவும் திறமை, வாடிக்கையாளர் உறவினைப் பேணுவதில் விருப்பம்.
- இந்தப் பதவி ஒரு கவர்ச்சிகரமான கொடுப்பனவுகளை கொண்டிருக்கிறது. தாராளமான தொழில்சார் கொடுப்பனவும் உண்டு. இது தொழில் தரங்களுக்கும் அதிகமாக அமையும்.

## KFC குழு உறுப்பினர்



- 18-24 இடைப்பட்ட வயதினராய் இருத்தல்
- க.பொ.த (சா/த) ஆங்கிலம் மற்றும் கணக்கியலில் சித்தி
- ஆங்கிலத்தில் உரையாடும் திறமை
- நேரசூசியின்படி பணியாற்ற விருப்பம்
- வார இறுதி நாட்களில் பணியாற்ற சம்மதம்

## மருந்தக உதவியாளர்கள்

- மருந்து கலவையாளர் பரீட்சைக்குத் தோற்றுவதாக இலங்கை மருத்துவக் கல்லூரியில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
- மருந்தக உதவியாளராகக் குறைந்தது ஒருவருட அனுபவம்.
- ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் எழுதவும் தெரிந்திருத்தல்
- நேர சூசிகையின்படி வேலை செய்ய விருப்பம்

**விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க, மேல் மூலையில் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு உங்கள் விபரத்தை 2010, மே 23 ஆம் திகதிக்குமுன் உங்கள் தொலைபேசி தொடர்பு இலக்கத்துடன் அனுப்புக.**

CARGILLS (CEYLON) PLC
மனிதவள அதிகாரி
கார்கில்ஸ் (சிலோன்) பிஎல்சி
இல. 40 யோர்க் வீதி கொழும்பு 01.
தொ. 2427500 மின்னஞ்சல் jobs@cargillsceylon.com

# ஆரோக்கியமான உள்ளத்தை நோக்கி!




**-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-**

பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும் தங்கள் கவனிப்பில் உள்ள பிள்ளைகளுக்கு பல நன்மைகளைச் செய்கிறார்கள். இதனால் குழந்தைகள் வளர்ந்து ஆளாகிய பின்னரும் பெற்றோர்களுக்கும் தங்களைப் பராமரிப்பவர்களுக்கும் பணிந்து நடந்திட வேண்டும். இது அவர்களின் கடமையும் பெற்றோருக்கும் பாதுகாவலருக்கும் உள்ள உரிமையுமாகும்.

ஆனால், பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தவறானவற்றைக் கோருவார்களேயானால், குழந்தைகள் நீதிக்கும் நேர்மைக்கும் எதிராக நடந்திட வேண்டும் என எதிர்பார்ப்பார்களேயானால், குழந்தைகள் கீழ்ப்படிய மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, கீழ்ப்படியவும் கூடாது.

பிள்ளைகள் பெற்றோர்களைக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றவும் கூடாது. அதேபோல் காரணமின்றி கீழ்படிந்திருக்கவும் கூடாது.

பெற்றோர்களால் சம்பாதிக்க முடியாத நேரத்தில் பிள்ளைகளுக்கு அவர்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்புண்டு.

குடும்ப வாழ்வின் ஏனைய பகுதிகள்

நமது குடும்பத்தோடு இணைந்த ஏனைய உறுப்பினர்கள், உற்றார் உறவினர், இனசனத்தார், நண்பர்கள், நம்மை அடுத்து வாழும் வீட்டார்கள், நம்மிடம் வேலை செய்பவர்கள், நாம் தொடர்பு வைத்திருப்பவர்கள், நமக்கு எந்த வகையிலும் உதவுபவர்கள், உபத்திரம் செய்பவர்கள் இவர்களுடன் அமைத்துக் கொள்ள வேண்டிய உறவின் முறையும் குடும்ப வாழ்க்கையோடு தொடர்புபட்டதே. இது பற்றி விரிவாக நாம் தொடர்வாரங்களில் காண்போம்.

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள்
தொடர்பான கேள்விகளுக்குப்
பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

# அகதி முகாமில் கஷ்டப்பட்டவர்களின் நிலையைவிட உயர்வானதே உங்கள் நிலை!

**கேள்வி: நான் பொதுப் பணிகளில் ஈடுபாடு கொண்ட ஒருவர். எனது ஆதங்கம் என்னவென்றால், சமூகத்தில் உள்ள பலர் ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதற்கேற்ப நடந்து கொள்வதில்லையே! மற்றவர்களின் துன்பங்களை கண்டும் காணாதவர்கள் போல் நடந்து கொள்கின்றார்களே! இது ஏன்?**

பதில்: உலக ஒழுங்கமைப்பில் எப்பொழுதும் நீங்கள் பார்க்கலாம் நல்லதும் கெட்டதும், ஒத்துப் போகக் கூடியதும் ஒத்துப் போக முடியாததும், சாதகமானதும் பாதகமானதும் என எதனை நீங்கள் எடுத்துக் கொண்டாலும் இரு வேறுபட்ட எதிரும் புதிருமான நிலைபாடுகள் இருந்து கொண்டே இருக்கும். இது நியதி.

இந்த அடிப்படையில்தான் சமூகத்தில் ஒரு சாரார் தானுண்டு தன்பாடுண்டு என்ற நிலையில் மற்றவர்களை ஏறெடுத்தும் பார்க்காது வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அதே வேளை, இவர்கள் அப்படி இருப்பதால்தான் உங்களைப் போன்றவர்களின் பரோபகாரமும் சேவையும் ஆதரவற்றோருக்கு அவசியம் தேவைப்படுகின்றன.

எனவே மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு மனமிரங்காத ஒரு சாரார் இருப்பதால்தான் உங்களைப் போன்றவர்களின் சேவை மனப்பான்மை சமூகத்தில் ஏற்படுகிறது. தொடர்ந்து பணியாற்றுங்கள் உங்களைப் போன்று இன்னும் நாலுபேர் சமூகத்தில் உருவாவார்கள்!

**கேள்வி: நான் 5 பிள்ளைகளின் தாய். 4 பேர் பெண்கள். ஒரேயொரு ஆண் மகன். இவன் தான் பெண் மக்களைக் கரைசேர்ப்பான் எனப் பெரும் எதிர்பார்ப்போடு நம்பியிருந்தோம். ஆனால், அவன் தனக்கு 20 வயதாகும் போது எவருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் ஒருத்தியைக் கைப்பிடித்துக் கொண்டு ஓடிவிட்டான். இத்தனைக்கும் மத்தியில் அவனை மிக்க ஆதரவோடு மற்றவர்களுக்குக் கொடுக்காத பாசம் காட்டித்தான் நான் வளர்த்தேன். அவன் இப்படிச் செய்ததனால் என் மனம் அவனைக் கடுமையாக வெறுக்கின்றது. அவனது தொடர்புகளை அடியோடு துண்டித்துவிட்டேன். சொல்லப் போனால் அவனை என் பிள்ளை என்று சொல்லவே மனம் கூசுகின்றது. பாசம் காட்டி வளர்த்த சொந்தப் பிள்ளைகளே ஏன் இப்படித் துரோகம் செய்கின்றார்கள்?**

பதில்: உங்களது நீண்ட கடிதத்திலேயே இதற்கான பதிலும் உள்ளடங்கியிருக்கிறது. அதாவது கடந்த காலத்தில் இடம்பெற்ற ஆயுத வன்முறைகளின் போது பலர் தமது அன்புக்குரிய உறவுகளை அநியாயமாகப் பலிகொடுத்து விட்டு இன்று அவஸ்தைப் படுகின்றனர்.

நாம் எத்தனையோ கனவுகளோடு வளர்த்த இளம்பிள்ளைகள் ஆயுதக் கலாசாரத்துக்குள் சிக்கிவிடக்கூடாது என்பதற்காக அவர்களது படிப்பையும் இடைநிறுத்திவிட்டு அவர்கள் எப்படியாவது கண்முன்னே உயிர்வாழ்ந்தாலே போதும் என்று நினைத்து அவசர அவசரமாகத் திருமணம் முடித்துக் கொடுத்ததை நீங்களே சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். அதேவேளை உங்கள் குடும்பத்திற்கு எந்தவித உயிரிழப்பும் நேர்ந்துவிடவில்லை. என்றும் நல்ல சொத்து சுகங்களோடு வாழ்வதாகவும் குறிப்பிட்டிருக்கின்றீர்கள்.

குடும்ப உறுப்பினர்கள் பலரை இழந்து, சொத்து சுகம், வீடு வாசல், நிம்மதி எல்லாவற்றையும் இழந்து இன்று நிர்க்கதியாகி அகதி முகாம்களில் வாழும் மக்களின் அவத்தை வாழ்வைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் உங்களின் பிரச்சினை ஒரு தூசுதான்.

எப்பொழுதாகிலும் உங்கள் மகன் திருமணம் முடித்துத்தானே ஆகவேண்டும். தொந்தரவில்லாத ஒரு குடும்பத்தில்தான் அவன் திருமணம் முடித்திருப்பதாகக் கூறும் நீங்கள் அதற்காகப் பெருமைப்பட்டுக் கொண்டு அரவணைத்து வாழப்பாருங்கள்.

**கேள்வி: நான் ஒரு பொதுநலவாதி. சமூகப் பிரச்சினைகளில் இருந்து பலர் ஒதுங்கி நிற்பதற்கு என்ன காரணம்?**

பதில்: இங்குள்ள முதலாவது கேள்வியும் பதிலும் உங்களது கேள்விக்கும் சற்று பொருந்திப் போகும்.

நாட்டில் இடம்பெற்ற ஆயுத வன்முறைகளும், அழிவு நாச வேலைகளும் பலரை சமூகத்திலிருந்து ஒதுங்க வழி வகுத்தன. பலர் நமக்கேன் வீண்வம்பு என்று ஒதுங்கிக் கொள்ள நேரிட்டது. நல்லதைச் செய்த பலர் நாசகாரர்களினால் அடக்கி ஒடுக்கப்பட்டு விட்டார்கள். எனினும் அழிவு நாச சிந்தனைகள் ஒரு போதும் சமூகத்தில் நீடித்து நிலைப்பதில்லை. நன்மைக்குப் பதிலாக நற் கூலிதானே கிடைக்கும்! நன்மையும் தீமையும் ஒருபோதும் சமமாக மாட்டா.

**கேள்வி: சமுதாயத்தில் வழிகாட்டிகளாக இருக்க வேண்டிய ஆசிரியர்கள் சிலர் பிழையான முன்னுதாரணங்களாக இருக்கின்றார்களே! இது ஏன்?**

பதில்: ஆசிரியர்கள் என்போர் 'மாதா பிதா குரு தெய்வம்' என்ற ஒழுங்கில் இடம்பெறும் முக்கியமானவர்கள்.

சமூகத்தில் இவர்களது வகிபாகம் அல்லது பங்கேற்பு பாத்திரம் மிகவும் முக்கியமானது. இவர்களது ஒவ்வொரு அசைவும் மிக்க படிப்பினைக்குரியதாக அமைய வேண்டும். ஆனால், இப்போதுள்ள பெரும்பாலான ஆசிரியர்களிடம் இத்தகைய உயர் விழுமியங்கள் இல்லை என்பது ஒரு குற்றச்சாட்டும் குறைபாடுமாகும்.

வருமானத்திற்காக, தொழில் பாதுகாப்பிற்காக, கௌரவத்திற்காக, சேவைக்காக, தொழிலுக்காக, அரசியலுக்காக என்றெல்லாம் பல்வேறு காரணங்களுக்காக ஆசிரியர் நியமனத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இன்றும் சேவையும் தியாகமும் உள்ள பலர் கண்ணியவான்களாக ஆசிரியத் தொழிலில் உள்ளார்கள்.

கடந்த பொதுத் தேர்தலின் போது அரசியல் மேடைகளில் எத்தனை ஆசிரியர்கள் பணத்துக்காக கூலிக்கு மாரடித்து எதிரணியினரை வம்புக்கு இழுத்தார்கள் என்பது தெரியும். இவர்களையெல்லாம் எப்படி இளம் சமுதாயம் வழிகாட்டிகளாகப் பின்பற்ற முடியும்?

**கேள்வி: நான் நாட்டு நிலைமை காரணமாக இலங்கையிலிருந்து வெளியேறி கடந்த 12 வருடங்களாக சுவிஸ் நாட்டில் வசித்து வருகின்றேன். இங்கு நானும் எனது கணவரும் சிரமப்பட்டு உழைத்து நமது நாட்டுப் பெறுமதிப்படி சுமார் 2 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்களாக மட்டக்களப்பில் வீடும் காணியும் வாங்கினோம்.**

**அந்தச் சொத்துக்களைப் பராமரிக்கும் பொறுப்பை எனது அக்காளின் கணவரிடம் ஒப்படைத்தேன். அவர் இலங்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராக இருந்தவர். அவர் மருத்துவத்துறை மேற்படிப்புக்காக லண்டன் செல்ல விரும்பியதால் அதற்காக 40 லட்சம் ரூபாவும் கொடுத்தோம். அதற்கும் மேலதிகமாக அவரை சுவிஸ் நாட்டுக்கும் எமது செலவில் அழைப்பித்து சுமார் மூன்று மாதம் பராமரித்தோம்.**

**எமது எல்லாச் சுகபோகங்களையும் அனுபவித்துக் கொண்ட அவர் கடைசியில் எமக்கு துரோகம் செய்துவிட்டார். நாம் பராமரிப்பதற்காகப் பொறுப்புக் கொடுத்த எமது வீட்டையும் காணியையும் விற்று காசையெல்லாம் அபகரித்துக் கொண்டு நாட்டிலிருந்தும் வெளியேறி லண்டனில் கொஞ்சக் காலம் உல்லாசமாக இருந்துவிட்டு இப்போது கடந்த நவம்பர் மாதம் மீண்டும் இலங்கை திரும்பியுள்ளார். எமது வீட்டையும் காணியையும் விற்ற பணத்தை, யாரோ ஆயுத முனையில் கொள்ளையடித்து விட்டதாகச் சொன்னார்.**

**இத்தகைய துரோகச் செயல் புரியும் நன்றி கெட்டவர்களுக்கான தண்டனை என்ன? மனிதர்களை நம்புவது தவறா? இப்படிப்பட்ட சமூக விரோதிகளை என்ன செய்ய வேண்டும்?**

பதில்: 'நம்ப நட நம்பி நடவாதே' 'கழுத்துக் கொடுத்தாலும் எடுத்துக் கொடுக்காதே' என்று சில அறிவுரைகள் உள்ளன. எது எப்படி இருந்தாலும் மனிதர்கள் மாறு செய்யக் கூடியவர்கள் என்பது பொதுவாகக் கண்டறியப்பட்ட உண்மைகள். படைத்துப் பரிபாலிக்கும் இறைவனுக்கே நன்றி செலுத்த மறுக்கும் இழி குணம் மனிதரிடம் உள்ளது.

எது எப்படி இருந்தாலும் மூன்று விடயங்களில் நீங்கள் குறிப்பிட்ட நபரை நம்பியிருக்கிறீர்கள். உறவினராக இருந்தாலும் நண்பன் என்றாலும் நம்பத்தகுந்தவர் என்பதால் நீங்கள் அவருக்கு உதவி ஒத்தாசை புரிந்ததோடு, உங்கள் சொத்துக்களை அதனை அனுபவிக்கும் உரிமையை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்.

ஆனால், மனிதர்களில் ஒரு சிலரிடம் காணப்படும் நயவஞ்சகத் தன்மை ஒட்டு மொத்தமாகவே மனிதர்களை நம்பமுடியாதளவுக்கு சந்தேகத்தை ஏற்படுத்திவிடுகிறது.

அந்த வகையில் உங்களது உறவினரும் நயவஞ்சகத்தனமாக நடந்திருக்கிறார். ஒருத்தரின் கலங்கமற்ற மனத்தை ஏமாற்றுவதென்பது பாதகமான செயல். இப்படிப்பட்ட ஏமாற்றுப் பேர் வழிகள் ஒருகாலும் நிம்மதியாக வாழமுடியாது. அவர்கள் அபகரித்துத் தேடிய தேட்டங்கள் மூலம் தற்காலிகமான சுகபோகத்தையே அனுபவிக்க முடியும். மற்றபடி அவர்கள் அநியாயமாகத் தேடிய தேட்டங்கள், அவர்கள் அனுபவித்த சுக போகம், நிம்மதி என்பன சீர்குலைந்து போவதோடு சமூக அந்தஸ்தும் கிடைக்காது. இவர்கள் அற்ப சொற்ப சுகபோகங்களுக்கு மனசாட்சி எனும் பெரிய நீதியைக் கொலை செய்து தங்களுக்கு தாங்களே தீங்கிழைத்துக் கொண்டவர்கள்.

இப்படிப்பட்ட ஆசாமிகள் மனிதர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுப் போகலாம். ஆனால், இறைவனின் தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளவே முடியாது. நிச்சயமாக இறை தீர்ப்பு என்பது எந்த வடிவத்திலும் வந்துசேரும்.

மனிதர்களை நம்புவது தவறா என்ற உங்கள் ஆதங்கத்திற்கு மனிதர்களை நம்புவது தவறல்ல. ஆனால், நாம் செய்யும் நல்ல காரியங்களுக்கு நான்கு சாட்சிகளை வைத்துக் கொள்வது நல்லது. நல்ல காரியங்களை நாலு பேருக்கு தெரியப்படுத்திச் செய்யலாம்.

குறித்த மோசடிக்காரர் மீது நீங்கள் சட்ட நடவடிக்கை எடுக்க விரும்பினால் மோசடி செய்தமைக்கான தகுந்த ஆதாரங்களை காண்பித்து நீதி விசாரணைக்கு உட்படுத்தலாம்.

உங்கள் சொத்து நேர்மையான வழியில் தேடப்பட்டதென்றால் எப்படியும் உங்களுக்கு இறைவனருளால் திரும்பக்கிடைக்கும்.

**பலரின் வேண்டுகோளுக்கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.**

# குடும்பத்தில் ஏற்படும் தேவையில்லா பிரச்சினைகளை சமாளிக்க...





'பிரச்சினை இல்லாமல் மனிதனும் இல்லை. பிரச்சினை இல்லாதவன் மனிதனே இல்லை' என்று கூறுவார்கள். அந்தளவிற்கு எங்கும் எவ்விடத்திலும் பிரச்சினை தான். வெளிப்பிரச்சினைகளை பேசித்தீர்த்துக் கொள்ளலாம்.

அதுவே அளவுக்கதிகமாகும் போது பிரச்சினைக்குரிய நபரையோ பிரச்சினையையோ தவிர்த்து விடலாம். ஆனால் பிரச்சினை குடும்பத்தில் ஏற்படும் போது தான் தொடங்குகிறது தலைவலி. காதலித்துத் திருமணம் முடித்தவர்களாகட்டும் பெற்றோர்களால் நிச்சயித்து திருமணம் முடித்தவர்களாகட்டும் பிரச்சினை இல்லாமல் வாழ்நாள் முழுவதும் வாழ்வார்களேயானால் அது கின்னஸ்ஸில் பதிய வேண்டிய சாதனை தான்.

''இல்லவே இல்லை நாங்கள் இதுநாள் வரைக்கும் எந்த சண்டையும் இல்லாமல் வாழ்ந்து வருகின்றோம்'' எனக் கூறும் சில தம்பதியினரும் உள்ளனர். மறுப்பதற்கில்லை. ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் வாழ்பவர்களாக இருப்பார்கள். ஒருவர் கோபப்படும் போது மற்றவர் அமைதியாக இருப்பதனாலேயே குடும்பச் சமநிலை பேணப்படுகிறது.

இதற்குப் புரிந்துணர்வு மிக முக்கியமானதாகும். 'ஒருவரின் சுதந்திரம் மற்றவரின் மூக்கு நுனிவரை' எனக் கூறுவார்கள். தனிநபரின் சுதந்திரத்திற்கு எவ்வகையிலும் பங்கம் வரும்போது கோபமும் கூட வருகின்றது. இருபாலாருக்கும் கோபம் ஏற்பட்டாலும் ஒப்பீட்டளவில் ஆண்கள் அதிகம் கோபப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இதுவே நமது சமூகத்தில் குடும்பத்தில் நிகழும் போது கணவன் அதிகம் கோபப்படும் சந்தர்ப்பத்தில் மனைவி அனுசரித்துப் போக வேண்டிய கட்டாயத்தில் தான் இருக்கின்றாள்.

இவ்விடயத்தில் பெண்ணியத்தைப் பற்றியும் பெண் அடிமைத்தனத்தை பற்றியும் பேசிக்கொண்டு இருப்பார்களேயானால் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு நடுவீதியில் தான் நிற்க வேண்டும். எனவே நடைமுறைக்கு ஒத்து வரக்கூடிய வகையில் சில நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குடும்பச் சச்சரவுகளை வீதிவரை கொண்டு வராது வீட்டிலேயே தீர்த்துக் கொள்ளலாம். கணவனின் தேவையற்ற கோபத்தைத் தவிர்ப்பதற்கான சில வழிகள்.

அந்தக் காலத்தில் கணவன் வேலை முடிந்து வரும்போது இன்முகத்துடன் வரவேற்று உபசரியுங்கள் என்று கூறினார்கள். இந்தக் காலத்தில் அவவாறில்லை. காரணம் கணவன் மனைவி இருவமே வேலைக்குச் செல்பவர்களாக தற்போது காணப்படுகின்றனர்.

இவ்வாறு இல்லாவிடினும் தற்போதைய நிலைமைகளில் குடும்பத்தை கொண்டு நடத்துவது மிகக் கடினம். இவ்வாறு இருவருமே தொழில் செய்பவர்களாக இருக்கும் பட்சத்தில் கூடியவரை மனைவி கணவனுக்கு முன் வேலை முடிந்து வந்துவிடுவது நல்லது. காரணம் கணவன் வேலையால் வரும் போது உங்களைக் காணும் பட்சத்தில் மிகுந்த மன மகிழ்ச்சி அடைவார். அதுவும் நீங்கள் அவர்களது மனதுக்கு ஆறுதலாக இரண்டு வார்த்தைகளை கதைத்துக் கொண்டே அவரது ஷேர்ட், ரீ ஷேர்ட்களை கழற்றிவிடும் போது சொல் லவும் வேண்டுமா அவர்களது சந்தோசத்தை. அதேபோல் கணவன் தனது வேலைப்பளுவைப் பற்றி உங்களுடன் கலந்துரையாடும் போது அவர்களது சுமைகளைப் பகிர்ந்து கொள்ளாமல் நீங்கள் அதிகப்பிரசங்கித் தனமாக - நீங்களும் வேலை பார்க்கிறீர்கள் என்கின்ற தலைக்கனத்தில் - ''எனக்கும் வேலை தான் நான் அதையெல்லாம் முடித்து வந்து வீட்டு வேலைகளைப் பார்க்கவில்லையா?'' என்று கூறாதீர்கள். இது அவர்களின் சினத்தை இன்னும் அதிகப்படுத்தும்.

உங்களுடன் படித்த அல்லது வேலை பார்க்கும் ஆண் நண்பர்களுடன் பழகும் போது கணவருக்கு தெரியும்படியாக அவருக்குக்கூட அறிமுகப்படுத்திவிட்டு பழகுங்கள். இதைவிடுத்து உங்கள் கணவருக்கு பிற ஆடவருடன் நீங்கள் பழகுவது பிடிக்குமோ என நீங்களாகவே நினைத்துப் பயந்து அவர்களுடன் ஒளித்துக் கதைப்பதால் எப்போதாவது கணவருக்கு நீங்கள் பழகுவது தெரிய வந்தால் தேவையில்லாத சந்தேகங்களுக்கு வித்திடும். எனவே வெளிப்படையாக இருங்கள். அதை உங்கள் கணவர் புரிந்து கொள்ளாவிடில் அது அவரது பலவீனம் அல்லது உங்கள் தலைவிதி. உங்களுடன் இருக்கும் உங்கள் தாய் தந்தையரைப்பற்றியோ விசேடமாக உங்கள் மாமா மாமியைப் பற்றியோ தேவையில்லாமல் முறையிடாதீர்கள்.

கூடியவரை அவர்களை அனுசரித்துப் போங்கள். அதிகளவான குடும்பங்களில் பிரச்சினை இவர்கள் மூலம் தான் ஆரம்பிக்கின்றன. உங்கள் கணவனிடம் குறைகள் காணுமிடத்து குறிப்பாக அவர் நடத்தையில் சந்தேகம் வரும்போது 'அவர் அப்படிச் செய்யக்கூடியவர் தானா?' என்று உங்களுக்குள்ளேயே சுயமதிப்பீடு செய்து முடிவெடுங்கள் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் அவருடன் அதுபற்றி நேரடியாகக் கதையுங்கள். தேவையில்லாமல் உங்கள் நண்பர்களிடமோ உறவினர்களிடமோ இது பற்றி கதைக்காதீர்கள்.

மிக முக்கியமான விடயம் என்னவெனில் உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் இடையிலான தாம்பத்திய உறவு தான். அதிகமான குடும்பங்களில் அடிக்கடி கணவன் மனைவிக்கிடையில் தேவையற்ற சச்சரவுகள் எழும். அதற்கு மூல காரணம் படுக்கையறையில் ஏற்பட்ட திருப்தியீனமாகத்தான் இருக்கும். பொதுவாக ஆண்களின் செக்ஸ் ஆசைகளைப்பற்றி ஓரளவாவது பத்திரிகைகள் மூலம் அறிந்து வைத்திருப்பது நல்லது. அதற்கேற்றால் போல் செயற்படுங்கள். அனேகமான ஆண்கள் சிறு சிறு செக்ஸ் விளையாட்டுக்களில் தான் அதிக ஆர்வம் காட்டுவார்கள். படுக்கையறைதான் செக்ஸ் இற்குரிய இடமென்று கருதாதீர்கள். வீட்டின் மற்றய இடங்கள் தான் அதிகளவான இன்பத்தை உண்டு பண்ணும். ஆக மொத்தத்தில் உங்கள் கணவரைப் புரிந்து நடவுங்கள் இல்லறம் சிறக்கும்.




தொகுப்பு:சாந்தி

# கைகளில் கவனம் தேவை!



நம்மில் பெரும்பாலானோர் கைகளில் கவனம் செலுத்துவதே இல்லை. எல்லோரும் உடம்பை எவ்வாறு வைத்திருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறார்களே தவிர,கைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

கைகளை அழகாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் சிறிதும் அக்கறை காட்டுவதே இல்லை. குறிப்பாகப் பெண்கள் கைகளை அலட்சியப்படுத்துகிறார்கள் என்றே சொல்ல வேண்டும். பெண்கள் காய்கறிகளை நறுக்குதல், வெங்காயம், பூண்டு உரித்தல், இஞ்சியை வெட்டுதல் போன்ற செயல்களைச் செய்யும்போது நகங்களில் கறை ஏற்படுவது இயல்பு.இந்தக் கறை ஏற்படாமலிருக்க என்ன செய்ய வேண்டும்? கறை வந்து விட்டால் அந்தக் கறையை எப்படிப் போக்க - வேண்டும். கைகளைச் சரியாகப் பேணா விட்டால் கைகள் சீக்கிரம் வறண்டுபோய் விடும், விரல்களிலுள்ள நகங்கள் விரைவில் உடைந்து போய் விடும். விரல்களிலும், கைகளிலும் ஏகப்பட்ட அழுக்குகள் சேர்ந்து விட்டால் பார்ப்பதற்கு அசிங்கமாக இருக்கும். இனிமேலாவது கரங்களின் மேல் நாட்டம் கொண்டு, அவைகளை குழந்தைகளை வளர்ப்பதைப் போலப் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

✱ பாத்திரங்களிலுள்ள அழுக்குகளையும், கறைகளையும் கறுப்பாக இருக்கும் பகுதிகளையும் போக்குவதற்கு எப்போதும் பிரஷ்களையோ அல்லது தேங்காய்ச் பொச்சையோ பயன்படுத்துங்கள். உங்கள் நகங்களைக் கொண்டு சுரண்டாதீர்கள்.

✱ கரங்களைச் சோப்பினால் நன்கு கழுவிவிட்டு, எண்ணெய் அல்லது கிரீம் தடவுங்கள். அதன் பின் காய்களையோ, பூண்டையோ வெங்காயத்தையோ நறுக்குங்கள். உங்கள் கைகளில் கறை என்பது கொஞ்சம் கூடப் படியாது.

✱ குக்கரில், அல்லது பிற பாத்திரங்களிலோ உங்கள் விரல்கள் பட்டுச் சுட்டு விட்டதா? பயப்படவேண்டாம். உடனே மருத்தைத் தடவவும். அல்லது உப்புத் தூளைத் தண்ணீரில் லேசாக நனைத்து, விரல்களில் தடவி விடவும்.

✱ உங்கள் கைகளுக்கு எலுமிச்சம் பழம் தோலைக் கண்டிப்பாகப் பயன்படுத்துங்கள். கைகளை எலுமிச்சம் பழத் தோலினால் தேய்க்கும் போது, உங்களுடைய கைகளிலுள்ள கறைகளும் போய் விடும். அழுக்குகளும் அகன்று விடும்.

✱ எல்லா வேலைகளையும் செய்த பிறகு, கரங்களைப் பிரஷ், சோப்பு கொண்டு சுத்தம் செய்யுங்கள். பிறகு ஆலிவ் எண்ணெய்யைச் சூடுபடுத்தி இளம் சூட்டில் கைகளின் மேல் தேய்த்து மசாஜ் செய்யுங்கள். கொஞ்ச நேரம் வைத்திருந்து விட்டுக் கைகளுக்கு சோப்பைக் கொண்டு தேய்த்து கழுவினால் அழுக்குகள் யாவும் போய்விடும். அதன்பின்பு வாக்ஸ்லின் அல்லது கிரீம் கொண்டு தடவுங்கள். ஒரு நாளோடு நிறுத்தி விடாதீர்கள். தினமும் தவறாமல் செய்து வாருங்கள். இதன் மூலம் உங்கள் கைகள் பளபளப்பாக விளங்கும். நகங்களில் உங்கள் முகத்தைப் பார்க்கலாம்.

✱ உங்களால் முடிந்தால், மாதத்திற்கொரு முறை அழகு நிலையம் சென்று மெனிக்யூர் செய்து கொள்ளுங்கள்.

✱ உங்கள் நகங்கள் உடையாத வண்ணம் பார்த்துக்கொள்ளுங்கள். நகம் மனிதர்களுக்கு இன்னொரு அழகு முகம் என்பதை மறவாதீர்கள்.

✱ கரங்கள் மேலும் அழகாகத் திகழ வேண்டுமா? உங்கள் நகங்களுக்கு நெயில் பாலிஷைத் தடவுங்கள். மிக அழகான வண்ணமுள்ள நெயில் பாலிஷைத் தடவவும்.

✱ காலையில் இட்லி, தோசை, என்று சாப்பிடுவதற்குப் பதிலாகப் பச்சைக்காய் கறிகள், பழங்கள் ஆகியவைகளைச் சாப்பிடுங்கள். கோப்பி, தேநீரைத் தவிர்ப்பது நலம். காலையில் 11.00 மணியளவில் மதிய உணவு சாப்பிடுங்கள். சோறு, சாம்பார், ரசம், தயிர், காய்கறிகள், கீரைகள் ஆகியவைகளைச் சாப்பிடலாம். மீன் உணவு சாப்பிடலாம். ஆனால் நீங்கள் தவறாமல் இரண்டு கரட்டுகளை நன்கு கழுவி விட்டுப் பச்சையாகச் சாப்பிட்டு வர வேண்டும். உங்கள் நகங்களுக்கும், விரல்களுக்கும் அதுவே சிறந்த பாதுகாப்புக் கவசமாகும். மாலையில் சுண்டல், சோயா, பாதாம் பால், பசும்பால், கோபி, தேநீர் ஆகியவைகளை எடுத்துக்கொள்ளலாம்.

✱ நகங்களை வளர்க்காதீர்கள். நீங்கள் கால் கழுவும் போது இதன் மூலம் அழுக்குகள் மலக்குடலுக்குள் சென்று, கொக்கிப்புழு, நாடாப்புழு ஆகியவைகள் உருவாகி விடும்.எனவே உங்கள் நகங்களிலுள்ள விளிம்புகளை நெயில் கட்டர் மூலம் அகற்றி விடுங்கள். உங்களுடைய ஆரோக்கியத்தைக் காட்டுவது உங்களுடைய அழகான நகங்கள் தான்! மருத்துவர்கள் நகங்களைப் பார்த்தே உங்களுடைய ஆரோக்கியத்தை எடை போட்டு விடுவார்கள். உங்கள் நகங்கள் சிவப்பாக இருந்தால், நீங்கள் ஆரோக்கியத்தோடு இருக்கிறீர்கள் என்று பொருள். நீளமான, மெல்லிய, வளையும் தன்மை உள்ள விரல்கள் இருப்பின் உங்கள் கலை ரசனையைக் காட்டும். உங்களுடைய கைகள் மென்மையாகவும், சுருக்கமில்லாமலும், தளர்வில்லாமலும், அழகாகவும் இருக்கிறதா? நீங்கள் கொடுத்து வைத்தவர். கைகள், நகங்கள் மூலம் புத்துணர்வையும்,சுறுசுறுப்பையும் நாள் தோறும் பெற்று நீங்கள் நலமுடன் வாழலாம்.

**சகோதரிகளே!**

பெண் பகுதியில் பிரசுரமாகும் சகோதரிகளின் பார்வைக்கு நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம்.

இச்சமூகத்தில் சகோதரிகள் மட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவையாகவும் இருக்க வேண்டும்.

**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**
சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி
மாவத்தை,
கொழும்பு 14.



## நடிகர் திலகத்துக்குப் பெரிய ரசிகர் யார்?

நடிகர் திலகத்துக்கு யார் பெரிய ரசிகன் என்பதில் எனக்கும் நடிகர் ஜி.மகேந்திரனுக்கும் பெரிய சண்டை வரும். கடைசியில் நீதான் பெரிய ரசிகன் என்று விட்டுக்கொடுத்து விடுவேன். அது நட்புக்காக...'' என்றார் நடிகர் கமல்ஹாஸன். சென்னையில் வை.ஜி மகேந்திரனுக்கு நடந்த பொன்விழாவில் கமல்ஹாசன் உரையாற்றியபோதே இப்படிக் கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

''வைரமுத்துவும், நானும் சகோதரர்கள். நாத்திகத்தில் மட்டுமல்ல, பல விஷயங்களில். கலைஞரும், நடிகர் திலகமும் எந்த அளவுக்கு நட்புடன் பழகினார்கள் என்பதைப் பக்கத்திலிருந்து பார்த்தவன் நான். அதை என் பேரன்-பேத்திகளுக்குக் கூட பெருமையாகச் சொல்வேன். சமீபத்தில் நடந்த விழாவில், நடிகர் திலகம் சிவாஜி மூச்சு விடாமல் பேசிய வசனத்தை எழுதியது நாம்தான் என்ற எண்ணம் கூட இல்லாமல், அவர் ஐந்து நிமிடங்கள் மூச்சு விடாமல் ஒரே ஷொட்டில் பேசி நடித்ததை எண்ணி, கலைஞர் கண்கலங்கினார். அதைப் பார்த்து எனக்கும் கண்ணீர் வந்தது.கலைஞர் இப்போதும் வசனம் எழுதுவது எனக்கு ஆச்சரியம் அல்ல. அவர் எழுதாமல் இருந்தால்தான் ஆச்சரியம்.

வை.ஜி.மகேந்திரனுக்கும், எனக்கும் அடிக்கடி சண்டை வரும். நடிகர் திலகத்துக்கு நான் பெரிய ரசிகரா, அவர் பெரிய ரசிகரா? என்பதில்தான் எங்களுக்குச் சண்டை. வரும். முடிவில், நீதான் பெரிய ரசிகன் என்று விட்டுக் கொடுத்து விடுவேன். அது நட்புக்காக...,'' -என்றார்.

## திரிஷா போனால் என்ன? தமன்னா இருக்காரே....!

'ஜெயம்கொண்டான்', 'கண்டேன் காதலை' ஆகிய இரண்டு படங்களை அடுத்து கண்ணன் இயக்கும் புதிய படம் 'வந்தான் வென்றான்'.

இதில் பரத்தை நடிக்க வைக்கமுயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், கடைசிநேர சறுக்கலில் பரத் இடத்திற்கு வந்திருக்கிறார் ஜீவா. ரேஸ் குதிரையில் நிதானமாக ஓடிக்கொண்டிருக்கும் ஜீவா, மெது மெதுவாக ஒவ்வொரு குதிரையாக முந்திக்கொண்டிருக்கிறார் என்பதுதான் நிஜம். அதற்கும் விதியும் கொஞ்சம் கை கொடுத்துக்கொண்டிருக்கிறது. 'கோ' படத்திலிருந்து சிம்பு விலகியதுதான் ஜீவாவின் பாய்ச்சலுக்கு இன்னொரு காரணம். கே.வி. ஆனந்த் படத்திலேயே நடிக்க வந்திட்டேடாம். ஜோடி விடயத்தில் கொஞ்சம் எட்டித் தாவலாமே என்று நினைத்த ஜீவா, 'வந்தான் வென்றான்' படத்திற்கு திரிஷாவை ஜோடியாகக் கேட்டாராம். தங்க விசிட்டிங் கார்டில் பெயர் பொறித்துக் கொண்டிருக்கிறார் திரிஷா. குனிந்து பார்க்க முடியுமா அவரால்? ''போயும் போயும் ஜீவாவுடன் ஜோடி சேர்வதா, முடியாது என்று கூறிவிட்டாராம். மயிலு போனா என்ன, மரிக்கொழுந்து நான் இருக்கேன் என்று இப்போது கால்ஷீட் கொடுத்திருப்பவர்...? அழகு, மெழுகு அற்புத சிற்பம் தமன்னாவாம்!

மனுசனுக்கு மச்சமே குதிரையாயிருக்குப்பா...



நடிப்பு: விஜய், தமன்னா, வடிவேலு, தேவ் கில்
இசை: மணிஷர்மா
ஒளிப்பதிவு: என்.கே. ஏகாம்பரம், எம்.எஸ். பிரபு
தயாரிப்பு: சங்கிலி முருகன்.
இயக்கம்: எஸ்.பி.ராஜ்குமார்.

யாழ்நகர் (!?) என்ற மீனவ கிராமத்துக்குச் செல்லப்பிள்ளைதான் சுறா (விஜய்). அந்த ஊருக்கு எதாவது பிரச்சினை என்றால் இவர் பதறிப் போவார். இவருக்கு ஒன்று என்றால் அந்த ஊர் பதறிப் போகும்!. அப்படிப்பட்ட கரக்டெர்தான் 'சுறா'வுக்கு. ஒரு நாள் தனது செல்ல நாய் செத்துப் போன சோகத்தில் அந்தக் கிராமத்தின் கடலோரம் தற்கொலை செய்து கொள்ள முயல்கிறார் தமன்னா. அவரை விஜய் ஓடி வந்து காப்பாற்றுகிறார் (இதை யாராலும் ஊகிக்கமுடியும்).

அடுத்த சில காட்சிகளில் விஜயின் மனக்கடலில் குதித்துக் காதலியாகி, நான்கு பாடல்களில் ஆடுகிறார் தமன்னா. கிட்டத்தட்ட அவ்வளவுதான் தமன்னாவின் கரெக்டர்.

இதற்கிடையில் வில்லன் தேவ், 'பார்க்' அமைக்க கிராமத்தைக் காலி பண்ணச்செய்ய முயல்கிறார். அதிலிருந்து மக்களைக் காக்கும் புனிதப் போரில் ஒற்றையாகக் களமிறங்குகிறார் சுறா. இதனால் கோபமடையும் வில்லன், 'சுறா'வைப் போட்டுத் தள்ள முடிவெடுக்கிறார்.

இரண்டாம் பாதியில் கடத்தல் சரக்கை விற்று பணக்காரனாகி வில்லனுடன் மோதுகிறார். தன்னையும் கிராமத்தையும் எப்படிக் காக்கிறார், தமன்னாவைக் கைப்பிடித்தாரா? என்பதெல்லாம் பொறுமையைச் சோதிக்கும் க்ளைமாக்ஸ் சமாச்சாரங்கள்!.

இதைவிட, இந்தப் படத்தின் அறிமுகக் காட்சியை சொல்லியே ஆக வேண்டும். கடலுக்குப் போன மீனவர்கள் காணாமல் போக, அவர்களை 'கோஸ்ட். கார்ட்' கண்டுபிடித்து கரை திரும்ப வைக்கிறது.

# திரை விமர்சனம்

## சிவப்பு மழைக்கு இலங்கையில் தடை!

ரேஷ் ஜோகிம்-மீராஜாஸ்மின் நடிப்பில் வெளிவந்த கின்னஸ் படம் 'சிவப்பு மழை'. 12 நாட்களில் உருவாக்கப்பட்ட படம் இது. ஒருபுறம் கின்னஸ் சாதனைக்காக எடுக்கப்பட்டாலும், மறுபுறம் ஈழ விடுதலைப் போராட்டத்தின் வலியையும் சொல்லிய படம் அது. (அதை முழுமையாக சொல்லியிருக்கிறார்களா என்பது வேறு விடயம்) படத்தின் நாயகன் சுரேஷ் ஜோகிம் ஓர் ஆஸ்திரேலியா ஈழத்தமிழர் என்பதும் இப்படி ஒரு படம் அமையக் காரணமாக இருந்தது. தமிழகத்தில் மட்டுமல்ல, உலகமெங்கும் பரவலாக ஓடிக்கொண்டிருக்கும் இப்படத்தை இலங்கையில் வெளியிடத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது எனத் தெரியவருகிறது.

தமிழகத்தில் ஒரு படம் ரிலீஸ் ஆகின்ற அதே நேரத்தில் கொழும்பு போன்ற நகரங்களிலும் அப்படத்தை வெளியிட ஆர்வம் காட்டுகிறார்கள் விநியோகஸ்தர்கள்.



படம்–பெண்சிங்கம்



பூஜா

# ஜூலை 18இல் ரிலீஸ்!

ஹிந்தியில் ராவண். தமிழில்...? ராவண், ராவணா, ராவணன், அசோக வனம்... இப்படி அரை டஜன் பெயர்கள் சொன்னார்கள். இறுதியில் 'ராவணன்' என்ற பெயரை டிக் செய்திருக்கிறார் மணிரத்னம்.
தெலுங்கில் 'ராவணன்' படத்துக்கு மணிரத்னம் வைத்திருக்கும் பெயர் 'வில்லன்'.
ஒளிப்பதிவாளர் மணிகண்டனின் ஈகோ மணிரத்னத்துக்குச் சரிவராததால் படத்தின் பெரும்பாலான காட்சிகளுக்குச் சந்தோஷ்சிவனே ஒளிப்பதிவு செய்துள்ளார்.
தற்போது எடிட்டிங் பணிகள் நடந்து வருகின்றன. நான்கு படங்களுக்குரிய சுமை இருப்பதால் பணிகள் மெதுவாகவே நடக்கின்றன. ஜூன் 18 'ராவணன்', 'ராவண்', 'வில்லன்' மூன்றும் திரைக்கு வருகின்றன.



ராவணா ஸ்டில்கள்...!



எல்லா மீனவர்களும் வந்துவிட, ஒருவர் மட்டும் வரவில்லை.... அது 'சுறா' உடனே ஊர்மக்கள், அடடா அந்தத் தம்பியப் போல வருமா எனத் தவிக்க, அப்படியே கடலுக்குள்ளிருந்து பிய்த்துக்கொண்டு கிளம்பி வருகிறார் 'சுறா'... அடுத்து அறிமுகப் பாட்டில் குத்தாட்டம் போடுகிறார்!.விஜய் வழமைபோல நன்றாகவே நடனம் ஆடுகிறார்... வழக்கம் போல சண்டை போடுகிறார்... ஏகப்பட்ட பஞ்ச் வசனங்களைப் பேசுகிறார். மீனவர் உரிமை, இலங்கைத் தமிழர் பிரச்சினையென எல்லாவற்றையும் தொடுகிறார்... !
வடிவேலுவை இதேவேகத்தில் விட்டால் அவர் எல்லா ஹீரோக்களையுமே டம்மியாக்கிவிடுவார் போலிருக்கிறது. மனிதர் அடிக்கும் லூட்டி லூட்டிதான். குறிப்பாக வெண்ணிற ஆடை மூர்த்தியுடன் அவர் வருவது தனித்துத் தெரிந்தாலும் சரவெடி.
வில்லனாக வரும் தேவ் கில் சும்மா சும்மா உதார் விடுவதோடு சரி.
ஒளிப்பதிவு நன்றாக உள்ளது. ஏகாம்பரமும் எம்.எஸ். பிரபுவும் பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறார்கள்.
மணிசர்மாவின் பாடல்கள் பழக்கப்பட்டதாகத் தெரிந்தாலும், ஈர்ப்புச் சற்றுக் குறைவுதான். எஸ்.பி. ராஜ்குமார், ஒரு நல்ல பொழுதுபோக்கு இயக்குநர் என்ற பெயரைத் தக்கவைத்துக் கொள்ள கிடைத்த பெரிய வாய்ப்பை வீணடித்திருக்கிறாரோ என எண்ணத் தோன்றுகிறது. விஜய் ரசிகர்களுக்கு இது 'சுறா'. ஏனையவர்களுக்கு இது வெறும் புறா...?




# விஜய் ரசிகர்கள் ரகளை!

விஜயின் 'சுறா' படத்தை முதல் நாளிலேயே பார்க்கச் சென்ற விஜயின் இந்திய ரசிகர்கள் திருச்சியிலுள்ள தியேட்டரில் பாலாபிஷேகம் செய்தபோது, பொலிஸாருடன் முறுகல் ஏற்பட்டிருக்கிறது. இதையடுத்து அங்கு மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு தடியடி நடத்தி ரசிகர்களைக் கலைத்து விரட்டியுள்ளனர்.
இது போல திண்டுக்கல்லில் ஒரு தியேட்டரில் சௌண்ட் சரியில்லை என ரசிகர்கள் திரையைக் கிழித்துள்ளனர். அத்துடன், கதிரைகள் மற்றும் 'பல்ப்'புகளை நொறுக்கியுள்ளனர். இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டதாம். இவை எல்லாம் சுறா வெளியிடப்பட்ட தினத்தன்று (கடந்த 30ஆம் திகதி)நடந்தவை.



முமைத்கான்



தமிழகத்தில் எடுக்கப்படுகின்ற படங்களுக்கே இந்த வரவேற்பு என்றால் இலங்கையில் நடந்த ஒரு முக்கிய பிரச்சினையைக் காட்டுகின்ற படத்துக்கு எப்படி ஒரு வரவேற்பு இருக்க வேண்டும்? ஆனால் அதற்கு வழி கொடுக்காமல் முதலிலேயே இந்தப் படத்தை வெளியிட முட்டுக்கட்டை போடப்பட்டிருக்கிறதாம். இதை எதிர்த்துப் போராடுகிற நிலையில் எவரும் இல்லை என்பதால், இலங்கை தவிர பிற இடங்களில் தொடர்ந்து திரையிடும் முயற்சியில் வெற்றி கண்டு வருகிறார் சுரேஷ் ஜோகிம்.

# கவிதைப்புனல்

## நடிப்பு சுதேசிகள்

முகத்திலே சிரிப்பு வைத்து-தம்
முதுகிலே கத்தியை மறைத்து வைத்தார்
அகத்திலே வஞ்சம் கொண்டார்-அவர்
ஆவியைப் போக்கவே நாமெழுவோம்!

நாக்கிலே நஞ்சு வைத்து-நுனி
நாவிலே தேனினைச் சொட்டவிட்டார்
சாக்கடைச் சேற்றில் இவர்-பூத்
தாடிடின் வேரொடு களையெடுப்போம்!

வீட்டிற்கு மோசம் செய்து-வெளி
வீதியில் நல்லதாய் வேடமிட்டால்
பூட்டிய அறைக்குள் வைத்து-நல்ல
பூசைகள் போடவும் பின்னடியோம்!

தவறினை உணர்ந்து கொண்டு-அதை
தவிர்க்கிற வழியிலே முயன்றுவிடு
உறுதியாய் வாழும் எண்ணம்-மனதில்
ஊன்றினால் என்றுமே இன்பமுண்டு!

-கி.குருபரன்-

## கவனியுங்கள்!

பட்டப் படிப்பை முடித்தவர்கள்
பலவா றாய்நற் றொழில் புரியும்
திட்ட மிதனை யேமறந்து
திரிகின் றார்பேய் பிசாசுகள் போல்
கெட்டுப் போன தெம் நாடு
குட்டிச் சுவரா யிவர்களினால்
எட்டுத் திசையும் இந்நிலைதான்
இங்கெம் பண்பா டென்னாச்சு!

ராக்கிங் என்ற போர்வையிலே
ரெளடித் தனங்கள் செய்கின்ற
போக்கின் றெங்கும் பல்கலையில்
புகுந்த திதனால் இந்நாடு
தீக்குள் விரலை வைத்தாற்போல்
தீங்கில் வெம்பி வேகிறதே!
நோக்கம் என்ன? ரெளடிகளே
நீங்கள் தமிழ்மக் கள்தானா?

பத்திரி கைக்கோ வருஞ்செய்தி
பலதுள் ஒன்றே! எத்தனையோ
சித்திர வதைகள் செய்கின்றார்
சினத்தால் கொடூரம் மிகக் கூடும்
செத்தும் போனார் சிலரிதனால்
சிலர்நோ யுற்றார் இச்செயலேன்?
பித்துப் பிடித்த தா இவர்க்கு?
பல்கலை யதற்கேன் வந்தனரோ?

-ஆ.விநாயகமூர்த்தி-

## சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்

### தீ வைப்பு

முக்கண்ணன் எரிப்பு வன்று
முப்புரம்; இங்கு இராமர்
பக்தனாம் அனுமன் இட்டான்
பற்றத்தான்; பட்டி னத்தார்
அக்கினி மூட்ட லானார்
அன்னையின் சிதையில்; குண்டர்
அக்காலம் வைப்பு இங்கு
அப்பாவித் தமிழர் மீது!

குண்டர்கள் நெருப்பு வைப்பு
குடும்பங்கள் தவிப்பு; இருண்ட
மண்டலம்; சுவாலை; பல்லோர்
மனைகள்நீள் கடைகள் நாசம்
பண்டங்கள் எரிப்பு; கொள்ளை
படுகொலை; எரிப்பு; அந்தோ
பெண்களின் கற்புச் சூறை
பேயாட்டம்; நீதிச் சாவு!

அகதிகள் ஓலம்; பள்ளி
ஆலயம், மண்ட பங்கள்
புகலிடம் ஈவு; பின்னர்
புதுமுகாம்; விரக்தி; கண்ணீர்
முகவாட்ட முற்ற மக்கள்
முன்னைய இடங்கள் செல்லோம்
அகமிக நொந்தோம்; செத்தால்
அந்நாட்டில் சாவோ மென்றார்!

இந்தியக் கடவுச் சீட்டை
ஈட்டியோர் கூட வன்று
வந்தவன் செயலில் சிக்கி
வழியற்றோ ரானார்; பாவம்
நொந்துபின் கலக்க முற்று
அகதிகள் முகாமில் நின்று
அந்திமக் காலம் ஈண்டு
அணைத்ததோ என்று விண்டார்!

கவிஞர் ஸி. எஸ்.காந்தி
(தொடரும்)

## சொந்தமில்லை!

பூவொன்று இதழ்விரிந்து போனால்-அதன்
புதுவாசம் சொந்தமிலை யங்கு
தேவண்டு தேடிவந்து தொட்டால்-இனித்
தேன்கூடச் சொந்தமிலை நம்பு!

இலையசைய வீசுகின்ற காற்றில்-அதன்
இதம் இலைக்கு சொந்தமிலைத் தம்பி
குலைபோட்டு மூசுகின்ற வாழை-அதன்
குலை, குட்டி உண்டதிலைத் தம்பி!

மழைவந்து தரைவீழும் போது-எழும்
மணம் அதற்குச் சொந்தமிலைத் தம்பி
உலைமீது எழுகின்ற ஆவி-இனி
உறுப்பாகும் காற்றிடையே மேவி!

இருள்வந்து பூமியினைத் தொட்டால்-அந்த
இடம்ஒளிக்குச் சொந்தமிலைத் தம்பி
ஒருகுண்டு வெடிக்கின்ற போது-பலர்
உயிர்எவர்க்கும் சொந்தமிலைத் தம்பி!

-கி.வாயுபுத்திரன்-

## வெளிநாடு

முடியெல்லாம் நரைத்து முக்கால் கிழடாகி
நரைபோக மைபூசி நாடு வந்து
நாலுபேர் மதிக்கும் நல்லதொரு மாப்பிள்ளைக்கு
நாலுலட்சம் வேண்டாரோ சீர்?

அடுக்கடுக்காய் நாலு குமர் அப்பன் குடிகாரன்
அகதியாய் அண்ணனவன் அயல் நாட்டில்
சிறுகச் சேர்த்த பணம் சீதனமாய் போய்முடிய
வெறுங்கையாய் வந்திடுவான் தன் வீடு!.

காணிசுடுவைத்து கனடா சென்ற மகன்
மாதமோர் ஐம்பதென்று அனுப்பிவிட்டால்
மகளுக்கு பிறந்தநாள் வண்ணப் படப்பிடிப்பு
எடுத்திடுவாள் அம்மா இங்கு!

இரவு பகல் பாராமல் எந்தத் தொழிலினையும்
விருப்புடனே செய்த பின்னர் வேதனத்தை
அனுப்பும் மகனின் அவலத்தை அறியாமல்
அனைவருக்கும் அளந்திடுவாள் அன்னை!



வெளிநாட்டில் நின்று வீடு வந்த அண்ணனுக்கு
விதம் விதமாய் உணவுவகை தந்திடுவாள்
தரும் பொருளில் குறைவு கண்டால்
தங்கை அவள் மனமும் கொடியவிடமாகிவிடும்!



## வேண்டும்

மழலை மனமுள்ள உலகொன்று வேண்டும்
மனதார மன்னிக்கும் மனிதரும் வேண்டும்
மனிதத்தை மதிக்கின்ற நேயமும் வேண்டும்
மனமதின் சுமைகள் சுகமாக வேண்டும்!

எங்கும் அமைதி நிலவிட வேண்டும்
அன்பின் ஆட்சி குலவிட வேண்டும்
கைகள் யாவும் இணைந்திட வேண்டும்
கலகம் யாவும் அணைந்திட வேண்டும்!

பொல்லார் எண்ணம் பொசுங்கிட வேண்டும்
எல்லார் வாழ்வும் வளமுற வேண்டும்
கண்ணீர் காலம் கலைந்திட வேண்டும்
செந்நீர் கோலம் குலைந்திட வேண்டும்!

மரணித்து நீதி உயிர்பெற வேண்டும்
சிறைப்பட்ட சுதந்திரம் வெளிவர வேண்டும்
மனித உரிமைகள் காக்கப்பட வேண்டும்
அவரவர் உரிமை அவரவர்க்கு வேண்டும்!

## கருமைக்கும் ஓர் அழகுண்டு

கருமை யினுக்கோ ரழகுண்டு
காட்டு மிருளில் ஒளியுண்டு
கருமை கண்டே வெறுப்புற்றால்
காட்சி தோன்றல் எளிதாமோ
இருளின் ஒளியைத் தனதாக்கி
இட்டில் லாமற் சிலவுயிர்கள்
இருளில் எங்கும் உலாவந்து
இருளை இனிதாய் ஏற்றிடுமே

இருளிற் கள்வர் விழிபார்க்கும்
ஒளியில் அவரின் கண்சோரும்
இருளோ காதலுக் கிதஞ்சேர்க்கும்
ஒளியோ ஊடல் தருவிக்கும்
இருளும் ஒளியும் நித்தியமாய்
இந்த உலகை நடத்துவதால்
இருளோ ஒளியோ ஒவ்வொன்றும்
இருத்தல் சமநிலைத் தத்துவங்காண்!

இருளைக் கொடுக்க மறைவானே
அதனைப் போக்க ஒளிர்வானே
மருளும் உலகைத் தனதாக்கி
மயக்கங் காட்டி யுழைப்பானே
இருளும் ஒளியும் அவனாலே
இதனால் இரண்டுஞ் சமபலமே
மருளல் எவர்க்கும் வேண்டாமே
மகிழ்வாய் ஏற்றல் பெரிதாமே!



# வாழ்ந்த இடமும் வீழ்ந்தது!

-இரா.சரவணன்

இலங்கையில் விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு... முள்ளிவாய்க்கால் காட்சிகளை இந்த உலகம் பார்த்து ஒரு வருடமாகப் போகிறது. எதிர்வரும் 18-ஆம் திகதியன்று அந்த வெற்றியை விமரிசையாகக் கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு. அதற்கிடையிலேயே மற்றொரு கேவலமும் அரங்கேறி இருக்கிறது. வல்வெட்டித் துறையில் உள்ள பிரபாகரன் வாழ்ந்த வீடு, மண்ணோடு மண்ணாகத் தகர்க்கப்பட்டிருக் கிறது! இதைக் கேட்டு பன்னாட்டு



தமிழர்களும் கொதித்துக் கிடக்க... விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவனுடன் செய்தியாளர்கள் பேசினார்கள். பிரபாகரன் தந்தை வேலுப்பிள்ளை மறைந்த் சமயத்தில் கடைசியாக வல்வெட்டித்துறைக்குப் போய் வந்த திருமாவளவன், பிரபாகரனின் வீடு குறித்த நினைவுகளை உருக்கமும் ஆவேசமுமாக செய்தியாளர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

அவர் தெரிவித்ததாவது:-

''பிரபாகரனின் வீடு புலிகளின் அடையாளத் தலமாக, தமிழர்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டது.நான் 2002-ஆம் ஆண்டு போர் நிறுத்த நேரத்தில் பிரபாகரனின் வீட்டுக்குப் போயிருந்தேன். பல நாடுகளில் இருந்தும் அந்த வீட்டைப்பார்க்க ஏராள மானோர் வந்திருந்தார்கள். பிரபாகரனைப் பாராட்டியும் தனி ஈழத்தை வாழ்த்தியும் அந்த வீட்டின் சுவர்கள் முழுவதும் எழுதப்பட்டிருந்தது. தமிழில் மட்டுமல்லாமல் ஆங்கிலம், உருது என பல மொழிகளில் அந்த வீடு முழுக்க எழுதப்பட்டிருந்தது. ஏ-9 பாதையின் வழியாக அவரது வீட்டுக்கு நிறைய சிங்கள மக்களும் வந்தார்கள். அவர்களும் சிங்கள எழுத்துகளால் வாழ்த்தி, எழுதிவிட்டுப் போனார்கள். 2002-க்கு முன்னர் நடந்த போரில் இலங்கை ராணுவம் நடத்திய தாக்குதலில் அந்த வீட்டின் மேற்கூரை சிதைக்கப்பட்டது. துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த அடையாளங்களோடு உள்ள அந்த வீட்டைப் பார்க்கும்போதே, எம்மையும் மீறி நரம்புகள் புடைக்கும். அந்த வீட்டைப் பார்த்துவிட்டு, பிரபாகரன் இருந்த இடத்துக்கு வந்தேன். 'உங்கள் வீட்டைப் பார்த்தேன். உங்களின் வீரம் அந்த வீட்டில் தெரிகிறது' என்றேன். லேசாகச் சிரித்தவர், 'நான் சின்ன வயதிலேயே அந்த வீட்டைவிட்டு வந்து விட்டேன். மறுபடி அங்கே போகவே இல்லை' என்றார். தன் வீட்டைப் பற்றி கவலையே படாதவர், யாழ் நகரில் கோப்பாய் பகுதியில் இருந்த மாவீரர் துயிலும் இடத்தை ராணுவம் சிதைத்து விட்டதை நினைத்து, மிகவும் வருத்தப்பட்டார். பழையபடியே மாவீரர் துயிலும் இடத்தைக் கட்டுவதற்காக, கையில் வரைபடத்தோடு தயாராகிக் கொண்டிருந்தார். நினைவிடங்களின் மீது அவர் வைத்திருந்த மதிப்பும் மரியாதையும் அப்படிப் பட்டது. ஆனால், மனித நேயமே இல்லாமல், இனவெறி பிடித்த வல்லூறுகளாகப் பிரபாகரனின் வீட்டை இடித்த பாவிகளை என்ன வென்று சொல்வது?'' என்றவர், இடை வெளிவிட்டுத் தொடர்ந்தார்.

''சில மாதங்களுக்கு முன்பு வேலுப்பிள்ளை இறந்த போது, நான் வல்வெட்டித் துறைக்குப் போய் பிரபாகரனின் வீட்டை



இடிக்கப்பட்ட வீடு

மறுபடியும் பார்த்தேன்.

'அவரது வீட்டைப் போலவே அவர் கட்டிய நாட்டையும் சல்லடையாக்கி விட்டார்களே...' என மனம் நொந்து, அவரின் காலடிபட்ட மண்ணைக் கைநிறைய அள்ளி வந்தேன். சிங்கள மூர்க்கத் துக்கு பயப்படாமல் முதுகு நிமிர நின்ற அந்த வீடு, மறுபடி உணர்வுகளை உசுப்பும் களமாக மாறிவிடுமோ என்ற எண்ணம் அவர்களை உறுத்தியதோ என்னவோ... மனிதாபமானமற்ற முறையில் அதனை மண்ணோடு மண்ணாக்கி இருக்கிறார்கள். பிரபாகரனின் அடையாளங்க ளையும், ஈழத்தின் மிச்சங்களையும் வரலாற்றுச் சுவடுகளில் இருந்து அழித்தொழிக்கவே இப்படி செய்யப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறையில் உள்ள வீட்டை வேண்டுமானால் அவர்கள் அழிக்கலாம்... சிதைக்கலாம். ஆனால், உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் வாழுகிற தமிழர்கள், பிரபாகரனுக்காக அவர்களின் இதயங்களில் கட்டி வைத்திருக்கும் வீட்டை இலங்கை அரசால் என்ன செய்ய முடியும்? சமீபத்தில், திலீபனின் நினைவிடத்தை சிதைத்திருக்கிறார்கள். மொத்தத்தில், ஈழம் முழுக்கவே ராணுவம்; திரும்பிய பக்கமெல்லாம் புத்தர் சிலைகள்.

மெனிக் பாமில் இருந்து சொந்த வாழ் விடங்களுக்கு அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படும் தமிழர்கள், ராணுவ முகாம்களுக்கு அருகிலேயே தங்க வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

கொத்துக் கொத்தாகத் தமிழர்கள் செத்து விழுந்ததை போர்க் காலத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த இந்திய அரசு, இப்போதும் இரக்கமோ அக்கறையோ இல்லாமல் பாராமுகம் காட்டிக் கொண்டிருக்கிறது. எதற்கும் ஓர் எல்லை உண்டு என்பார்கள். ஆனால், ஈழத்தின் துயரங்களுக்கு மட்டும் அந்த எல்லை இல்லவே இல்லை போலும்!" - பரிதவிக்கிறது திருமாவளவனின் குரல்

*நன்றி: இணையம்*

London School of Business & Finance

STUDY IN UK

CIMA / CIM / ACCA
MSc in Finance / Marketing
MBA

Variety of scholarship opportunities
• Emerging markets Scholarship • The Diversity Scholarship
• Women in Business Scholarship • The Corporate Scholarship

SWISS ADVANTAGE EDUCATION
Tel: 2766511
ranjula@swissadvantage.net

Applications now being received for July intake

UHV University of Houston - Victoria

UNIVERSITY OF HOUSTON - VICTORIA
USA

• The School of Business Administration
• The School of Arts & Sciences
• The School of Education & Human Development
• The School of Nursing

Apply now for
Need Based / Merit Based Scholarship opportunities

SWISS ADVANTAGE EDUCATION
Tel: 2766511
ranjula@swissadvantage.net

Next Intake - JULY 2010

# கண்டறிந்த வாழ்க்கைகளும் எழுதிப்போன இலக்கியமும்

-மாக்ஸிம் கார்க்கிதாசன்

எதிர்காலத்தை முன்கூட்டியறியும் ஒரு மாயாசக்தி எழுத்தாளனுக்கு உண்டு என்பது புதுமையல்ல; தன்னைச் சுற்றி நடக்கின்ற எல்லா விஷயங்களையும் எழுத்தாளன் கிரகித்துக்கொள்ள வேண்டும். தான் வாழும் சூழலை அறிந்திருக்க வேண்டும். அந்த வாழ்க்கையைச் செலுத்துகின்ற விதிகளின் செயல் முறையையும் அவன் அறிந்திருக்க வேண்டும் என்றுதான் இதற்கு அர்த்தம். எதிர்கால, நிகழ்கால சக்திகளைப் பற்றிய ஞானம் எழுத்தாளனுக்கு இருக்கிற விரிவுபடுத்தும் ஆற்றலின் உதவி கொண்டு, வரப்போகும் எதிர்காலத்தை அவனால் உணரச் செய்யமுடியும்.

கலைஞனின் பணி மிகவும் கடினமானது. பொறுப்பு வாய்ந்தது. வாசகனின் பணியோ அதை விடக் கடினமானது. பொறுப்பு வாய்ந்தது. அவர்களுடைய யதார்த்தவாதம் வெற்றி வீரர்களின் யதார்த்த வாதமாகும். கலைஞனை ஊக்குவித்தல் அவசியம்; ஆனால் அது அவனுடைய உள்தேவையாக, அவனுக்குப் பயன்படும் வகைப்பட்டதாக இருப்பது அதைவிட அவசியம்.

புது வாழ்க்கை முறையோடு நேரடித் தொடர்பு கொள்வது அவசியம். அறிவு வளர்ச்சி நின்றுபோய், நின்ற நிலையிலேயே ஒருவன் காலம் தள்ளுவது என்பதுதான் அறியாமைக்கு அர்த்தம். உலகத்திலுள்ள ஒவ்வொன்றையும் அதனதன் இயக்க நிலையிலே, அதனதன் இயக்கத்தின்படி, நாம் பார்க்கிறோம். எந்தச் சக்தியும் இயக்கமே தவிர வேறியில்லை. மனிதனின் வளர்ச்சி நின்ற நிலையில் இல்லை. வளர்ந்து கொண்டேயிருக்கின்றான். உருவாகிக் கொண்டிருக்கும் இயக்கப் போக்கில் வாழ்கின்றான். தற்காலத்தில் வாழ்க்கை மேலும் மேலும் பாய்ச்சல் துணிவோடு செல்கிறது. தோற்றங்கள் கனவேகமாக ஒன்றையொன்று பின்தொடர்ந்து நிகழ்கின்றன. நமது தொழிலாளி வர்க்கம் செய்கிற அதே அர்ப்பணித்த சக்தியுடனும் வேகத்துடனும் இயற்கையிடமிருந்து தற்காப்புத் தேடிக் கொள்ளக்கூடிய சாதனங்களையும், மேலான வாழ்க்கை நிலைமைக்குரிய சாதனங்களையும் சிருஷ்டிப்பதில் மனிதகுலம் செலவழித்திருந்தால் இன்று அது கிடந்து தவித்துக் கொண்டிருக்கும் அழுக்கும் இரத்தக் களறியுமான சதுப்புக் குழியிலிருந்து வெகுதூரம் அப்பால் சென்று விட்டிருக்கும் என்பதற்கு மறுக்க முடியாத சான்றுகளை அளிக்கிறது. நம் காலத்திய கதாநாயகர்களை முழுமையான உயிர்ப்புள்ள மனிதர்களாக நமது இலக்கியம் சித்திரிக் கவில்லை என்று நமது விமர்சகர்கள் குறை தெரிவிக்கின்றார்கள். விமர்சகன் தொழில் தன்மையின் காரணமாகவே ஏறத்தாழ அவநம்பிக்கை வாதியாகி விடுகிறான். அவன் குற்றங் குறை காண்பதிலேயே எப்பொழுதும் கண்ணும் கருத்துமாயிருக்கிறான். அடிக்கடி தனது அவநம்பிக்கைத் தன்மையை வெளிக் காட்டுகிறான். உள்ளூர இருக்கிற குணங்களின் முறை கேடான கவலையினால் நிறைய இரைச்சல் ஏற்பட்டிருக் கிறது. இதனால் புது எழுத்தாளர்களுக்கு ஒரு பயனும் கிடைக்கப்போவதில்லை. மேலும், எழுத்தாளர்கள் விஷயத்தில் விமர்சகர்கள் பின்பற்றும் தோரணையில் கொஞ் சமேனும் பொருத்தமில்லாத, இளம் எழுத்தாளர்களுக்கு வெறுப்புத் தரக் கூடிய ஒரு மேல் நிலைப் பங்கு' அடிக்கடி தென்படுகிறது. இதனால் நமது விமர்சகர்கள் சொந்த ஆற்றல்களைப் பற்றி இறுமாப்பான பெருமை பாராட்டிக் கொள்கிறார்கள். இந்தக் கடினமான பணியை யதார்த்தவாதம் சமாளிக்க முடியும், நீண்ட காலத்திய தனிநபர் போக்கி லிருந்து சோஷலி ஸத்துக்குச் செல்லும் வழியாக வளர்ச்சி இயக்கத்தில் ஈடுபட்டிருக் கிற தனிநபரைக் கவனித்துச் சித்திரிக்கும் போது மனிதனை இன்றிருக்கிற நிலையில் வைத்து மட்டும் சித்திரிக்காமல் நாளை அவன் இருக்கப்போகிற, இருக்க வேண்டிய நிலையில் வைத்தும் சித்திரிக்க வேண்டும்.

மனிதனைப் பெரிதுபடுத்தித் தருவது எழுத்தாளனின் உரிமை. கருத்துக்களை பூவுலகில் படைக்கிறவர்களின்உழைப்பு என்னும் மண்ணிலிருந்து அவை உதிர்கின்றன. உற்று நோக்கியறிதல், ஒப்பு நோக்குதல், கற்றறிதல் கடைசியாக விபரங்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கிற விஷயங்களை இவை உபயோகித்துக் கொள்கின்றன. பண்பாட்டைப் பற்றி விபரபூர்வமான ஒரு வரலாறு தேவைப் படுகிறது. அதாவது, வர்க்கங்களின் வளர்ச்சி, வர்க்க முரண்பாடுகள், வர்க்கப் போர் பற்றிய வரலாறு, தேவை. உண்மையும் விவேகமும் கீழிருந்து, மக்களிட மிருந்து உதிர்கின்றன. வாழ்க்கையின் மேல் மாடங்கள் கீழிருந்து வரும் காற்றைத் தான் சுவாசிக்கின்றன. உழைப்பாளி உலகு, புரட்சியின் தேவையைப் பற்றிய உணர்வைப் பெற்று விட்டிருக்கிறது. கலகம் செய்ய நிமிர்ந்து விட்டவனுக்கு உதவி செய்வதே இலக்கியத்தின் பணி.

அந்தக் காலத்தில் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையே இருந்த முரண் பாடுகளைப் பற்றியும் புத்தகங்களில் கூறப்பட்ட சூத்திரங்களுக்கும் நேரடி அனுபவத்தால் விளையும் பயனுக்கும் இடையேயிருந்த முரண்பாடுகளைப் பற்றியும் குறிப்பாக ஈர்க்கப்பட்டிருந்தார்கள். ஐரோப்பிய இலக்கிய வளர்ச்சி வரலாற்றில் நமது இளம் இலக்கியம் ஓர் அற்புதமான தோற்றமாக இருந்து வருகிறது. இத்தனை வக்தியுடன், இத்தனை வேகத்துடன், இத்தனை மகத்தான, வலுவான ஆற்றல் ஒளியுடன் வேறெந்த மேற்கத்திய இலக்கியமும் உயிர்பெற்றெழவில்லை. உயர்வான, உலக அங்கீகாரம் பெற்ற இலக்கியங்களை ஐரோப்பாவில் யாரும் படைக்கவில்லை.

நமது பெருமை நமது இலக்கியமே; நாடு என்ற ரீதியிலே நாம் படைத்தவற்றில் அதுவே தலையாய சிறப்பு வாய்ந்தது. நமது மெஞ்ஞானம் அனைத்தும் அதில் உள்ளது. ஆன்மாவின் மகத்தான வானசஞ்சாரங்களின் குறிகள் அதில் உள்ளன. மாயமான வேகத் தில் தோன்றி யுள்ள இந்த அற்புதமான கோயிலில் மகாவலிமை படைத்த மனங்களும் தூயஅழகுள்ள இதயங்களும் - உண்மைக் கலைஞர்களின் மனங்களும் இதயங்களும் - இன்றைய நாள்வரை ஒளி பொழிந்தவாறுள்ளன. தாங்கள் உணர்ந்து அனுபவித்தவற்றை அவர்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் ஒளிபாய்ச்சிக் காட்டுவதினால் அவர்கள் நம்மைப் பார்த்துக் குரல் கொடுக்கிறார்கள். எங்களுக்கு உத்வேக மூட்டித் தூண்டியவர்கள் மக்களே; எனவே மக்களை நெசியுங்கள் என்ற மனிதகுலம் முழுவதற்கும் முக்கியமான விஷயங்கள் அடிக்கடியும் வலியுறுத்தியும் ஒலித்தன. மனிதனைப் பற்றிப் பேசுவது இந்த இலக்கியத்தின் தனிச்சிறப்பாகும். *




## பாரதியார் கதை

[சென்ற வார தொடர்ச்சி]

# சங்கீதம் படிக்கப்போன கழுதையின் கதை

## மாணிக்கஞ் செட்டி, மானி அய்யனை நகைத்தது

கேளாய், கர்வம் பிடித்த மதுகண்டிகையென்ற குயிற்பெண்ணே! பல வருஷங்களின் முன்பு மதுரை மாசி வீதி மளிகை மாணிக்கஞ் செட்டி என்றொருவன் இருந்தான். அவனுடைய தந்தை மளிகை வியாபாரஞ் செய்து கடன்பட்டு வீடு வாசலையிழந்து ஏழ்மையிலே இறந்து போனான். பின்பு மாணிக்கஞ் செட்டியின் தாய் கடலைச் சுண்டலும், தோசையும் விற்றுச் செட்டாகக் குடித்தனம் பண்ணித் தன் பிள்ளையை வளர்த்து வந்தாள். மாணிக்கஞ் செட்டிக்குப் பத்து வயதானவுடன் அவனை ஒரு பெரிய வியாபாரி தனது கடையிலே மாதம் அரை ரூபா சம்பளத்துக்கு வைத்துக்கொண்டான். இவன் தாயாரிடமிருந்து செட்டு, கருத்து முதலிய நல்ல குணங்களைப் பயின்றவனாதலால், பெரிய வியாபாரிக்கும் இவன் மேலே தயவும் நம்பிக்கையும் உண்டாயின. பெரிய வியாபாரிக்குப் பிள்ளையில்லை. ஒரே பெண். அவள் பெயர் மரகதவல்லி. நாளடைவில் மாணிக்கஞ் செட்டியை வியாபாரி தன் கடையில் பங்காளியாகச் செய்து வைத்தான். அவன் இறந்த பிறகு உடைமையெல்லாம் மருமகனுக்கே வந்துவிட்டது. மதுரை மாசி வீதி மளிகைக் கடை மாணிக்கஞ் செட்டி என்று ப்ரக்யாதி ஏற்பட்டு விட்டது. இந்த மாணிக்கஞ் செட்டியிடம், பதினாறு வயதுள்ள மானி அய்யன் என்ற பார்ப்பராப் பிள்ளை ஒருவன் வந்தான்.

''ஐயரே, என்ன வேண்டும் ?'' என்று செட்டி கேட்டான்.

''தங்களுடைய கடையிலே எனக்கொரு வேலை போட்டுக் ,கொடுக்க வேண்டும்'' என்று சிறுவன் சொன்னான்.

''உனக்கென்ன தெரியும் ?''

''எனக்கு எண் சுவடி முழுதும் நன்றாகத் தெரியும். கணக்குப் பதிவு தெரியும். கூடியவரை எழுதப் படிக்கத் தெரியும்.''

இதைக் கேட்டவுடனே செட்டி நகைத்தான். ''பார்ப்பாரப் பிள்ளைகள் வந்தால் அவர்களுக்கு ஒரு விஷயம் தெரியாதென்று சொல்லும் வழக்கமே கிடையாது. எதுவும் தெரியும். ஐயரே, போய்வாரும். இவ்வளவு தெரிந்த பிள்ளைகள் நம்மிடம் வேலைக்கு வேண்டாம்'' என்று சொன்னாள்.

''சரி'' என்று மானி அய்யன் வெளியிற் போனான். ''இங்கே வாரும், ஐயரே'' என்று மாணிக்கஞ் செட்டி திரும்பவும் அவனைக் கூப்பிட்டான். சிறுவன் திரும்பி வந்தான். ''ஐயரே! நீர் முந்திச் சித்திரை வீதியில் முருகச் செட்டியார் கடையில் இருக்கவில்லையா'' என்று செட்டி கேட்டான்.

மானி- ''ஆம்'' என்றான்.

செட்டி - ''அங்கிருந்து ஏன் வெளியேறி விட்டீர் ?''

மானி - ''எனக்கும் முருகச் செட்டியாருக்கும் குணம் ஒத்துவரவில்லை.''

செட்டி- ''அதென்ன விஷயம் காணும் ?''

மானி- ''நம்முடைய குணம் அவருக்குப் பிடிக்கவில்லை. அவருடைய குணம் எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்.''

செட்டி,''அதுதான் என்ன விஷயம் ?'' என்று கேட்டான்.

மானி-''அதை இவ்விடத்தில் விளங்கச் சொல்வதில் ப்ரயோஜனம் இல்லை.''

செட்டி-''ஏன்? குற்றம் உம்முடையது தானோ?''

மானி-''என்மேல் ஒரு குற்றமுமில்லை. ஒரு நாள் என்னைக் கடையில் வைத்துவிட்டு வெளியே போனார். அவருடைய மகனும் அன்று கடைக்கு வரவில்லை. கடையில் என்னைத் தவிர வேறு யாருமே கிடையாது. இப்படியிருக்கையில் சங்குத்தேவன் என்ற மறவன் வந்து, ''செட்டியார் எங்கள் வீட்டிலேயிருக்கிறார். ஐந்து துலாம் சர்க்கரை வாங்கிக்கொண்டு வரச் சொன்னார். அவருடைய சொந்தச் செலவுக்கு வேண்டுமாம். தனது பற்றென்று எழுதச் சொன்னார்'' என்றான். அந்தச் சங்குத்தேவன் அந்தச் செட்டியாருடன், உயிருக்குயிரான ஸ்நேகம் என்பதும் எனக்குத் தெரியும். நான் எப்படிக் கொடுக்காமலிருப்பது? செட்டியாரிடம் நேரிலே போய் கேட்டுக் கொண்டு செய்யலாமென்றால், கடையை யாரிடம் ஒப்புவித்து விட்டுப் போவது? மறவனிடம் ஒப்புவித்துவிட்டு வரலாமென்றாலோ ஐந்து துலாம் சர்க்கரைக்கு நம்பக்கூடாத மனிதனிடம் கடையை விட்டு விட்டு வரலாமா? நான் சர்க்கரையைக் கொடுத்து விட்டேன். செட்டியார் வந்தார். 'சங்குத் தேவனுக்குச் சர்க்கரை கொடுத்தாயா?' என்று கேட்டார். 'ஐந்து துலாம்' என்றேன். 'யாருடைய உத்தரவின் மேலே கொடுத்தாய் ?' என்றார். 'உங்களுடைய உத்தரவின் மேலே' என்றேன். ''நான் எப்போது உன்னிடம் உத்தரவு கொடுத்தேன் ?'' என்றார். 'சங்குத்தேவனிடம் உத்தரவு கொடுத்தேன் ?'' என்றார். 'சங்குதேவனிடம் உத்தரவு கொடுத்ததாக அவன் சொன்னான்' என்றேன். 'அவன் சொன்னால் உனக்குப் புத்தி எங்கே போச்சுது ?' என்றார். எனக்குக் கொஞ்சம் கோபம் வந்துவிட்டது. ''என் புத்தியைப் பற்றிப் பேச்சில்லை. உம்முடைய ஸ்நேகிதன் தானே அவன்? பொய்சொல்ல மாட்டானென்று நினைத்துக் கொடுத்து விட்டேன். குற்றமாக இருந்தால் என்மேல் பற்று எழுதிவிடலாம்'' என்று சொன்னேன்.

முருகச் செட்டிக்கு என்மேலே நெடுநாளாகக் கோபம். சிதம்பரத்திலிருந்து வந்திருக்கும் அவருடைய மைத்துனனை என்னுடைய ஸ்தானத்துக்கு வைத்துவிட வேண்டுமென்று அவருக்கு வீட்டிலே போதனை ஏறிவிட்டது. என்னை வெளியே போகச் சொல்வதற்கு என்ன உபாயம் செய்யலாமென்று பல நாளாக யோசனை செய்து வந்தார். இதனால் நான் மரியாதையாகச் சொல்லிய வார்த்தையை அவர் அதிகப்பிரசங்கித்தனமென்று பாராட்டி 'ஐயரே! நாளை முதல் வேறு கடையிலே வேலை பார்த்துக் கொள்ளும். இன்று மாலை வீட்டுக்குப் போகும்போது சம்பளம் கணக்குத் தீர்த்து வாங்கிக் கொண்டு போகலாம்' என்று சொன்னார். நான் சரியென்று விலகிவிட்டேன். இவ்வளவுதான் நடந்த சங்கதி.

தொடரும்....

# நெருப்பு மழை

வன்னேரி ஐயா

“அம்மா.. பசிக்குதணை..”
மாலதி மறுபடியும் அனுங்கவே சாரதாவுக்கு கோபம் வந்தது. அடுத்த கணமே ‘பாவம் குழந்தை பசி தாங்குமே?’ என எண்ணியபடி தன் சீற்றத்துக்காக வருந்தினாள்.

அண்டை ஊர்களிலெல்லாம் உக்கிரப் போர் ஆரம்பித்து, அங்கிருந்து விரட்டப்பட்ட மக்களும் இங்கு வந்து முகாமிட்ட பின்னர் உணவுத்தட்டுபாடு நிலவியது. கடந்த பல வாரங்களாக நிவாரண உணவு லொறிகளும் வரவில்லை. ஊர்க்கடைகளில் இருந்த பொருட்களும், மக்களின் கையிருப்பும் கூட தேய்ந்து விட்ட நிலையில் ஒரு நேரம் தான் சாப்பாடு என்றாயிற்று. மீன்பிடித் தொழிலுக்கும் எவரும் போக முடியாமையினால் கறிபுளி பாடு பெரும் பிரச்சினையாக இருந்தது. மண்எண்ணெய்த் தட்டுப்பாட்டினால் தோட்டப் பயிர்ச் செய்கையுமின்றி மக்கள் வருவாய்க்கும், உணவுக்கும் பெரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

சாரதாவின் கணவன் காண்டீபன் நல்ல உழைப்பாளி. தனது அயராத உழைப்பினால் மனைவியையும் மூத்தவள் மாலதியையும், கைக்குழந்தையையும் ஓரளவு கஷ்டமின்றி வாழவைத்துக் கொண்டிருந்தான். எனினும் கடந்த பிரசவத்தின் போது கையிருப்பு எல்லாம் தேய்ந்து போய் விட்டது. கடைசி நேரத்தில் சத்திர சிகிச்சை மூலம் தான் குழந்தையை பிரசவிக்க வேண்டுமென்று மருத்துவர் கூறியதும் அவன் கலங்கிப் போய் விட்டான். காரணம் வன்னியிலே சத்திரசிகிச்சை செய்யும் வாய்ப்பு இருக்கவில்லை. யாழ்பாணத்துக்கோ, வவுனியாவுக்கோ போக முடியாத படி யுத்த மேகங்கள் சூழ்ந்திருந்தன. மிகுந்த சிரமத்தின் மத்தியில் இருதரப்பிலும் பாஸ் அனுமதி பெற்றுத்தான் வவுனியாவுக்கு போக கிடைத்தது. அதுவும் சாரதாவுக்கு மட்டும்தான் கிடைத்தது.

அவள் போய் வரும் வரை காண்டீபன் அனலிடப்பட்ட புழுப் போல தவித்தான். தொலைத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தன. ஒருவாரம் கழித்து ஐ. சி. ஆர். சி கப்பல் மூலம் சாரதா குழந்தையுடன் மீண்டு வந்த போது அவன் அடைந்த குதூகலத்திற்கு அளவேயில்லை.

“கடவுள் கைவிடவில்லை. மறுபடியும் என்னிடம் உன்னைச் சேர்த்திட்டார்...”

“உண்மையான அன்பு கொண்டவர்களை ஆண்டவன் ஒருநாளும் பிரிக்கமாட்டான்...’ கணவனின் கைகளை அன்பாக பற்றிய படி சாரதா கூறிய போது காண்டீபனின் மனதும் உருகியது.

மிகுந்த பொருளாதாரக் கஷ்டத்தின் மத்தியிலும் ஓடி ஓடி ஏதாவது சம்பாதித்து குறைவின்றி குடும்பத்தைக் கவனித்தான் காண்டீபன். காட்டுக்கு வேட்டைக்கு போய் கோழியும் முயலும் பிடித்து வருவான். சாரதா உருகிப் போவாள். “ஆபத்தான காலம். காடு கரம்பை எல்லாம் இராணுவ நடமாட்டங்கள் ஏதாவது எசக்கு பிசக்காக நடந்தால்.... இனி ஒரு நாளும் காட்டுக்கு போகாதையுங்கோ...”

“நீ தானே சொல்லுவாய் கடவுள் கைவிட மாட்டார் எண்டு...”

“இப்ப ஊருலகத்தில நடக்கிற அவலச் சாவை பார்க்கிற போது கடவுள் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறாரோ எண்டு தான் தோன்றுது...”

“கடவுள், மதம் எல்லாம் மனிதனாலைதான் உருவாக்கப்பட்டவை எண்டு ஈ.வே.ரா.பெரியார் சொல்லுவார்... மனிதனை நெறிபடுத்த எண்டு உருவான மதங்கள் எல்லாம் மதம் பிடிச்சு அலையுது. மத தத்துவங்களை கைவிட்டுவிட்டு சிலைகளைத்தான் கடவுளெண்டு நினைக்கிற காலமாக மாறிப் போச்சு... ஜீவகாருண்யத்தை கௌதம புத்தர் போதித்தார்... இவங்கள் விலங்குகளிலை காட்டுற பரிவைகூட தமிழரிலை காட்டவில்லை. எத்தனை அப்பாவித் தமிழர் செத்தாலும் பரவாயில்லை. ஒரு போராளி கூட மிஞ்சக் கூடாதெண்டு கண்மூடித் தாக்குகிறார்கள்...”

“ம்... எப்பதான் இந்த சண்டை முடியப் போகுதோ தெரியல்லை... எப்ப பார்த்தாலும் பயந்தபடி இருக்க வேண்டியிருக்கு...”

“ஏதோ ஒரு கட்டத்தில் பொடியள் மடக்கி அடிச்சு விரட்டுவாங்கள். அது தான் இப்ப எங்கள் எல்லோரையும் தங்களோட சேரச் சொல்லி நிக்கிறாங்கள்... குடும்பகாரரையும் வரட்டாமாம்.. பொடியள் கட்டாயம் சேரவேணுமாம்...” காண்டீபன் யோசனையுடன் கூறினான்.

“நீங்களும் போனா எனக்கு பயம்... பிள்ளைப் பெறுவைப் பற்றி அவங்களிடம் சொல்லுங்கோ... முப்பது வயதுக்குள்ளை கட்டாயமாம்...” சாரதா கூறினாள்.

“ஒரு பக்கம் பார்த்தா அவர்கள் சொல்றதும் நியாயம்தான். இவ்வளவு வருசம் போராடி விட்டு கடைசி நேரத்திலை கைவிடக்கூடாது. இன்னொருபக்கம் பார்த்தா எல்லாப் பக்கத்தாலையும் சுத்திவளைச்சுக் கொண்டு வாறாங்க... கிளிநொச்சியும் பறிபோயிட்டுது. கொஞ்சம் தீர்க்க தரிசனமாக சிந்திக்க வேண்டும்...” காண்டீபனின் கூற்று சாரதாக்கும் நியாயமாகவேபட்டது.

“ஓம் அதுதான்... இந்தியாவும் எமக்கு எதிராகவே செயல்படுது... ராஜீவ் கொலையை இன்னும் அவங்கள் மறக்கலை... புலியை பழிவாங்கிறதெண்டு கங்கணம் கட்டிக் கொண்டு எல்லா உதவிகளையும் செய்யுது. தமிழ் நாட்டு மக்களின்ர ஆதரவு இருந்தாலும் ஆட்சியிலுள்ள வையின் ஆதரவு முழுமையாக இல்லை. முத்துக்குமாரன் தொடங்கி எங்களுக்காக அவங்கள் தீக்குளிக்கிறாங்க... நாங்கள் ஒருத்தராவது தீக்குளிச்சமா?”

“அப்படிச் சொல்லாத சாரதா... இங்கே சும்மா தீக்குளிக்கிறதில யாருக்கும் லாபமில்லை. அப்படி ஓர்மம் மிக்க பிள்ளையள் தான் தற்கொலைப் படையாகப் போய் சாதனை புரியுது. எனக்கெண்டா இந்தக் கட்டத்திலையாவது நிபந்தனையற்ற போர்நிறுத்தத்துக்கும் பேச்சு வார்த்தைக்கும் போகலாம். மறுக்கிற இலங்கை அரசை ராஜ தந்திர ரீதியிலை அணுகலாம்...”

“எது எப்படியோ, எங்கடை ஊருக்கு வர முந்தி யுத்த நிறுத்தம் வந்திட்டா சரி... ஒப்பறேசன் செய்த வயிற்றோடு இடம் பெயரேலாது...”

“எங்கட ஊருக்கு வாறதெண்டாலும் இரண்டு மூண்டு மாசம் செல்லும். வன்னேரி ‘பண்டை’ தாண்டி வர எவ்வளவு காலம் பிடிச்சது...”

“திரண்ட மனித வவுவைப் பாவிச்சு போட்ட அந்த அணைக்கட்டையே உடைச்சுக் கொண்டு வந்திட்டாங்கள்... ஆட்பலமும் அவங்களிட்ட இருக்கு... ஆயுதங்களை அவங்கட நேசநாடுகள் அள்ளிக் குவிக்குது. இந்தியா பக்க பலமாக நிண்டு எல்லா உதவிகளையும் செய்யுது. ஆளணியையும் அனுப்பி இருக்கெண்டு செய்தி வருகுது... எனகெண்டா எங்கட ஈழக் கனவு தொலைதூரக் கனவாகிவிடும் போலத் தான் தெரியுது...”

“ஓம் சாரதா... நீ சொல்றதிலையும் நியாயம் இருக்கு... முப்பது வரிசமாக போருக்குள்ளை வாழ்ந்து களைச்சுப் போனம். எங்கட இனம் வேரோட அறுக்கப்பட்டு வருகுது. மரணம், அங்கவீனம், இடப்பெயர்வு எண்டு இனித் தாங்கேலாது... எல்லாத்தையும் இழந்திட்டம். இனி இழக்குறதுக்கு எதுவுமில்லை...”

நாட்கள் நகர்ந்தன. இராணுவ முன்னெடுப்பு வெற்றிப்பாதையில் நகர்ந்து கொண்டிருந்தது. போராளிகள் ஒருபுறமும் அதைவிட அதிகமாக பொதுமக்களும் தினம் தினம் செத்துக் கொண்டிருந்தார்கள்.

கஷ்டங்களுக்கு மத்தியில் உயிர் தப்பியவர்கள், தமது நாட்களை எண்ணிய படி கலங்கினர். எவர் முகத்திலும் மகிழ்ச்சியை காணமுடியவில்லை. கறுத்து கருவாடு பத்தி, முகத்தில் கருவளையம் தோன்றி நிம்மதியான உறக்கமின்றி வெயிலும் மழையும், குளிரும் ஒருபுறமும், பசி பட்டினி மறுபுறமுமாக தாக்க போருக்குள் வாழ்வை சீர்குலைத்துக் கொண்டிருந்தார்கள்.

மாதங்கள் சில நகர்ந்தன. அந்த கொடிய நாளும் காண்டீபன் சாரதாவின் ஊருக்கும் வந்தது. நெருங்கி வரும் எறிகணை ஓசையும், குண்டு விமானங்களின் பறப்புமாக, இடம்பெயரத் தயாரான நிலைக்கு அவர்களை தள்ளியது.

மழை தண்ணீராய்ப் பொழிவதைத்தான் பார்த்திருக்கிறோம். பனி மழை பற்றியும் கேள்விப் பட்டிருக்கிறோம். இது என்ன நெருப்பு மழை?... நெருப்பு மழையாக பொழியுமா?... ஆம் என்கிறார்கள் வன்னியில் இறுதிக்கட்டப் போரில் இறுதி நாட்கள் வரை சிக்குண்டிருந்தவர்கள். அடுத்தடுத்து வந்து வெடித்துச் சிதறும் நவீன ஏவுகணைச் சன்னங்கள், விமானக் குண்டுகள் என ஜீவ மரணப் போராட்டத்தினிடையே தவித்தவர்கள் நெருப்பு மழையைத் தரிசித்திருக்கிறார்கள்.



என்ன அமைதியாக இருந்த வன்னி மண்! வயலும் வயல் சார்ந்த நிலங்களும், குளமும், எந்நேரமும் சிலுசிலு என தண்ணீர் ஓடும் வாய்க்கால்களும், வயலுக்குச் செல்லும் உழவர்களும், பள்ளி செல்லும் சிறார்களும், புல் தரவைகளில் மேயும் ஆடு மாடுகளும், சேற்றில் சுகம் காணும் எருமைக் கடாக்களும், தோகை மயில்களும்... ஓ என்ன இனிமையான வாழ்வு! யாரிடமிருந்தும் அவர்கள் தங்களை விட்டு விலகச் சொல்லிக் கேட்கவில்லை. அதிகார வர்க்கமோ அவர்களை மீட்டெடுக்கும் மனிதாபிமான நடவடிக்கை என்று கூறியபடி அப்பிரதேசமெங்கும் ஆக்கிர மிப்புப் போர் தொடுத்தது.

திடீரென்று வன்னிக் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த மக்கள் கனரக ஆயுதப் பிரயோகங்களால் விரட்டி அடிக்கப்பட்டார்கள். சிலர் அங்கவீனர்களாக, இன்னும் சிலர் மரணத்தைத் தழுவ படைகள் முன்னேறின. பயமும், பீதியும் நிரம்பிய மனதுடன் மக்கள் வதிவிடங்களையும், உடைமைகளையும் ஏன் முதிய உறவுகளையும் கூட விட்டு விட்டு வீதிகளில் இறங்கி இலக்கற்ற போக்கிடத்தை நோக்கி விரைந்தனர். எங்குமே மரண ஓலமும், வெடியோசைகளுமாக... நாசகார யுத்த வெறியூட்டப்பட்ட படையினரிடம் மனிதாபிமானத் தையா எதிர்பார்க்க முடியும்? ஆட்பலமும், ஆயுத பலமுமாக சக்தி மிக்க படைகள் இறுதிக்கட்டத்தில் பலத்த எதிர்ப்புமின்றி முன்னேறி ஊர்களை யெல்லாம் துவம்சம் செய்தன. அந்த ஊர்களில் இருந்த அனைத்துமே சிதைக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் மண்ணோடு மண்ணாகின. நெருப்பு மழை பொழிந்த அந்தப் பகுதி சுடுகாடு போல் காட்சியளித்தது இன்று இவர்களது ஊர்தானா?

(நெருப்பு மழை தொடரும்)

# நரியும் மனோவசிய மந்திரமும்

இளஞ்சுடர்

புத்தாக்கம்: கே.கான்



# சதுரங்க ஆட்டக்காரன்

1



ஓர் ஊரிலே பகீரதன் என்று ஒருவன் இருந்தான். அவன் சந்தைகளுக்குப் பொருள்களை எடுத்துச் சென்று வியாபாரம் செய்து வந்தான். எனினும், அவனுக்குப் போதிய வருமானம் கிடைக்காததால் மிகவும் கஷ்டத்துடனேயே வாழ்ந்து வந்தான். அவனுடைய மனைவியின் பெயர் விசாலாட்சி. சத்தியசீலன், நவநீதன் என அவனுக்கு இரு ஆண் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் இள வயதினராய் இருந்தனர்.

பகீரதன் சதுரங்க ஆட்டத்திலே மகா கெட்டிக்காரன். உள்ளூரிலும் வெளியூர்களிலும் அவனுடைய புகழ் கொடிகட்டிப் பறந்தது. அவன் பெருந்தொகைப் பணத்தைப் பந்தயமாக வைத்து விளையாடுவான். விளையாட்டில் எப்போதும் அவனுக்கே வெற்றி கிடைத்து வந்தது.

ஆனால், அவனுடைய மனைவி விசாலாட்சியோ பந்தயத்தால் வரும் பணத்தை வாங்கிக்கொள்ள மாட்டாள். அது ஒரு சூது என்றும், அந்தப் பணம் நியாயமற்ற வழியில் வந்ததால் உண்ணவோ உடுக்கவோ அதனைப் பயன்படுத்தக் கூடாது என்றும் அடிக்கடி சொல்லி வந்தாள். "பொழுது போக்காக வேண்டுமானால் விளையாடுங்கள்; ஆனால், பணத்துக்கு ஆசைப்பட்டோ வறுமைக்குப் பயந்தோ சூதாட்டத்தில் மட்டும் இறங்கிவிட வேண்டாம்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். அவளுடைய நச்சரிப்புத் தாங்க முடியாமல் பகீரதன் அந்தப் பழக்கத்தை விட்டொழித்தான்.

அப்போது அவனுடைய வியாபாரமும் நொடித்துப் போயிருந்தது. கடைசியில் கூழுக்கும் வழியில்லாமற் போய்விட்டது.

ஒரு நாள் விசாலாட்சி, "இப்படியே போனால் பிள்ளைகளின் வயிற்றை நிறைப்பது எப்படி? ஒன்றில் கூலி வேலை செய்யுங்கள் அல்லது ஜமீந்தாரின் மாடுகளையாவது மேய்த்து வாருங்கள்" என்று சொன்னாள்.

மறுநாளே ஜமீந்தாரிடம் சென்று ஏதாவது வேலை தருமாறு கேட்டுக் கொண்டான். தன்னுடைய மாட்டு மந்தையைக் காட்டுக்கு இட்டுச் சென்று மேய்த்து வருமாறு அவர் கூறினார்.

அன்று தொடக்கம் அவன் மாடுகளை மேய்த்து வரலானான். அந்தத் தொழிலால் இப்போது குடும்பத்தின் உணவுப் பிரச்சினை ஓரளவு தீர்ந்தது.

ஒரு நாள் மாடுகளைச் சாய்த்துக் கொண்டு அதிகம் புல் இருக்கின்ற இடத்தைத் தேடி முன்னெப்போதுமே சென்றிராத ஒரு மலைப் பகுதிக்குச் சென்றான். அங்கே ஒரு கற்படாரம் அவன் கண்ணில் பட்டது. மாடுகளைத் தன் பாட்டில் மேயவிட்டு விட்டு அவற்றைக் கண்காணிக்கவென உயரமான ஒரு கற்பாறை மீது ஏறினான். அப்போது யதேச்சையாக அவனுடைய பார்வை மறுபக்கத்துக்குத் திரும்பியது. கீழே ஒரு காட்டாற்று நீர் வீழ்ச்சி தென்பட்டது. அந்த நீர்வீழ்ச்சிக்குப் பக்கத்திலிருந்த மட்டமான ஒரு கல்லின் மீது இருவர் அமர்ந்து சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்ததை அவன் கண்டான்.

மனித வாடையே அற்ற அந்தக் காட்டில் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருப்போர் யார் என்று கூட யோசிக்காமல் விறுவிறுவென கற்பாறையின் மறுபக்கமாக மெல்லக் கீழே இறங்கி, அவர்கள் இருக்கும் இடத்தை அடைந்தான். அவர்கள் மனித உருவில் இருந்த தேவதைகள் என்று அவனுக்குத் தெரியாது.

ஓர் ஆட்டம் முடியும் வரை காத்திருந்த பகீரதன், "உங்களோடு நானும் ஒரு முறை விளையாடலாமா?" நீண்ட நாட்களாக சதுரங்கம் விளையாடாததால் பொங்கிப் பெருகிய ஆர்வத்தை அடக்க முடியாதவனாய் அவன் கேட்டான்.

"பந்தயமாக எவ்வளவு வைக்கப் போகிறாய்?"

**-ஸீயெம்மே அமீன்**

"பந்தயம் வைத்து விளையாடினால் அது சூதாகி விடுமே"என்று அவன் சொன்னான்.

"நாம் உன்னைப் பரீட்சிப்பதற்காகக் கேட்டோம். அதில் நீ வெற்றியடைந்துவிட்டாய்.........நீ மிக நல்லவனாகத் தோன்றுகிறாய். சரி, வா விளையாடுவோம்."

மானிடனோடு விளையாடுவதற்குத் தேவதைகள் ஆர்வம் காட்டின.

பகீரதன் மிகவும் கெட்டித்தனமாக விளையாடினான். குதிரைகளையும் யானைகளையும் அரசனையும் தேர்களையும் மாற்றி மாற்றி வைத்து மிக நுட்பமாகவும் தந்திரமாகவும் விளையாடினான். மற்றத் தேவதை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தது. கடைசியில் முடிவு வந்தது. பகீரதனுக்கே கிடைத்தது வெற்றி.

அதன் பிறகு மற்ற தேவதையை விளையாட அழைத்தான். நீண்ட நேரமாக இருவரும் விளையாடினார்கள். இம்முறையும் வெற்றி அவனுக்கே கிடைத்தது.

இப்படி இருதேவதைகளோடும் மாறி மாறி விளையாடினான், ஊன், உறக்கம், சுற்றுச் சூழல், மாடுகள், காலம், இடம் எல்லாவற்றையும் மறந்து விளையாட்டில் மூழ்கினான். எவ்வளவு நேரம் விளையாடினோம் என்று அவனுக்கே தெரியவில்லை. திடீரென அவனுக்கு வீட்டு நினைவு வந்தது.

அவைகளை நோக்கி, "இனி எனக்கு வீடு செல்ல அனுமதி தாருங்கள், இப்போது மாலையாகிவிட்டது. நாளைக்கும் விளையாடுவோமா?" என்றான்.

"பகீரதா, சந்தோஷமாகப் போய் விட்டு வா" என்று அவர்கள் கூறினர்.

"என்னுடைய பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று அவன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"நாங்கள் தேவதைகள், எமக்கு எல்லாம் தெரியும். எங்களுடைய பொழுது மிக இன்பமாகக் கழிவதற்கு நீ காரணமாக இருந்தாய். அதனால், நாம் உனக்கு 50,000 தங்க நாணயங்களை அன்பளிப்பாகத் தருகிறோம். ஆனால், உன்னிடம் ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும். அதாவது, நீ மனிதர்களின் காலக் கணிப்பின்படி ஐம்பது ஆண்டுகள் எம்மோடு விளையாடியிருக்கிறாய். காலம் உன்னை விட்டுவிட்டுப் பின்னே சென்று விட்டது. எங்களுடைய செல்வாக்குக்கு நீ உள்ளாகியதால் கிழவனாகாமல் இன்னும் இளமையோடு இருக்கிறாய். ஆனால், ஒரு நிபந்தனை: நீ கிராமத்தை அடைந்த பிறகு எம்மோடு சதுரங்கம் விளையாடியதைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது. மேலும், நீ யார் என்றும் சொல்லக் கூடாது. தப்பித் தவறிச் சொல்லிவிட்டால் மறுநிமிடமே நடக்கக் கூடாதது நடந்துவிடும். சரி, போய் வா" என்று தேவதைள் கூறிவிட்டு ஆகாயத்திலே பறந்து பார்வையிலிருந்து மறைந்து விட்டன. "என்ன நடந்துவிடும்?" என்று கேட்பதற்குள் அவைகள் சென்றுவிட்டன.

(தொடரும்)



## இளஞ்சுடர்

தயாரிப்பு : தினா

தம்பதிகளான குரங்குகள் இரண்டு குட்டிகளைக் கிளையில் தாவி விளையாடச் சொல்லிவிட்டு, பேன் பார்த்துக் கொண்டிருந்தன.

பேச்சுவாக்கில் பெண் குரங்கு கேட்டது: மெய்தானா அத்தான், மனிதர்கள் நம்மில் இருந்து பிறந்தவர்களாம் என்று.

## வாலுக்குப் போவதெங்கே?



"சும்மா போடி, உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?" என்று அதட்டியது ஆண் குரங்கு.

"என்ன அத்தான் கோபிக்கிறீர்கள்! சில மனிதர்கள் அப்படித்தானே பேசிக் கொள்கிறார்கள்; நம்மையும் அவர்களையும் பார்க்கும்போது, எனக்கும் சந்தேகமாகத்தான் இருக்கிறது" என்று சொன்னது பெண் குரங்கு.

"என் கோபத்தைக் கிளறாமல் சும்மா கிட. மனிதர்கள் ஆசை மிக்கவர்கள். எதிலும் தங்களுக்குப் பங்கிருக்கிறது என்று சொல்லிக் கொள்ளாவிட்டால், அவர்களுக்குப் பத்தியப்படாது.நான் சொல்கிறேன் கேள்; மனிதர்கள் வால் வைத்துக்கொண்டாலும், நம்மைப் போல கிளைக்குக் கிளை தாவப் பழகிக்கொள்ள மாட்டார்கள்" இப்படி இறுமாப்போடு சொன்னது ஆண் குரங்கு.

*மர்ஹூம் மஷ்ஹூர்*

## விடுகதைகள்!



01. ஒரு முழ மூங்கில், ஒய்யாரக் கீதம். அது என்ன?.
02. ஒருவன் போகிறான், எல்லோரும் அவன் பின்னே. அவன் யார்?
03. ஒற்றைக் கால் குருவி மணி,மணியாக முட்டையிடும். அது என்ன?
04. ஒரு துரைக்கு இரண்டு தொப்பிகள். அது என்ன?
05. ஒற்றைக்கால் நாராயணி ஓடையில் மீன் பிடிக்கிறாள். அது என்ன?
06. ஒண்டிக்கால் தபசிக்கு நூற்றுக்கு மேல் கை. அது என்ன?
07. ஒரு பக்கம் பல்லால் ஒன்றை ஒன்பதாக்கும். அது என்ன?
08. ஒரு முழக் கயிற்றில் ஒரு வீடு சொந்தம், ஊரெல்லாம் கூடி உண்டாக்கி வைத்த பந்தம். அது என்ன?
09. ஒற்றைக் காதான் ஓடி ஓடி அடைகிறான், அவன் யார்?
10. ஒரு நாடு போ என்கிறது. அதன் தலை நகரோ வா என்கிறது. அவை என்ன?
11. ஒருவனைக் கூப்பிட்டால் ஊரையே கூட்டுவான். அது எது?
12. ஒரு வீட்டிற்கு இரண்டு வாசல்கள். அது என்ன?
13. ஒரு தட்டில் ஆயிரம் ஓட்டைகள். அது என்ன?

### விடைகள்:

1. புல்லாங்குழல் 2. எறும்பு 3. சோளம்
4. உப்புக் கடலை 5. கொக்கு 6. ஆலமரம்
7. ரம்பம் 8. தாலிக் கயிறு 9. ஊசி
10. போலந்து வார்சா 11. காகம் 12. மூக்கு
13. சல்லடை

**முதல் பகுதியின் சுருக்கம்**

விசுமடு வீதியால் இடம் பெயர்ந்து தேராவிலை அடைந்தாள் கலை அரசி. அவள் ஏற்கனவே யுத்தத்தில் கணவனை இழந்தவள். செஞ்சோலைத் தாக்குதலின் போது ஒரு காலை இழந்த கலை அரசி ஒரு கர்ப்பிணியும் கூட. வயிற்றில் குழந்தையுடன் தனிமரமாகி அவள் பட்ட கஷ்டங்களைக் கண்டு வருந்துகிறான் காண்டீபன் என்ற போராளி. போரில் காண்டீபன் இறந்து போன செய்தி கலை அரசியை இடியாகத் தாக்குகிறது. கலையரசி இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலை அடைகிறாள். அங்கு அசோக் என்ற தாடிக்கார இளைஞன் ஒருவரின் உதவி கிடைக்கிறது. அவளுக்கு பிரசவ நாளும் நெருங்கி விட்டது.

**சென்றவாரத் தொடர்ச்சி**

நான் அதை சரியாக புரியாமல் இருந்துவிட்டேன். ''அண்ணா... அண்ணா... அசோக் அண்ணா....'' என்று கூப்பிட்டேன். அவர் திரும்பிக் கூடப் பார்க்காமல் போய்விட்டார். எழும்பி நடப்பம் என்று முயற்சி செய்தேன். என்னால இயலாமல் போய்விட்டது. எனது பிரசவ நாளும் நெருங்கிவிட்டது. அண்ணா கோபப்பட்டதில் நியாயம் இருக்கு. அந்த அளவுக்கு என் நிலைமையை புரிந்திருக்கிறார். அந்த அளவுக்கு ஒரு விபரமும் இல்லாதவளாக இருக்கின்றேனே! சீ.... எனக்கே என்னைப் பிடிக்கவில்லை என்று என்மனம் சொல்லிக் கொண்டிருக்க ஒரு அம்மா வந்தா. என்னைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு எனது கொட்டிலுக்குள் கொண்டு போய் விட்டுவிட்டுச் சொன்னா, ''இப்படியான நேரத்தில் உடம்பை கவனமாகப் பார்க்கவேணும். ஏன்... அந்தப் பெடியன் சொல்லுறதைக் கேட்டு நடவேன். அவன்தான் என்னை அனுப்பி விட்டவன். அசோக் உன்னில நல்ல பாசம் வைத்திருக்கிறான். அவனுக்கு பொம்பிளைச் சகோதரமும் இல்லை. உன்னை அவன் தன் தங்கச்சியாகப் பார்க்கிறான். அவன் உன்னைக் கவனமாகப் பார்த்துக் கொள்வான். அவன் சொல்லுறதைக் கேட்டு நீ நடந்து கொள்வதுதான் நல்லது'' என்று சொல்லிவிட்டுச் சென்றார். பின்னர் ஒரு தம்பி தண்ணி அள்ளி வைத்துவிட்டுக் கேட்டான், ''ஏன் அக்கா கேட்டால் நாங்கள் செய்யமாட்டோமோ? அசோக் அண்ணா கடும் கோபமாக இருக்கிறார். இனிக் கதைக்கவும் ஏலாது'' என்று சொல்லிச் சென்றான்.

அன்று முழுக்க அண்ணா வரவேயில்லை. இரவு ஒரு தம்பி வந்து சாப்பாடு தந்துவிட்டுச் சொன்னான், ''அக்கா அண்ணா சாப்பிடவும் இல்லை. கவலையுடன் இருக்கிறார்'' என்றான். என் மனம் அதை ஏற்கவில்லை. என் சாப்பாட்டையும் எடுத்துக்கொண்டு அண்ணா இருந்த கொட்டிலுக்குப் போய் ''அண்ணா.... அண்ணா...'' என்று கூப்பிட்டேன். அவர் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார். என்னைக் கண்டதும் மறுபக்கம் திரும்பிப் படுத்து விட்டார். ''அண்ணா நீங்கள் ஏன் சாப்பிடாமல் படுத்திருக் கிறீங்கள் சாப்பிடுங்கோ.'' என்றேன். அவர் எதுவும் பேசாமல் கிடந்தார். ''ஏன் என்னிலதானே இவ்வளவு கோபம். அதுக்கு ஏன் உங்கள் உடம்பை சாகடிக்கிறீங்கள்'' என்றேன்.

''ஏன் என்னில இவ்வளவு அக்கறை....'' என்றார்.

''நான் உங்களில அக்கறை வைத்திருப்பது என்ர விருப்பம்'' என்றேன்.

''அதே மாதிரித்தான் நானும் உங்களில் அக்கறை வைத்திருந்தால் தான் இவ்வளவு கோபப்பட வேண்டியிருக்கு. அதுவும் கை நீட்டிப்போட்டேன். அது என்ர பிழைதான். நான் இப்படிச் செய்திருக்கக் கூடாது. என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ...'' என்றார்.

''இது என்ன கதை இப்படி கதைக்காதேங்கோ! நீங்கள் எனக்கு அண்ணா தான் நான் உங்களுக்கு தங்கச்சிதான். நீங்க அடிச்சா நான் அடிவாங்குவன் அது என்ர பிழைக்காகவும் என்ர நன்மைக்காகவும் தான் நீங்கள் எனக்கு அடிக்க வந்தனீங்கள். நீங்கள் அதைப் பற்றி ஒன்றும் பெரிசுபடுத்திப் பார்க்க வேண்டாம். என்னை நீங்கள் உங்கட சகோதரி மாதிரி நினைக்கிறதே பெரிய விசயம். நான்தான் உங்களிட்ட மன்னிப்புக் கேட்கவேணும். நீங்க இப்ப சாப்பிடுங்கோ'' என்றேன்.

''இல்லை எனக்கு பசிக்கேல...'' என்றார்.

நீங்க சாப்பிடாட்டி நானும் சாப்பிட மாட்டேன். நீங்க உடம்பைக் கெடுக்காதேங்கோ. நான் நீங்க கஷ்டப்படுகிறதை பார்த்துக் கொண்டிருக்கிற நிலையில் இல்லை. இது விளங்கித்தான் நீங்க கதைக்கிறீங்களா.... இல்ல நீங்க சாப்பிட வேணும். அதுதான் எனக்கு முக்கியம்'' என்றார்.

''சரி நான் சாப்பிடுகிறேன்....'' என்றார்.

''இந்தாங்கோ. இதில எடுத்துச் சாப்பிடுங்கோ''

''வேண்டாம். எனக்கு சாப்பாடு இருக்கு. நீங்க கொண்டு போய்ச் சாப்பிடுங்கோ...'' என்றார்.

''இல்லை இதில எடுத்துச் சாப்பிடுங்கோ...'' என்றேன்.

''சரி தாங்கோ....'' என்று வாங்கிச் சாப்பிட்டார்.

பின்னர் நான் என் கொட்டிலுக்குப் போய் சாப்பிட்டேன். இப்படியே என் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் ஒரு பெரிய பையில் சாமான்கள் கொண்டு வந்து தந்துவிட்டுச் சொன்னார், ''இது நான் வாங்கவில்லை. ஒரு அக்காவை பிடிச்சுத்தான் வாங்கினேன். இதைப் பாருங்கோ. இதைவிட வேறு ஏதும் தேவை என்றால் சொல்லுங்கோ. பிறகு வாங்கித்தாறேன்'' என்று சொல்லி சென்றார். பையைத் திறந்து பார்த்தேன். அம்மாடியோ...! எவ்வளவு சாமான்கள் என் பிள்ளைப் பெறுவுக்கு என்ன வேணுமோ அவ்வளவு சாமான்களும் இருந்தன. என் சொந்த அண்ணன் இருந்தால் கூட இப்படிச் செய்யமாட்டான். அந்த அளவுக்கு என் தாடி அண்ணா செய்தார்.

என் பிரசவ நாளும் நெருங்கியது. ஆஸ்பத்திரியில் போய் இருப்பது கஷ்டம் அங்கு இருப்பதைவிட இங்கு இருப்பது பாதுகாப்பு. ஆஸ்பத்திரிக்குள் நெடுகலும் ஷெல் விழும். வீட்டில் இருந்து காயப்பட்டு உயிர் பிழைத்தவர்கள் கூட ஆஸ்பத்திரியில் இருந்து ஷெல் விழுந்து இறந்திருக்கிறார்கள். என்ன செய்வது? பிரசவத்துக்குப் பயப்படுவதா? அல்லது ஷெல்லுக்குப் பயப்படுவதா? இதுமுதல் பிரசவம். அதனால்தான் எனக்குக் கூட பயமாக இருந்தது. தாடி அண்ணா விடம் சொன்னால் எல்லா ஒழுங்குகளும் செய்வார். ஆனால் எப்படி ஒரு பெண்ணால் எல்லா விடயங்களையும் சொல்ல முடியும்.

அந்த நாள் வந்துவிட்டது. என் உடல் நிலையும் மாற்றமாகத்தான் இருந்தது. ஆஸ்பத்திரிக்கு நாலு கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும். ஆனால் ஆஸ்பத்திரியில் இருக்க முடியாதே! அன்று பகல் ஒரே ஷெல்லடியாக இருந்தது. மாலை நேரம் கொஞ்சம் குறைவாக இருந்தது. கிட்டத்தட்ட ஏழு மணியளவில் தொடங்கியது ஷெல்லடி. நாங்கள் இருந்த இடமெல்லாம் சுடுகாடு தான். எவருமே வெளியில் இல்லை. எனக்கு வயிறு வலிக்கத் தொடங்கியது. 10 மணியிருக்கும். எனக்கு கடுமையாக வலிக்கத் தொடங்கியது. ஷெல்லடியும் அதிகமாக இருந்தது. எவரும் என்னிடம் வரவுமாட்டார்கள். யார்தான் இந்த நிலைமையில் வருவார்கள். வெளிக்கிட்டால் சாவுதான். அதுமட்டும் நிச்சயிக்கப்பட்டது. அருகில் நிறையப் பேர் இருந்தார்கள். ஆனால் கூப்பிடக் கூப்பிட எவரும் வரவில்லை. எனக்கு ஏலாமல் போக, ''அண்ணா...!'' என்று கத்தினேன். அவ்வளவுதான் என்சத்தம் தாடி அண்ணாவுக்கு கேட்டிருக்க வேண்டும். எவருமே வராத இடத்துக்கு என் அண்ணா மட்டும் ஓடி வந்தார். என் நிலைமை யை பார்த்து ''என்ன தங்கச்சி.. என்ன செய்யுது?'' என்று கேட்டார்.

''அண்ணா வயிற்று வலி தாங்க முடியவில்லை. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்கோ...'' என்றேன். ஆனால் எதுவுமே செய்யமுடியாது. அண்ணா வெளியில் சென்று எல்லோரின் உதவியும் கேட்டுப்பார்த்திருக்கிறார். ஆனால் எவரும் அந்த நிலைமையில் வெளியில் வரவில்லை. வரவும் மாட்டார்கள் தான். அண்ணா ஓடிவந்து என்னைத் தூக்கினார். மின் வேகமாகக்கொண்டு போய் ஒரு மாட்டு வண்டிலில் கிடத்தினார். அதில் மெத்தையும் போட்டியிருந்ததால் பரவாயில்லை.

அண்ணா தன்னுடன் இருந்த ஒரு தம்பியின் உதவியோடு மாட்டு வண்டியை ஷெல்லடிக்க அடிக்க இழுத்துக் கொண்டு சென்றார். எவ்வளவு பாவம். எனக்காக இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே! இவர்களுக்காக நான் என்ன செய்யப் போகிறேன். ஆஸ்பத்திரியும் வந்தது. ஆனால் ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாக இருக்கவில்லை. சுடுகாடாக இருந்தது. ஷெல் விழுந்து பலர் இறந்து கிடந்தனர். வைத்தியர்கள் எவரும் இல்லை. எல்லோருமே வேறு இடத்துக்கு பாதுகாப்புத் தேடி ஓடி விட்டார்கள். ஷெல்லடி நிற்கவில்லை. ஒருவர் ''ஏன் தம்பி இப்படி இதில நிற்கிறீங்கள்...?'' என்று கேட்டார். அதற்கு தாடி அண்ணா சொன்னார், ''என்னண்டு இந்த நிலை மையில் வீட்டில் வைச்சிருப்பது''

**கச்சேரி சடையன்**

''ஏன் நீ அவளைச் சாகடிக்கப் போறியே...! அவளைக் கொண்டுபோய் வீட்டில வைச்சிரு. யாரும் பக்கத்தில இருக்கிற பொம்பிளையைக் கூப்பிட்டுப் பார். கெதியாக் கொண்டு போ'' என்றார் அந்த பெரியவர். அவரால் தான் என்ன செய்ய முடியும்? திரும்பியும் மாட்டு வண்டியை இழுத்துக் கொண்டு வரும் போது, றோட்டில் ஏதோ தட்டுப்பட்டு வண்டில் அரங்கி விட்டது. என்ன என்று எனக்குத் தெரியவில்லை. அண்ணா சொன்னார். ''அது ஒரு ஆள் செத்துக் கிடக்குது. வண்டில் அவருக்கு மேலால ஏறிப் போட்டுது'' என்றார்.

அப்படியே கஷ்டப்பட்டு ஒருமாதிரி வண்டியை இழுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். எம் வீட்டுக்கு அருகில் எல்லாம் ஷெல் விழுந்திருந்தது. ஒரே புகை மண்டலம். தாடி அண்ணா இருந்த கொட்டிலே இல்லை. இருந்த அடையாளம் கூட இல்லை. நல்ல காலம் அண்ணா அதற்குள் இருக்க வில்லை. எல்லாம் கடவுள் செயல்தான். என்னைக் கொண்டுபோய் பதுங்கு குழிக்குள் கிடத்தினார். எனக்கு வலி இன்னும் அதிகரித்தது. என்னை விட்ட பின் வெளியில் போக வெளிக்கிட்டார். நான் அவர் கையை எட்டிப் பிடித்துக் கொண்டேன். ''என்னம்மா என்ன வேணும்'' என்றார்.

''எனக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் மட்டும் இங்கேயே நில்லுங்கோ. எனக்கு பயமாக இருக்கு'' என்று அழுதேன். அவர் என் மனதை தேற்றினார். கொஞ்ச நேரம் இருந்துவிட்டு சொன்னார் ''யாராவது ஒருவரை கூட்டிக்கொண்டு வந்தால் உங்களுக்கு நல்லதுதானே! எனக்கு இதைப் பற்றித் தெரியாது. கொஞ்சநேரம் இருங்கோ. யாராவது ஒருவரைக் கூட்டி வாறேன்'' என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

பின் சில நிமிடத்தில் ஒரு வயது போன பாட்டி என்றுதான் சொல்ல வேண்டும் அவரை தூக்கி வந்து இருத்தினார். அவர் நடக்கவேமாட்டார். அண்ணாவை பாட்டி ஏசிக்கொண்டிருந்தார். அவர் பாட்டியை கட்டாயப்படுத்தி தூக்கிக் கொண்டு வந்துவிட்டார்.

(தொடரும்)

> யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம் பெற்ற சம்பவங்களை பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்த தொடரில் 'கச்சேரி சடையன்' என்ற புனை பெயரில் வெளி வருகிறது 'புதிய உறவுகள்' என்ற உண்மைக்கதை.



# முகப்பூச்சுக்கள், வாசனைத் திரவியங்களாலும் சரும நோய்கள் ஏற்படலாம்...

கேள்வி: எனது மனைவிக்கு வயது 27. அவரது முதுகும் - கைகளும் கருமையாக இருக்கின்றன. அவர் நைலோன் பிரஷை குளிக்கும் போது உபயோகிப்பதால் இப்படி ஏற்படுகின்றது என்று மருத்துவர் சந்தேகிக்கின்றார். கடந்த மூன்று வருடங்களாக முதுகில் ஒரு வெண்ணிற வட்டம் உள்ளது. அது ஒரு பங்கசு தொற்று என்று கூறிய மருத்துவர், அதற்குப் பூச ஒரு பசையும் - உள்ளே எடுக்க ஒரு மாத்திரையும் தந்தார்; குணமாகவில்லை. ஒரு வருடத்திற்கு முன்னர் ஒரு சருமரோக நிபுணரைக் கலந்தாலோசித்து மருந்து எடுத்தும் பயனில்லை. எனது மனைவிக்கு சூரிய ஒளி பட்டால் அந்த இடம் பகபக வென எரியும் உணர்வு ஏற்படும். பின்னர் அந்த இடம் வீங்கிவிடும். எனது மனைவியின் கோளாறு தீர ஆலோசனை தரவும்.

பதில்: சூரிய ஒளிக்கு உங்கள் மனைவியின் தோலில் - எரிவுக்குணம் ஏற்படுவதும் தோல் வீக்கம் பெறுவதும் - அவருக்கு சூரிய ஒளி ஒவ்வாத் தன்மை ஏற்பட்டிருப்பதைத் தெரிவிக்கிறது. இதனை Photodermatitis மற்றும் தொடர்பிலான Photomelanosis என்று அழைப்பர்.





புற ஊதாக் கதிர்களின் அதாவது - சூரிய ஒளியின் ஒவ்வாத தன்மையால் ஏற்பட்ட சருமநோய் காரணமாக சருமம் கறுத்துப் போதல் என்பது இதன் விளக்கமாகும்.

இதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. சூரிய ஒளிக்கு உடல் கலன்கள் Autoimmune எனப்படும் தமக்குத் தாமே ஒவ்வாமையை ஏற்படுத்தி - இப்படியான கோளாறை உருவாக்கலாம். சிலவேளைகளில் - சில தொற்று கொல்லி மருந்துகள் (Antibiotics), Coal Tar ஆல் தயாரிக்கப்பட்ட பூச்சு மருந்துகள், மன இறுக்கத்துக்கு உபயோகப்படுத்தும் மருந்துகள், நீரிழிவு மாத்திரைகள், மலேரியா தடுப்பு மாத்திரைகள் கூட - சூரிய ஒளி ஒவ்வாமையைத் தரலாம். நாகரிக முகப் பூச்சுக்கள், வாசனைத் திரவியங்கள் என்பவற்றாலும் இந்தக் கோளாறு ஏற்படலாம்.

இதனை முற்றாகக் குணமாக்கும் சிகிச்சை முறைகள் இல்லை. உடல் கலன்களை மெல்ல மெல்ல சூரிய ஒளிக்குப் பழக்கப்படுத்தும் Controlled Phototherapy முறை ஒன்றுள்ளது. ஆனால், இந்தக் கோளாறு உள்ள யாவர்க்கும் இது பொருத்தமான சிகிச்சை முறை என்று கூற முடியாது.

இதற்கென்றே சில ஹோர்மோன் மருந்துகளுடன், உணவு முறைகளும் உதவி செய்கின்றன. விட்டமின் B3, விட்டமின் C, D, E, என்பவை நீண்ட கால உபயோகத்தில் பலன் தந்துள்ளன.

இந்தச் சிகிச்சை முறைகளைத் தவிர - வெளியில் செல்லும் போது சூரிய ஒளியின் புற ஊதாக் கதிர்களின் தாக்கம் ஏற்படாமல் தடுக்கும் வகையில் பூச்சு மருந்துகள் மற்றும் முக்கியமாக காலை 11 மணியிலிருந்து பிற்பகல் நாலு மணிவரையுள்ள கால வேளையில் வெளியில் நடமாடுதலைத் தவிர்த்தல் என்பவை பாதுகாப்பு வழிகளாகும்.

கேள்வி: உங்கள் அபிமான வாசகி நான். எத்தனையோ வாசகர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்துள்ளீர்கள் என்றாலும், என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கேள்வி பதில் பகுதியில் ஒரு குறையுள்ளது. நோய் பற்றிய சகல விளக்கங்களையும் தருகின்றீர்கள் - செய்யப்படவேண்டிய பரிசோதனைகள் பற்றித் தருகின்றீர்கள். ஆனால் நோய்க்குரிய மருந்துகளைப் பற்றி எதுவுமே தருவதில்லை. இதுதான் அந்தக்குறை - அதனையும் தீர்த்து விட்டீர்கள் என்றால் - அதாவது நோய்க்கு நாங்கள் வாங்கி உபயோகிக்கக் கூடிய மருந்துகளின் பெயர்களையும் உங்கள் பதிலுடன் தருவீர்களென்றால் - எமக்கு மிகமிக உதவியாகவிருக்கும். டாக்டருக்கான செலவின்றி நாமே நம் நோய்களைக் கண்டறிந்து - சிகிச்சை செய்து கொள்ளலாம். எதிர்வரும் கேள்வி-பதில் பகுதிகளில் மருந்துகளும் உள்ளடக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன்.

பதில்: உங்கள் எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகத்தான் இருக்கும். நிச்சயம் இந்தக் கேள்வி பதில்களில் - நான் மருந்துகளின் பெயர்களை - அவை அவசியம், கேடுவிளைவிக்காதவை, சாதாரணமாக மருந்துக் கடைகளில் கேட்டு வாங்கிக் கொள்ளக் கூடியவை என்றால் ஒழிய - தரப்போவதில்லை. வைத்தியம் என்பதில் - முதலில் நோயை நிதானித்தல் (Diagnosis) பின்னர் நோயை அறியப் பரிசோதனைகள் செய்தல் - Investigations, அடுத்ததாக சிகிச்சை - Treatment வரும். இதற்கு அடுத்ததாக முக்கியமான விஷயம் ஒன்றுள்ளது - தொடர் கண்காணிப்பு - Follow up இதன் பொழுது தான் - கொடுக்கப்பட்ட மருந்துகள் சரியாக வேலை செய்தனவா? நிதானிக்கப்பட்ட சுகவீனம் சரியானதா என்பது அறியப்பட்டு மீள் ஆய்வு நடத்தப்பட்டு, சரியான முறையில் நோய்ச் சிகிச்சை செல்லும். இந்த நான்கு அங்கங்களும் - வைத்திய சிகிச்சை முறையில் முக்கியமானவை. இவற்றைச் சரியாகப் பின்பற்றுவதே வைத்தியமாகும்.

மேலும் நோயை நிதானிப்பதில் பல அங்கங்கள் உள்ளன - காதுகளால் நோய் பற்றி நோயாளியிடம் இருந்து அறிவது. இதனை History என்பார்கள். இதில் தற்போதைய நோயின் விபரம், முன்னைய நோய் விபரம், குடும்பத்தில் உள்ளவர்களின் உடல்நிலை, ஏற்கனவே உள்ள நோய்விபரம், நோய்க்கும் செய்தொழிலுக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு, பழக்கவழக்கங்கள் என்று பலதையும் நோயாளியின் வாய் மூலம் கேட்டறிந்து, நோயாளியின் நோய் பற்றி கிட்டத்தட்ட Tentative வாக நிதானித்துக் கொண்டு நோயாளியைப்



பரிசோதனை செய்யும் போது வைத்தியர் தமது கண்களைக் கொண்டு - நோய்க்குறிகளை கண்டறிதல் (Observation), கைவிரல்களால் உடலைத் தொட்டறிந்து, நோய்க்குறிகளைக் கண்டறிதல் (Palpation), ஸ்டெதஸ்கோப் போன்ற கருவிகளை உபயோகித்து நோய்க் குறிகளைக் கேட்டு அறிதல் (Auscultation) என்ற முக்கிய படிகள் உண்டு. இத்தனைக்கும் பின்னரே ஓரளவு வைத்தியரால் நோயினை நிதானிக்க முடியும். தான் நிதானித்த நோயைச் சரியென்று உறுதிப்படுத்த பரிசோதனைகள் செய்து முழுமையாக சிகிச்சை அளிப்பதுதான் சரியான வைத்தியம். இதனை Medical Ethics மருத்துவ ஒழுங்கு என்பார்கள்.



பத்திரிகைகளில் வரும் மருத்துவ பகுதிகள் நோய் சம்பந்தமான விழிப்புணர்வை - Awareness மக்களுக்கு ஊட்டவே பிரசுரிக்கப்படுகின்றன. இந்தப் பகுதிகள் அநேகமாக - வாசகரின் நோய் பற்றிய விபரத்தை அடிப்படையாக வைத்து- இந்த நோய் எதுவாக இருக்கலாம், இதற்குச் சிகிச்சை அளிக்க வேண்டிய அவசியம் என்ன, சிகிச்சை அளிக்கப்படாவிடின் ஏற்படும் விளைவுகளை என்ன, இந்த நோயிலிருந்து நோயாளியையும் மற்றவரையும் பாதுகாப்பது எப்படி என்பவற்றை மாத்திரமே ஓரளவு நம்பிக்கையுடன் சொல்லலாம். நோயறிகுறிகளை, நேரடியாகப் பார்த்தல், தொட்டறிதல், கேட்டறிதல், பரிசோதனைகள் எதுவும் செய்யாமல், நாம் நிதானித்து சரி என்று மருந்தை எழுதினால் - அதனால் ஏற்படும் பாதக விளைவுகளுக்கு - பத்திரிகை வைத்தியர் பொறுப்பாகலாமா? கொடுத்த மருந்துகளுக்கு தொடரும் கண்காணிப்பை யார், எப்போது செய்வது? மேலும் மருந்துகளில் இரண்டுவகை உண்டு. பொதுவான மருந்துகள் எனப்படும் பரசெற்றமோல், அஸ்பிரின், விக்ஸ் - என்பவை எவரும் கடையில் கேட்டு வாங்கலாம். இதனை Over The Counter மருந்துகள் என்பார்கள். அடுத்தது Prescription Drugs எனப்படும் நோய்க்கு பரிந்துரைக்கப்படும் மருந்துகள் வைத்தியரின் சிபார்சில் - அவரது கையெழுத்துடனும், இலச்சினை (Seal) உடனும் வந்தால்தான் - மருந்தகத்தில் பெறலாம். எனவே நோய்க்குரிய மருந்துகளைப் பகிரங்கமாகப் பிரசுரித்து உங்களை வாங்கச் சொல்ல முடியாது. எனது பதில் உங்களுக்கு ஏமாற்றமாக இருந்தாலும், மருந்துவத்துறையின் ஒழுக்கக்கோவை பற்றிய அறிவு பெற்று, தெளிந்திருப்பீர்கள் என நம்புகின்றேன்.

கேள்வி: ஆண். வயது 24. எனது கடந்த காலத் தோல்விகள், நிறைவேறாத ஆசைகள் என்பவற்றை நினைக்கும் போது எனக்கு மன இறுக்கம் (Depression) ஏற்படுகிறது. நான் ஒரு கட்டுப்பாடான குடும்பத்தைச் சேர்ந்தவன். இதனால் நான் விரும்பிய விஷயங்களைச் செய்வதற்கு நான் அனுமதிக்கப்படுவதில்லை, அநேக வேளைகளில் நான் தனிமையை உணருகின்றேன். எனக்கு நிறைய நண்பர்கள் இருந்தாலும் - எனது பிரச்சினைகளை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிந்தாலும், நான் தனிமையாக இருப்பதாகத்தான் உணர்கின்றேன். இப்படி தனிமையை உணரும் போது அல்லது மன உளைச்சலாய் - வாழ்க்கை இறங்கியிருக்கும் போது கவிதைகள் எழுதுவதும் புகைப்படம் எடுப்பதும் என்னைப் புத்துணர்வுக்குள்ளாக்கியது. எனது இந்த மனஇறுக்கம் - எனது கடந்த கால ஏமாற்றங்களின் பிரதிபலிப்பா? இதிலிருந்து விடுபடுவது எப்படி?

பதில்: மன இறுக்கம் அல்லது Depression என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கருத்தையுடையது. அதுபோல் வித்தியாசமான விதத்தில் ஒவ்வொருவருக்கும் காட்சி தரும் ஒரு விஷயம். மனஇறுக்கம் சில நிமிடநேரத்திற்கு மட்டும் இருக்கும். திடீரென்று ஏற்படும். எதிர்பார்ப்பு இருந்து அது நடைபெறாமல் ஏமாற்றம் வந்தால் உடனடியாக ஏற்படும். உதாரணமாக, காதலியை எதிர்பார்த்து ஒரு குறிப்பிட்ட நேரத்தில் காத்திருக்கும் காதலன் - அந்த நேரத்திற்கு காதலி வராவிட்டால் - ஒரு கணம் மனஇறுக்கம் அடைகின்றான். ஆனால் ஒரு சில நிமிட நேரத்தில் காதலி வருவது தெரிந்ததும் - மனஇறுக்கம் மறைந்து போய் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதனை Instantaneous உடனடி நிகழும் மன இறுக்கம் எனக்குறிப்பிடுவர், இப்படிப்பட்ட காதலன் எழுதிய குறுங்கவிதை இது - 'உன்னை எதிரில் பார்த்த நாட்களைவிட, எதிர்பார்த்த நாட்களே அதிகம்'.

ஆனால், இந்த மனஇறுக்கம் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்குமானால் - இதே வாழ்க்கையாக போய்விடும். அப்பொழுது தான் மருத்துவம் தேவைப்படும் மனஇறுக்க நோய் ஏற்படுகிறது. இப்படித் தொடர்ந்து ஏற்படும் மன இறுக்கம் சாதாரண வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கும் பட்சத்தில் இது நோயாகிறது. இந்த நோயினால் - சக்தி குறைகிறது. உணர்ச்சி ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன.

புத்துணர்வு, உத்வேகம், முயற்சி செய்யத் தூண்டுதல் - Motivation என்பன குறைகின்றன. தூக்கம், பசி உணர்வுகள் தடைப்படுகின்றன அப்படி ஏற்படும் பொழுது - உங்கள் மனநிலை - உள, உடல்நிலை பற்றி கவனம் எடுக்க வேண்டும். ஏதோ ஒரு கோளாறு உடலில் ஏற்பட்டிருக்கின்றது என்பது உணரப்பட வேண்டும். தனிமை என்று உணர்தல் எப்பொழுதும் மன இறுக்கத்தின் காரணங்களால் அல்ல. மனநிறைவு இல்லாத வேளையில், கூட தனிமை உணரப்படும்.

உங்கள் பிரச்சினையில் கட்டுப்பாடான குடும்பச் சூழ்நிலை, சுதந்திரமாக முடிவு எடுக்ககூடிய மனோநிலை இல்லாதது என்பவைதான் உங்கள் கடந்தகாலத் தோல்விகள், இழப்புகள் என்பவற்றிற்கு காரணம் என்று முடிவு கட்டி விட்டீர்களா? இந்தத் தோல்விகளையும் இழப்புகளையும் திரும்பதிரும்ப சிந்தித்து அதில் புண்ணைச் சொறிவதில் காணும் இன்பத்தை கண்டுகொண்டிருக்கின்றீர்கள். பெற்ற தாயை இழந்தவர்கள் கூட ஒரு வருடத்தில் சோகத்தை மறந்துவிடுகின்றார்கள். மறதி என்பது இறைவன் எமக்கு கொடுத்த வரம். எனவே, இழப்புகளை மீண்டும் மீண்டும் சொறிந்து உணர்ப்பித்துக் கொண்டிருப்பதில் இன்பம் காணும் மனோநிலையே உங்கள் மன இறுக்கத்துக் காரணம். நீங்கள் பின்னிய மணஇறுக்கம் என்ற சிலந்தி வலையினின்று வெளியேறி வாருங்கள். உங்கள் பிரச்சினை தீரும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை.
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.

# கலை உணர்வு ஒவ்வொருவருக்குள்ளும் உள்ளது!

## நேர்காணல்:- எம்.சாந்தி

இலங்கையில் புகழ் பூத்த பல கலைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் கலைத்துறையில் ஈடுபட்டது மாத்திரமன்றி, தாங்கள் கற்ற கலையினைப் பலருக்கு கற்றுக்கொடுத்து, அதன் மூலமாக பல இளம் கலைஞர்களையும் உருவாக்கி வருகின்றனர்.

அந்த வகையில் நாம் இன்று சந்திப்பவரும் கலைக்குடும்பத்தில் பிறந்து நாட்டியத் துறையில் தனக்கென ஒரு முத்திரை பதித்திருப்பவர் தான்.

தற்போது இலங்கையில் பரதநாட்டியத்தினை அதிகமானோர் பயில்கின்றனர். தமிழ்க் கலாசாரத்துடன் ஒன்றிணைந்தது என்பதற்காக மாத்திரமன்றி, உடற் பயிற்சி என்று கருதி இதனைப் பயில்கின்றனர். பரதக்கலைக்கு புகழ்பெற்ற நாடு இந்தியா. அங்கு பரதம், குச்சிப்புடி, கதக்களி என பல்வேறு சாஸ்திரிய நடனங்கள் உண்டு. அதேபோல் அங்கு உள்ளவர்களும் பரதக்கலையினைக் கற்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனாலேயே அங்கு இது போன்ற கலைகள் நல்ல வளர்ச்சி கண்டிருக்கின்றன. இதற்கு இணையாக நமது நாட்டிலும் பரதக்கலை நல்ல முன்னேற்றம் கண்டு முன்னணியில் உள்ளது.

அந்த வகையில் எமது நாட்டில் புகழ் பூத்த நடன தாரகைகளில் ஒருவரான கலாபூஷணம் திருமதி. வாசுகி ஜெயகதீஸ்வரனும் ஒருவர். கடந்த 34 வருடங்களாக நாட்டிய கலாமந்திர் எனும் நடன பள்ளியினை நிறுவிய இவர், அண்மையில் தனது 100வது மாணவியின் அரங்கேற்றத்தைக் கண்டுள்ளார். இக்கலையினை இதுவரை 1000 ற்கும் அதிகமானோருக்கு பயிற்றுவித்துவரும் இவர், இந்திய கலாசார நிலையத்திலும், தலைநகரில் சில இடங்களிலும் நடன பள்ளியினை நடத்தி வருவதுடன், பிரபல தனியார் பாடசாலையிலும் நடன ஆசிரியையாகப் பணிபுரிகின்றார். இன்றைய காலத்தில் பரதநாட்டியத் துறையைப் பொறுத்தளவில், அதன் வளர்ச்சி எவ்வாறு உள்ளது என அறிவதற்காக அவரை அணுகினோம். அவரும் அண்மையில் தனது 100 ஆவது மாணவியின் அரங்கேற்றத்தை நிறைவு செய்த மகிழ்ச்சியிலேயே எமது கேள்விகளுக்குப் பதிலளிக்க ஆரம்பித்தார்...



**கேள்வி: இலங்கையைப் பொறுத்தவரையில், சாஸ்திரிய நடனத்தின் முன்னேற்றம் எவ்வாறு உள்ளது?**

பதில்: இலங்கையில் சாஸ்திரிய நடனம் என்றால் அது கண்டிய நடனம் தான். பரதநாட்டியம் இந்தியாவில் இருந்து வந்த கலாசாரம். தமிழர்களின் பாரம்பரியம். இது இன்றும் மக்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது. தனியார் நடன வகுப்புக்களிலும் சரி, பாடசாலை மட்டத்திலும் சரி இக்கலைக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இன்று பரதநாட்டியத்தை தமிழர்கள் மாத்திரமன்றி, சகோதர மொழியினரும் விரும்பிக் கற்று வருகின்றனர். இன்று என்னைப் போன்று இத்துறையில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் பல ஆசிரியர்களையும் அவர்களிடம், பயிலும் மாணவ, மாணவியரையும் பார்க்கும் போது எம் நாட்டில் பரதநாட்டியம் வளர்ச்சி அடைந்துள்ளது என்பது தான் என் கருத்து.

**கேள்வி: இந்தியாவைப் பொறுத்தவரையில் இத்துறையில் ஆண்களின் பங்களிப்பு அதிகம். ஆனால், இலங்கையில் அவ்வாறு இல்லை. இதற்கான காரணம் என்ன?**

> பெரும்பாலான ஆண்கள் நினைக்கின்றார்கள் பரதநாட்டியம் பயின்றால் பெண்களைப் போன்று தங்களுக்கும் நளினம் வந்துவிடுமோ என்று. அந்த எண்ணம் முற்றிலும் தவறானது.

பதில்: இந்தியாவைப் பொறுத்தவரை, கலைக்கு முக்கியத்துவம் வழங்குவோர் அதிகம். மருத்துவராகட்டும், சட்டத்திரணியாகட்டும் தங்களுடைய தொழில்சார் துறையோடு கலையையும் வளர்த்துக்கொள்வார்கள். குறிப்பாக, வாய்ப்பாட்டு, நடனம் போன்ற துறைகளில் தங்களுடைய பொழுதுகளை அதிகம் கழிக்கின்றனர். தனியார் நடன வகுப்புக்களையும் நடத்தக் கூடிய வாய்ப்பு அவர்களுக்கு இருக்கின்றது. மேடை நிகழ்ச்சிகளில் கூட பங்குபற்றுவார்கள். குறிப்பாக, மார்கழி மாதம் இந்தியா சென்று பார்த்தால் தெரியும் பல மேடைகளில் கச்சேரிகளும், நடன நிகழ்ச்சிகளும் தினமும் அரங்கேறிய வண்ணம் இருக்கும். அதனால் அங்குள்ள கலைஞர்கள் ஆர்வமாக இக்கலையைக் கற்று நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகிறார்கள். ஆனால், அவ்வாறான வாய்ப்புக்கள் எம்மவர்களுக்கு இல்லை. ஆண்கள் பயின்றால் பாடசாலைக்கு ஆசிரியராகச் செல்லலாம் அல்லது பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராகச் செல்லலாம். வருமானத்தை ஈட்டித்தருவதாக இருக்காது என்பதே பலரது கருத்து. அத்தோடு பிறர், மற்றத் துறைகளுக்கு கொடுக்கும் மரியாதை ஓர் ஆண் நடன ஆசிரியராக இருக்கும் போது கொடுப்பதில்லை. இதுவே ஆண்கள் இத்துறைக்கு வராமைக்குக் காரணம். சிலர் நினைக்கிறார்கள் நடனம் பயில்வதால் தங்களுக்கு பெண்களைப் போல் நளினம் வந்து விடுமோ என்று. ஆண்களை பொறுத்தளவில் நடனத்துடன் கராத்தே மற்றும் ஜிம் போன்ற பயிற்சிகளுக்குச் சென்றால் அவர்களிடம் பெண்களைப் போன்ற நளினம் வராது. ஆண்கள் நடனப் பயிற்சி பெறும் போது சிவதாண்டவம் போன்ற நடனங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

இந்தியாவில் இன்று ஏராளமாக ஆண்கள் இவ்வாறு தான் பயிற்சிகளை எடுக்கின்றனர். இக்கலைக்கு ஆதிமூல தெய்வமே சிவன் தான் என்பதை உணர்ந்தால் பல ஆண்களின் பங்களிப்பு இதில் இருக்கும். அந்த வகையில் நான் பிரபல நடன ஆசிரியர் அடையாறு லட்சுமணன் அவர்களின் மாணவி என்று கூறுவதில் பெருமைப்படுகிறேன்.



**கேள்வி: இன்றைய தமிழ்த் திரையுலகத்தைப் பொறுத்தவரையில் கலாசாரம் சீரழிந்து வருவதாகக் கருதலாமா? காரணம் ஆடைக் குறைப்பு. சில பரதநாட்டிய பாடல் காட்சிகளில் கூட ஆடைக் குறைப்பைக் காணக் கூடியதாக உள்ளது. இது பற்றி உங்கள் கருத்து?**

பதில்: உண்மையில் அது ஒருபக்கம் கண்டிக்கப்பட வேண்டியது தான். அதே நேரம் பலர் அதை ஆதரிக்கவும் செய்கின்றனரே. திரையுலகத்தைப் பொறுத்தவரையில், நீங்கள் கூறியது முன்னர் நிகழ்ந்தவைதான். ஆனால் இன்று நல்ல பல கலைஞர்கள் திரையுலகத்தில் நடன அமைப்பாளர்களாக உள்ளனர். நடனத்திற்கு ஏற்றபடி தான் உடை அமைப்பினையும் வழங்குகிறார்கள் என்பதே என் எண்ணம்.

**கேள்வி: இசையைக் கேள்வி ஞானத்தில் பாடமுடியும். ஆனால், பரதநாட்டியம் அவ்வாறு இல்லை. எவ்வளவுதான் பார்த்துப் பழகினாலும் அந்த பாவங்களை கொண்டு வர முடியாது. முறைப்படி பயில வேண்டும். ஆனால் அதற்கான வசதிவாய்ப்பு இல்லாதோர் மலையகப் பிரதேச மாணவர்கள் பாடசாலைக் கலை விழாவிற்கு இவ்வாறுதான் தங்களைத் தயார்படுத்துகின்றனர். இவ்வாறான மாணவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**



பதில்: கலை ஒவ்வொருவருக்குள்ளும் ஏதோ ஒரு விதத்தில் அவர்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. கேள்வி ஞானத்தில் பாடக்கூடியவர்கள் என்று குறிப்பிட்டீர்கள். எல்லோராலும் கேள்வி ஞானத்தால் நன்றாகப் பாட முடியாது. ஆனால், சிலரால் நடனம் பயிலாமலேயே ஒரு பாடல் காட்சியைப் பார்த்துவிட்டு அதேபோல் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள முடிகிறது. குறிப்பாக 'சந்திரமுகி' படத்தில் இடம்பெற்ற ரா.... ரா... பாடல் காட்சி எத்தனை பேரின் மனதில் பதிந்து விட்டது! எத்தனை பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளில் இந்தப் பாடலுக்கு ஆடியிருக்கிறார்கள். முறைப்படி நடனம் பயில்பவர்களால் தான் முடியும் என்பதற்கில்லை. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை. கலை எமது கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்தது. அந்தக் கலாசாரத்தில் தான் நாமும் வாழ்கின்றோம். எனவே ஒவ்வொருவருக்குள்ளும் கலை ஆர்வம் உள்ளது என்பதே எனது கருத்து.

**கேள்வி: சில பெற்றோர்கள் தங்களுக்கு உள்ள ஆர்வத்தைத் தமது பிள்ளைகளில் திணித்து விடுவதுண்டு. அதனால், மிகச் சிறிய வயதிலேயே தமது பிள்ளைகளை நடனப்பள்ளியில் சேர்த்து விடுகின்றனர். இதனை ஆரோக்கியமான விடயமாக நீங்கள் கருதுகின்றீர்களா? நடனம் பயில உகந்த வயது எது?**

பதில்: நீங்கள் கூறுவது சரிதான். பல பெற்றோர்கள் தங்களுடைய ஆவலைத் தமது பிள்ளைகள் மூலம் நிறைவேற்றிக் கொள்கின்றனர். இது ஒரு புறம் ஆரோக்கியமானதாக இருந்தாலும், மறுபுறம் பாதகமாகவும் திகழ்கின்றது. குறிப்பாக, சில பிள்ளைகள் முழுமையாக நான்கு வயது கூட நிரம்பியிராத பொழுது அந்தக் குழந்தைக்கு அடவுகள் சொல்லிக் கொடுப்பது கடினமாக இருக்கும். முத்திரைகள் ஒழுங்காக பிடிக்கத் தெரியாமல் இருப்பார்கள். அந்தப் பிஞ்சுக் குழந்தைகளின் குறும்புகளை ரசிப்பதா? அல்லது அவர்களைக் கண்டிப்பதா? சாதாரணமாக நடன பள்ளியில் குழந்தைகளைச் சேர்ப்பவர்கள் ஐந்து வயது நிரம்பிய பின்னர் சேர்த்தால் குழந்தைகளுக்கும் புரிந்து கொள்ளும் தன்மை இருக்கும். எமக்கும் இலகுவில் விளங்கப்படுத்தக் கூடியதாக இருக்கும். ஆனால், என்னிடம் சிறுவர்கள் பலர் படிக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் நிறைய திறமைகள் உள்ளன. சிறிய வயதில் என்னிடம் அரங்கேற்றம் கண்ட மாணவியரும் உண்டு.

# தமிழ் அலைவரிசைகளில் பாடல் போட்டிகளை தவிர்த்து வேறு போட்டிகளை ஏற்பாடு செய்யுங்கள்.

இலங்கையின் வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகளைப் பொறுத்தவரை அவ்வப்போது பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில், இலங்கையின் வனொலி, தொலைக்காட்சி அலைவரிசைகளை எடுத்துக் கொண்டால் - அதிகளவிலான பாடல், இசைப் போட்டிகளால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன.

இதற்கான காரணம் என்னவென்று இதுவரை எமக்குப் புரியவில்லை. அரச மற்றும் தனியார் ஊடகங்கள் எல்லாவற்றிலுமே இவ்வகையான பாடல் போட்டிகள் தான் பிரதானமான நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. இலங்கைத் தமிழ் அலைவரிசைகள் மத்தியில் பாடல் போட்டிகள் மிகவும் அதிகம் என்றுதான் கூறவேண்டும்.

ஒரு வானொலி நேயருக்கு, ஒரு தொலைக்காட்சி ரசிகனுக்கு அதிக பட்ச சந்தோஷம் இவ்வகையான பாடல் போட்டி நிகழ்ச்சிகளில், கிடைக்கின்றதா என ஆராய்ந்து பார்த்தால் - விடை பூஜ்யமே.

இலங்கை வனொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் இப்போட்டி நிகழ்ச்சிகளைத் தவிர்த்து மக்கள் மனங்களைத் தொடும் வகையில் நிகழ்ச்சிகள் படைக்க எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன. ஆனால், பாடல் போட்டி நிகழ்ச்சிகள் இலங்கையின் தமிழ் அலைவரிசைகளின் பாரம்பரிய நிகழ்ச்சிகளாய் மாறிவிட்டன.

எந்த அலைவரிசையை Remote இல் மாற்றினாலும் இவ்வகைப் போட்டிகளே இடம்பெறுகின்றன. வெறுமனே வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறு இலக்குகள் இப்போட்டிகளால் ஏற்படுவதில்லை என்பதே உண்மை. தவிர, வருடக் கணக்கில் 'மெனக்கட்டு' இவ்வகைப் போட்டிகளை ஒலி, ஒளிபரப்புவதால் இலங்கையில் ஆரோக்கியமான படைப்பாளுமை மிக்க சமுதாயத்தை உருவாக்கிவிட முடியாது.

பாடல் போட்டிகளில் வெற்றி பெறுகின்றவர்களை கொஞ்ச நாட்களுக்கு தூக்கிக் கொண்டாடுகின்றோம். அதன் பிறகு அவர்கள் எமது இதயங்களில் இருப்பதில்லை. நட்சத்திர அந்தஸ்து எல்லாமே குறிப்பிட்ட காலங்களுக்குத்தான். அதன் பிறகு பழைய குருடி கதவைத் திறடி என்ற நிலைமைதான்.

மேலும், இவ்வகையான பாடல் போட்டிகளால் இன்னுமொரு வேதனை. இவை ஆரம்பமாகும் போது ஆர்ப்பாட்டங்களோடும் அட்டகாசங்களோடும் ஆரம்பமாகும். இறுதியில், இவ்வாறான நிகழ்ச்சிகள் ஏதோ ஒரு வரலாற்றுத் தவறைச் செய்து நிறைவுறும். மக்களின் ரசனை கணிப்பிடப்படாமல் குறிப்பிட்ட யாருக்கோ வெற்றி வாய்ப்பு வரும்...? மேலும், விமர்சனங்களுக்கும் பஞ்சமில்லை. என்னைப் பொறுத்தவரை, நான் பார்த்ததில் எனக்கு மிகவும் பிடித்த பாடலிசைப் போட்டி சக்தி தொலைக்காட்சி என்றே சொல்வேன்.

எமது படைப்பாளிகளின் தனித் திறமைகளை உலகறியச் செய்வதில் சக்தியின் இசை இளவரசர்கள் நிகழ்ச்சிக்கு கணிசமான பங்குண்டு.

ஆக எது எப்படியோ, இனிவரும் காலங்களில் இவ்வகைப் போட்டி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதை குறைத்து - இலங்கைக் கலைஞர்களின் கண்டுகொள்ளப்படாத இன்னும் பல திறமைகளை போட்டி நிகழ்ச்சிகளாக்குவதே உசிதமானது.

-ரஜா

# மீண்டும் நாடகங்கள் அரங்கேறுமா..?

தற்கால இலங்கையின் கலை மற்றும் ஊடகப்பரப்பில் தமிழ் நாடகங்களின் ஒலி, ஒளிபரப்பு மிக மிக குறைவாகக் காணப்படுகிறதெனலாம். இலங்கையின் தமிழ் நாடகத்துறையும், நாடகப் படைப்புகளும் மிகவும் அருகிக் கொண்டு போகின்றன.

இதற்கு பிரதான காரணம், இலங்கையின் தமிழ் இலத்திரனியல் ஊடகங்களை ஆக்கிரமித்திருக்கும் தென்னிந்திய தமிழ் நாடகத் தொடர்களாகும். அந்தவகையில், கணிசமான தென்னிந்திய தமிழ் சின்னத்திரைகளின் வருகைக்கு பின்னர் ஈழத்தின் தமிழ் நாடகத்துறை வீழ்ச்சிப்பாதையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது.

முன்பெல்லாம், இலங்கையிலுள்ள தமிழ் ஒலி, ஒளி அலைவரிசைகளில் நமது நாட்டு நாடகங்கள் பஞ்சமில்லாமல் ஒலி, ஒளிபரப்பாகி வந்தன. ஆனால், இன்று நம் நாட்டு நாடகங்கள் அறவே மறக்கடிக்கப்பட்டு, கலாசாரத்தை சீரழிக்கும் பல தென்னிந்திய சின்னத்திரைகள் அரங்கேறிவருவது வேதனைக்குரிய விடயமாகும்.

கடந்த காலங்களில் சக்தி எவ்.எம் சூரியன் எவ்.எம் போன்ற தனியார் வானொலி நிறுவனங்கள் எமது நாட்டுத் தமிழ் நாடகப் படைப்புகளை ஒலிபரப்பாக்கி வந்தன. ஆனால், இன்று சக்தியும் - சூரியனும் ஈழத்து தமிழ் நாடகங்களை ஒலிபரப்பாக்குவதில்லை என்றே சொல்லவேண்டும்.

தவிர, அண்மையிலிருந்து சக்தி எவ்.எம் வானொலி 'வந்தியத் தேவன்' எனும் சரித்திர தொடர் நாடகம் ஒன்றை ஒலிபரப்பாக்கி வருகிறது. இருந்தபோதிலும் 'வந்தியத் தேவனை' முழுக்க முழுக்க ஈழத்துப் படைப்பாக நாங்கள் கருதமுடியாது. அது ஒரு சரித்திரத் தொடர் மாத்திரமே.

மேலும், சூரியன் வானொலியும் முன்னர் 'அரங்கம்' என்ற பெயரில் எமது நாட்டு தமிழ் நாடகங்களை ஒலிபரப்பாக்கி வந்துள்ளது. அதனூடாக இலங்கையின் நல்ல பல படைப்பாளிகளின் படைப்புக்கள் வெளிக்கொணரப்பட்டன. எனவே, இன்றைய இலங்கையின் தமிழ் நாடகங்களையும் நாடகக் கலைஞர்களையும் ஊக்குவிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமது அத்தனை வானொலி தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் உரித்தானது.

அந்த வகையில், நேத்ரா தொலைக்காட்சி, இலங்கை வானொலி தேசிய சேவை போன்றன எம்மவர்களின் தமிழ் நாடகங்களை ஒலி, ஒளிபரப்பாக்குவதில் கரிசனை காட்டி வருகின்றன. மேலும் வசந்தம் தொலைக்காட்சியும் எதிர்காலத்தில் எம்மவர்களின் தமிழ் நாடகங்களை ஒளி பரப்புவதற்கென நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

எனவே, இவர்களைப் போல இலங்கையின் தமிழ் நாடகக் கலையை வளர்க்க இதர தமிழ் ஒளி, ஒலி ஊடகங்களும் முழு மூச்சுடன் செயற்பட வேண்டும். ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் தென்னிந்திய 'சீரியல்களுக்கு' குட்பை சொல்லி எமது தமிழ் நாடகங்களுக்கு 'வெல்கம்' சொல்வார்கள்...




ஆகாஸ்

# வசந்தம் வழங்கும் தித்திக்குதே

வசந்தம் டி.வியில் ஞாயிறு இரவு தோறும் 10 மணி முதல் 11 மணிவரை இடம்பெறும் 'தித்திக்குதே' நிகழ்ச்சி ரசிகர்களின் இதயங்களில் இனிய தித்திப்பாய் ஒளிபரப்பாகி வருகிறது.

இதயத்தை வருடும் இடைக்காலப் பாடல்களும் அவற்றுக்குப் பொருத்தமான இனிய கவிதைகளுமாய் நிகழ்ச்சியை தயாரித்து தொகுத்து வழங்கும் வசந்தம் டி.வியின் அறிவிப்பாளர் அஸ்மின் உதுமாலெவ்வை பாராட்டத்தக்கவர்.

மேலும், என்றுமே நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும் இடைக்காலப் பாடல்களை அற்புதமாகத் திரட்டித் தரும் தித்திக்குதே நிகழ்ச்சி புதன்கிழமைகளில் காலை 11 மணிமுதல் 12 மணிவரை ஒளிபரப்பாகி வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தவிர, வசந்தம் டி.வியின் ஓராண்டு பூர்த்தியை (ஜூன் 25) முன்னிட்டு தித்திக்குதே நிகழ்ச்சி புது மெருகோடு நேயர்களின் கவிதைகளோடு கலந்த கானங்களாக சனி,ஞாயிறு தினங்களில் இரவு 10.30. முதல் 11.30 மணிவரை ஒளிபரப்பாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இயந்திரத்தனமான வாழ்க்கைக்குள் அகப்பட்டு வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கும் இதயங்களில் சோகத்துடன் கண்ணீரையும் தேக்கி வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் 'தித்திக்குதே' நிகழ்ச்சி ஆத்மார்த்தமான ஆறுதலாக ஒளிபரப்பாகி கொண்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இந்நிகழ்ச்சியை திறம்பட தயாரித்து தொகுத்து வழங்கும் அஸ்மினுக்கு எமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்...



# செவிடன் காதில்........

செவிடன் காதில் ஊதிய சங்கு என்றாலும் சில நேரங்களில் கேட்கக் கூடும். ஆனால், தொலைக்காட்சி நேத்ராவில் எத்தனை முறை காதில் ஊதினாலும் கேட்கவே கேட்காது என்பது போன்ற காரியங்களாற்றுவதே நடந்த உண்மையாகி விட்டது.

ஏனெனில், பலமுறை தொலைக்காட்சி நேத்ரா பற்றிய விமர்சனங்கள் வந்துவிட்டன. நேத்ரா டி.வியில் பல சின்னத்திரை தொடர் நாடகங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. கிரிக்கெட் என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டவுடன்,


சின்னத்திரை நாடகங்களை நிறுத்திவிட்டு கிரிக்கெட் விளையாட்டு மாத-வார-நாட்கணக்கில் ஒளிபரப்பப்படுகின்றமையால் பொது மக்களுடைய (நேத்ரா நேயர்களுடைய) நாடக ரசனை எவ்வளவு பாதிக்கப்படுகின்றது என்றும் தமிழ் சின்னத்திரை நாடகங்களை ஆரம்பம் முதல் முடிவு வரை ஒளிபரப்பாமல் ஏன் இடைநடுவில் நிறுத்துவது என்பதும் புரியவில்லை. ஏன் தொடர்ந்து குடும்பத்துடன் பார்க்க முடியாத காதல்- டூயட் அரைகுறை ஆடைகளுடன் கூடிய படங்களைத் தவிர்த்து நல்ல கதையம்சம் கொண்ட பழைய திரைப்படங்களை ஒளிபரப்ப முடியாதா?

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து தாருங்கள் என்று பல முறை கூறி விட்டோம். அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கு, என்றாலும் சிலவேளை கேட்கும். ஆனால் நாம் சொந்தம் கொண்டாடும் தொலைக்காட்சி நேத்ராவின் காதில் நம் குரல் கேட்காது என்ற நிலைப்பாடு சரித்திரமாகிவிட்டது. நேத்திராவிற்கு என்று நேயர்கள் உண்டு. அவர்களது விருப்பத்திற்கு மதிப்பளிக்காத அந்த அலைவரிசையை ஏன் இரசிகர்களாகிய நாம் கொண்டாட வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

பொறுத்திருந்து பார்ப்போம். மரத்தில் உள்ள கனி உண்பதற்கு உதவுமா தூக்கி எறியத்தான் வேண்டுமா? என்று.

என்.பி.ஆர். அநுர்த்தீன்,
புத்தளம்.






அற்புதன்,
ஹட்டன்.

**கேள்வி:** மன அமைதிபெற யாரிடம் நட்புக்கொள்ள வேண்டும்.

**பதில்:** கடவுளிடம்.

சுதன்,
கொழும்பு.

**கேள்வி:** உண்மையாகவே மனிதன் குரங்கிலிருந்து பிறந்ததாக டார்வின் சொன்னாரா?

**பதில்:** உண்மையாகவே மனிதன் குரங்கைப் பெற்றெடுக்கவில்லை. குரங்கும் மனிதனைப் பெற்றெடுக்கவில்லை. ஆனால், குரங்கும் மனிதனும் ஒரே இனத்தைச் சேர்ந்த பிரகிருதிகள் என்று தான் அவர் சொன்னார்.

தமிழ்ச்செல்வன்,
நுவரேலியா.

**கேள்வி:** பெண்கள் எந்த விஷயத்தில் ஆண்களைவிட மேலாக இருக்கிறார்கள்?

**பதில்:** பாச மழையைப் பொழிவதில்...

எம்.எஸ். சஹாப்தீன்,
மடவளை.


**கேள்வி:** நேர்மை, உண்மை, துணிவு என்பவற்றைக் கொள்கைகளாக வரித்துக் கொண்டுள்ள என்னை வாக்காளர்கள் ஆதரிப்பார்களா?

**பதில்:** நேர்மைக்காக! பைத்தியம் என்ற பட்டமும், உண்மைக்காக வாழத்தெரியாதவன் என்ற அவப்பெயரும், துணிவுக்காக முட்டாள் என்ற பட்டமும் உங்களுக்குக் கிடைக்குமே தவிர, வாக்கு கிடைக்காது. இப்போது காலம் மாறிவிட்டது. வாழத்தெரிந்தவன், வெற்றிவீரர்கள் என்ற பட்டங்கள் பொய்யர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் கொலைகாரர்களுக்குமே பொருந்தும்.

ரூபன்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** தமிழ்ச் சினிமா இமாலய வளர்ச்சி அடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே....?

**பதில்:** அது வளர்ச்சியல்ல, வீக்க நோய்க்குறி.






கரன்,
வவுனியா.

**கேள்வி:** மாமியாருக்கும் மருமகளுக்கும் எந்த விஷயத்தில் ஒற்றுமை உண்டு?

பதில்: தலையணை மந்திரத்தில்...

பகலவன்,
மன்னார்.

**கேள்வி:** நீதிமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புச் செய்தால் என்ன?

**பதில்:** சட்டத்தரணிகள் நடிகர்களாக மாறி வசனம் பேசத் தொடங்கி விடுவார்கள்.

றெஜினோல்ட்,
திருமலை.

**கேள்வி:** புலிகளை ஒழித்துவிட்டதற்காக யார் பூமாலை போட்டுக்கொள்ள முடியும்?

**பதில்:** பல ஆயிரம் மைல் சுற்றளவுடைய அந்த மாலையை யார் கழுத்திலும் போட முடியாதே போட்டாலும் நிற்காதே.

தேவதாஸ்,
மட்டக்களப்பு.

**கேள்வி:** நடிகராக இருந்த எம்.ஜி.ஆர்., முதல்வராக உயரக் காரணம் என்ன?

**பதில்:** அவரிடம் இருந்த நடிப்புத் திறமை, அடிமட்ட மக்கள் மீதிருந்த அனுதாபம், பொதுநல விருப்பம் என்பன.

மாறன்,
அநுராதபுரம்.

**கேள்வி:** ஒருவனைக் கொலை செய்ததற்காக சட்டத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதிக்கு ஆட்சித் தலைவர் மன்னிப்பு வழங்கலாமா?

**பதில்:** இந்த நாட்டுச் சட்டப்படி சரியானது தான். ஆனால், இஸ்லாமிய தண்டனைச் சட்டங்களின்படி இது பிழையானது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த மதச் சட்டங்களின்படி, பாதிப்புக்குள்ளான குடும்பமே இந்த முடிவை எடுக்கும் அதிகாரம் படைத்ததாகும். பாதிப்புக்குள்ளான குடும்பம் கொலையாளியிடம் ஒரு நஷ்டஈட்டைக் கோரி, அவன் அதனைச் செலுத்தினால், அவனுடைய தண்டணையை இல்லாமற் செய்யலாம். மேலும், அவர்கள் மன்னித்து விட்டாலும் அரசாங்கத்துக்கு அவன் மீது தூக்குத் தண்டனை விதிக்கும் அதிகாரம் கிடையாது.

அன்பழகன்,
கோப்பாய்.

**கேள்வி:** ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா இவற்றில் நீங்கள் விரும்பும் பா என்ன பா?

**பதில்:** குறும்பா!?

தமயந்தி,
வவுனியா.

**கேள்வி:** நம் நாட்டுச் சந்தைகளிலே எப்போதும் சாப்பிட்டுத் தெவிட்டிப்போன காய்கறிகளே இருக்கின்றன. சைவணாகிய எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லையே?

**பதில்:** நீங்கள் சீனாவுக்குப் போங்கள். அங்கே முந்நூறு, நானூறு வகையான காய்கறிகள் விளைகின்றன. நாளொன்றுக்கு ஒரு மரக்கறி சாப்பிட்டால், அதை மீண்டும் சாப்பிடுவதற்கு ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம் பிடிக்கும்.

தேவன்,
நீர்கொழும்பு.

**கேள்வி:** பெண்கள் திருமணத்துக்கு முன்பா பின்பா, அழகாகத் தோன்றுகிறார்கள்?

**பதில்:** கைக்கு எட்டாத நிலையில் லட்சணமாகத் தோன்றும் பெண்கள் எட்டியபின் அப்படியில்லை என்று அநேக கணவர்கள் முறைப்பாடு செய்கிறார்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 417

சொற்சிலம்பம் 417 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திணம் 2010 ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 30 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 409 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.415

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 பி | 3 ம | ன் | 4 யு | ■ | 5 ச | 6 தா |
| 7 க | ர | டி | ■ | 8 வ | ரு | ட | ம் |
| 9 தி | தி | ■ | 10 ந | தி | ■ | ங் | ■ |
| ■ | 11 நி | 12 த | ம் | ■ | 13 ஆ | கு | 14 தி |
| 15 அ | தி | ரி | ■ | 16 தோ | சை | ■ | ர |
| த் | ■ | 17 ச | 18 ர | டு | ■ | 19 பா | வி |
| 20 த | 21 க | ன | ம் | ■ | 22 அ | ரி | ய |
| 23 மி | த | ம் | ■ | 24 கா | ரி | 25 ய | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 415

### பரிசு பெறுவோர்

1. நா. சுந்தரலிங்கம், தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.
2. வேலு சந்திரகலா, கள்ளிக்குளம், அடம்பன், மன்னார்.
3. எஸ். சின்னராசா, பிரதான வீதி, பெரிய போரதீவு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 415

### பாராட்டுப் பெறுவோர்

01. ஆ. பெ. தயானந்தி, கீரி, மன்னார்.
02. திருமதி. முனீரா பஸ்லி காரியப்பர், தெஹிவளை.
03. எஸ்.எஸ். பவானந்தன், நீர்வேலி.
04. திருமதி. பிலோமினா அமிர்தநாதன் யாழ்ப்பாணம்.
05. க. சோமசுந்தரம், மானிப்பாய்.
06. ஏ. உதுமா லெவ்வை, கொழும்பு - 02.
07. ச. சுரேந்தினி, தெஹிவளை.
08. திருமதி. சந்திரா ரவீந்திரன், ஹட்டன்.
09. ஈ.எச்.எச்.எம். நளீம், அகுறணை.
10. ந. மகேஸ்வரராஜா, மட்டக்களப்பு.
11. பா. மிதுஷ், மன்னார்.
12. யோ.யோ. யோகராசா, யாழ்ப்பாணம்.
13. எம்.பீ. முகைதீன், பெரிய நீலாவணை.
14. திருமதி. ஜெ. ஏபிரகாம், நுவரேலியா.

## சொற்சிலம்பம் போட்டி இல.417

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பி | டி | 2 வா | 3 த | ம் | ■ | 4 அ | 5 வி |
| ர | ■ | 6 சி | லை | ■ | 7 ப | க | ல் |
| 8 கா | ய் | ■ | 9 வி | 10 சா | ல | ம் | ■ |
| 11 ச | ப | 12 பு | ■ | ட் | தா | ■ | 13 ச |
| ம் | ■ | ஸ் | ■ | 14 சி | ர | ட் | டை |
| ■ | 15 க | த | வு | ■ | 16 ம | டு | ■ |
| 17 த | க் | க | ■ | 18 பி | ண | க் | 19 கு |
| ■ | | ம் | ■ | 20 த | ம் | பி | டி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 417

### இடமிருந்து வலம்

1. விட்டுக்கொடுக்காமை
4. வேகவை/ அணை
6. பிரதிமை/ விக்ரகம்
7. சூரியன் உதித்ததில் இருந்து மறையும் வரையுள்ள தூரம்.
8. பழுக்காத நிலை
9. பாரிய/ மிகப் பெரிய
11. பற்களால் அரை
14. தென்னந்தும்புக்கும் தேங்காய்க்கும் இடையில் இருப்பது.
15. இரவில் இதனை மூட வேண்டும்.
16. சுனை/ சிறிய குளம்
17. ஏற்ற/ உரிய
18. தகராறு/ சண்டை
20. அற்ப மதிப்புடைய நாணயம்.

### மேலிருந்து கீழ்

1. ஒளி/ ஒளியினால் ஏற்படும் வெளிச்சம்
2. படி/ இசைக் கருவிகளை மீட்டு
3. சங்க காலப் பாடங்களில் பொதுவாக வரும் முக்கிய பாத்திரம்.
5. உள்ளம்/ மனது இதில் அம்பை வைத்து எய்வர்
7. பல மனைவியர்களை மணந்து கொள்வது
8. (பெரும்பாலும்) நுரையீரலைப் பாதிக்கும்
10. நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் சொல்லப்படுவது
12. இதனைப் படிப்பதால் அறிவு வளரும்
13. பெண்களின் பின்னப்பட்ட தலைமுடி/ முடிக்கற்றை
16. வாசம்/ கல்யாணம்.
19. அருந்து/ பிரஜை

# ராசி பலன்

## 10 - 05 - 2010 முதல் 16 - 05 - 2010




**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

கனிவான மனத்தோடு நடந்து கொள்ளும் மேஷ ராசி அன்பர்களே!

காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சிலவற்றிலேயே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும். முக்கிய விஷயங்கள் பேசுவதில் நிதானப் போக்கை கடைபிடிப்பதும் அவசியம். செய்யும் செயல்களில் தடை தாமதங்கள் உண்டாகக்கூடும்.

குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். குடும்ப அங்கத்தினர்களிடம் சுமூகமாக நடந்து கொள்வது அவசியம். சமையல் அறையில் பணியாற்றும் பெண்கள் கவனமாக இல்லாவிட்டால் சிறு விபத்துகளை சந்திக்க நேரலாம். கலைஞர்கள் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் இருந்தாலும், எதிர்பார்க்கும் வருமானம் இருக்காது. பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும். எதிர்பார்க்கும் லாபம் காணப்படாது.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை. அதிர்ஷ்டக் கிழமை: புதன்.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீடம் 1,2**

நீதியும் நேர்மையும் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!

உங்கள் செயல்கள் பலவற்றில் முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள். வரவேண்டிய தனவரவுகள் சிறிது தாமதித்தே வந்து சேரும். மனதில் சலனமும், செய்யும் காரியங்களில் தடுமாற்றமும் ஏற்படலாம்.

குடும்பம் சீராக நடைபெறும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு சமாளிக்கப்படும். கடன் தொல்லைகள் இருக்காது. பூர்வீக சொத்துக்களால் சகோதரர்களின் மத்தியில் மனவேறுபாடுகள் ஏற்பட்டு பெரியோர் மூலம் சமாதானம் ஏற்படும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகள் பெற்று பணிகளில் உற்சாகமாக நடைபோடுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். பங்குச்சந்தை வியாபாரம் நல்ல லாபம் தருவதாக இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி




**மிருக சீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3 ஆம் பாதங்கள்**

முன்னேறத் துடிக்கும் மனம் பெற்ற மிதுன ராசி அன்பர்களே!

முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தளர்வு இருந்தாலும் தக்க நபர்களின் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்பட்டாலும் சிறு சிறு பரச்சினைகள் இல்லாமல் இருக்காது. கடன் தொல்லைகள் சமாளிக்கும்படி இருக்கும். கலைஞர்கள் பழைய வாய்ப்புகளிலேயே தேவையான வருமானத்தைப் பெறக்கூடும். புதிய வாய்ப்புகளைப் பெற, சகக் கலைஞர் மூலம் முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான லாபம் ஏற்படலாம். புதிய நண்பர்கள் வரவும், அவர்களின் ஆலோசனையும் வியாபாரத்திற்குப் பலனளிப்பதாக இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

நண்பர்களிடம் பாசத்தோடு பழகும் கடக ராசி அன்பர்களே!

பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நீண்ட நாட்கள் பழகியப் பின் பிரிந்த ஒருவர் மீண்டும் உங்களைத் தேடி வரக்கூடும்.

குடும்பத்தில் குதூகலம் இருந்தாலும் குறைவான வருமானத்தால் கொடுக்க வேண்டியவர்களின் முணுமுணுப்பைச் சமாளிக்கத் திணறுவீர்கள். தள்ளிப்போய் வந்த சுபகாரிய முயற்சி சிலருக்கு கைகூடலாம். பெண்கள் மனதிற்கு இனிய செய்தியை கேட்டு மகிழலாம். கலைஞர்கள் கலகலப்பளிக்கும் விருது பாராட்டு விழாக்களில் கலந்து மகிழ்வீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் பொங்கி வந்து பலனளிக்கும், நண்பர்கள் யோசனை பயன்தரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9 அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள் அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

எச்சரிக்கை எண்ணம் கொண்டு பழகும் சிம்ம ராசி அன்பர்களே!

செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சி செய்தாலும், சிலவற்றிலேயே எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும். எதிர்பார்க்கும் பணம் கைகளுக்கு வர இடர்பாடுகள் தலைதூக்கும். கடன் பிரச்சினைகளில் கவனமுடன் நடந்து சமாளிக்க வேண்டியது இருக்கும்.

குடும்பம் குறையில்லாமல் நடைபெறும். சுபநிகழ்ச்சி நடைபெற முன்னேற்பாடுகளில் முனைந்து பாடுபடுவார்கள். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களை எதிர்பார்த்து சக கலைஞர்களின் ஒத்துழைப்பை நாடுவார்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் இருக்காது. நண்பர்களின் ஆலோசனைகளும், தினசரிகளில் வரும் அன்றாட நிலவரங்களும் லாபத்தைப் பெருக்க பயன்படும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,8. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம். அதிர்ஷ்டக் கிழமை: சனி.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

சிறிய வேலையையும் கலையழகுடன் செய்யும் கன்னி ராசி அன்பர்களே!

வேலைகளில் வெற்றியைத் தேடி விரும்பும் முயற்சிகளில் உறுதியோடு செயலாற்றுவீர்கள். சில செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் பெறலாம்.

குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் இருந்தாலும் பாதிப்பு இருக்காது. கடன்காரர்களின் முணுமுணுப்புக்கு முற்றுப் புள்ளி வைக்க முயன்று வெற்றி பெறுவீர்கள். கலைஞர்கள் கடினமான பணிகளில் ஈடுபடும்போது கவனமாக இல்லாவிட்டால் பிரச்சினைகளை வரவேற்க நேரிடும். பங்குச்சந்தை வியாபாரம் பரபரப்பாக நடந்தாலும் எதிர்பார்க்கும் ஆதாயம் இல்லாமல் போகலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,8. அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக் கிழமை: சனி.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விலாசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கனிவான பேச்சுக்கு சொந்தக்காரரான துலாம் ராசி அன்பர்களே!

சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் இல்லாவிட்டாலும், பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்வடைவீர்கள். உற்ற நண்பர்களும், உறவினர்களும் உங்களுக்கு தக்கசமயத்தில் கைகொடுப்பார்கள்.

குடும்பத்தில் குதூகலமும் உண்டு. கடன் தொல்லைகள் இருக்காது. சுப நிகழ்ச்சிகள் செய்ய முன்னேற்பாடுகளில் முனைவீர்கள். கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் பெற்று பொருளும் புகழும் அடைவார்கள். வாழ்க்கை வசதிகள் அதிகமாகும். பங்குச்சந்தை வியாபாரம் கணிசமான லாபம் பெற்றுத்தரும். புதிய நண்பர்களின் வருகையால் முதலீடு அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக் கிழமை: வியாழன்



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கோட்டை**

கம்பீரமான தோற்றம் கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!

உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள். வரவேண்டிய பணம் தாமதமின்றி வந்து சேரும். எதிர்பார்த்த காரியங்கள் இனிதே நடப்பதால் மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடியேறும்.

குடும்பத்தில் சீரான போக்கு காணப்படும். விழாக்கால மகிழ்ச்சியின் தொடர்பாக குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். ஓய்வில்லாமல் பணிகளில் ஈடுபடுவீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடைபெறும். கணிசமான லாபம் பெறுவீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,6,9 அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

பிறர் மனம் கோணாமல் நடந்து கொள்ளும் தனுசு ராசி அன்பர்களே!

எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முயன்று முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். சில செயல்களில் சிறு சிறு தடங்கல்களைச் சந்தித்தாலும் மனம் தளராமல் தீவிர முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். இனிப்பான செய்திகளைக் கேட்டு இல்லத்தில் மகிழ்வு ஏற்படும்.

குடும்பம் மகிழ்ச்சியோடு காணப்படும். கடன் தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். சுப நிகழ்ச்சிகள் நடைபெற முன்னேற்பாடுகளில் முனைவீர்கள். கலைஞர்களுக்கு புதிய வேலைகள் வந்து சேர்ந்து பரபரப்படைவார்கள். பணமும், புகழும் அதிகரிக்கும். சக நண்பர் ஒருவரின் அவசரத் தேவைக்கு உதவி செய்வீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் முன்னேற்றமாகக் காணப்படும். எதிர்பார்க்கும் லாபம் இருக்கும். புதிய நண்பர்கள் சேருவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9 அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

சாமர்த்தியமாகப் பேசி சாதிக்கும் மகர ராசி அன்பர்களே!

நற்பலன்களை எதிர்பார்த்து முயற்சிக்கும் செயல்களில் முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும். நண்பர்களின் உதவி மகிழ்ச்சியளிக்கும். உறவினர்களின் மத்தியில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும்.

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெற முன்னேற்பாடுகளில் ஈடுபடுவீர்கள். சிறு கடன்களைத் தீர்த்து தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். கலைஞர்கள் புதிய பணியில் இருந்து ஓய்வின்றி செயலாற்றுவார்கள். பண வரவுகளால் வங்கியில் சேமிப்பு உயரும். சிலர் விருது, பாராட்டுகள் பெறும் சந்தர்ப்பம் இருக்கும். பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடைபெறும். எதிர்பார்க்கும் லாபம் இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9 அதிர்ஷ்ட நிறம்: பச்சை அதிர்ஷ்டக் கிழமை: புதன்




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

சிந்தனைமிக்க எழுத்தாற்றல் பெற்ற கும்ப ராசி அன்பர்களே!

நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களைக் காண்பீர்கள். வரவேண்டிய தனவரவுகள் தாமதமின்றி வந்து சேரும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். பேச்சுகளைக் குறைத்து செயல்களில் அதிக ஈடுபாட்டுடன் இருந்து முக்கிய காரியங்களை சாதிப்பீர்கள்.

குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் இருந்தாலும் உற்சாகமாக நடைபெற்று வரும். தந்தை வழி உறவுகளால் பூர்வீக சொத்துகள் பற்றிய நல்ல தகவல் வந்து சேரும். சுப நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடைபெறும். யாருக்கும் வாக்களிக்காமல் இருப்பது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,6 அதிர்ஷ்ட நிறம்: வெண்மை அதிர்ஷ்டக் கிழமை: திங்கள்




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சிந்தனைமிக்க எழுத்தாற்றல் பெற்ற கும்ப ராசி அன்பர்களே!

நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களைக் காண்பீர்கள். வரவேண்டிய தனவரவுகள் தாமதமின்றி வந்து சேரும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். பேச்சுகளைக் குறைத்து செயல்களில் அதிக ஈடுபாட்டுடன் இருந்து முக்கிய காரியங்களை சாதிப்பீர்கள்.

குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் இருந்தாலும் உற்சாகமாக நடைபெற்று வரும். தந்தை வழி உறவுகளால் பூர்வீக சொத்துகள் பற்றிய நல்ல தகவல் வந்து சேரும். சுப நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடைபெறும். யாருக்கும் வாக்களிக்காமல் இருப்பது நல்லது. பங்குச்சந்தை வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,6 அதிர்ஷ்ட நிறம்: வெண்மை அதிர்ஷ்டக் கிழமை: திங்கள்

# மரபணு விவசாய உற்பத்தியால் உடல் நலத்திற்கு தீங்கு!



விலங்குகளில் இருந்தும் தாவரங்களில் இருந்தும் மரபணு மூலம் பெறப்படும் உற்பத்திகளை நாம் மரபணு உற்பத்திகள் என அழைக்கிறோம்.

சாதாரண சந்தையில் இயற்கையை மீறிய பரிமாணத்தில் கவர்ச்சிகரமான விவசாய உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டு வாடிக்கையாளர்களை கவர்ந்து வருவதை நாம் அவதானிக்கிறோம். இத்தகைய இயற்கைக்கு மாறான பொருட்களால் கவரப்பட்டு அவற்றைக் கொள்வனவு செய்யும் மக்கள் தம்மை தாமே நோய்களுக்கு உள்ளாக்கிக் கொள்கிறார்கள். இயற்கைக்கு மாறான இந்த உற்பத்திகள் நாவுக்கு ருசியானவையாக இருக்கின்ற போதிலும் உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை. மரபணுமூலம் இயற்கைக்கு மாறாக விளைவிக்கப்படும் விவசாய உற்பத்திகள் கண்களைக் கவரருமம் விதத்திலும், நாவுக்கு இனிமையாகவுள்ள போதிலும் உண்பவர்களின் உடல் நலத்துக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை விஞ்ஞானிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அதிகரித்து வரும் சனத் தொகையையும் அதற்கேற்ப குறைந்து வரும் விவசாய நிலங்களையும் சமப்படுத்த மரபணுமூலம் விவசாய உற்பத்திகள் பெருக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையின் மூலம் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விலங்குகள் மற்றும் பறவைகள் மூலம் உற்பத்தியாகும் உணவுப் பொருட்களைப் பற்றி ஆராயும்வல்லுனர்கள் - உதாரணமாக முட்டையிடும் கோழிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குப் பதிலாக அவற்றால் ஏற்படுத்தப்படக் கூடிய உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். இயற்கைக்கு மாறாக களஞ்சியப்படுத்தப்படும் பழவகைகள், தாவரங்கள் மற்றும் மாமிச வகைகள் கண்களைக் கவருகின்ற போதும் அவற்றின் இயற்கையான அம்சங்கள் இரசாயனங்களால் பாதிக்கப்பட்டு விடுகின்றன என்பதை தாவரவியல் மற்றும் விலங்கியல் நிபுணர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.



அத்துடன் இயற்கைக்கு மாறாக இவ்வாறு



உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளில், வழக்கமாக ஏற்படக் கூடிய பங்கஸ் தாக்கங்கள் போன்றவை செயற்கையாக கட்டுப்படுத்தப்படுவதாகவும் அத்தகைய பொருட்களின் பருமன்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்றும் உள்ளீடுகள் எடுத்துக் கொள்ளப்படுவதாகவும் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

கவர்ச்சிகரமாக விற்பனை செய்யப்படும் இத்தகைய பொருட்கள் அவ்வப்போது மக்களின் கவனத்தை ஈர்த்த போதும் அவற்றினால் மக்களுக்கு உரிய பலன் கிடைக்காமல் எதிர் விளைவுகளே ஏற்படுமென ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.



உலக சுகாதார நிறுவனத்தின் (W.H.O) ஆராய்ச்சியின்படி உலகமெங்கும் பத்து வயதுக்குக் குறைந்த 172 மில்லியன் சிறுவர்கள் நாளாந்தம் பெற்றுக் கொள்ளக் கூடிய கலோரி அளவைப் பெற்றுக் கொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. உலகமெங்கும் 840 மில்லியன் மக்களின் அன்றாட கலோரி தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அவர்களது பொருளாதார முட்டுக்கட்டைகள் இத்தகைய பின்னடைவுக்கு காரணமாகின்றன. முன்னேற்ற மடையாத நாடுகளில் பட்டினியும் குறை பிரசவங்களும் நடைபெற்று வரும் அதே வேளையில், முன்னேற்றமடைந்த நாடுகளில் மேலதிக உணவுப் பொருட்கள் அவரவர் பொருளாதாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக அநியாயமாக அழிக்கப்பட்டு வருவது வேதனைக்குரிய விடயம். இதற்கிடையில் முன்னேற்ற மடைந்து வரும் நாடுகளில் மரபணு மாற்றங்கள் மூலம் உற்பத்திகளைப் பெருக்கிக் கொள்ளுவதன் மூலம் தங்களது பொருளாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரபணு மாற்றத்தின் மூலம் பெருக்கப்பட்ட உற்பத்திகளில் சோளம், சோயா, பருத்தி ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. எனினும் மக்களின் உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய இத்தகைய இயற்கைக்கு மாறான உற்பத்திகளில் மனித சமுதாயம் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். மரபணு மூலம் உற்பத்தியாகும் பொருட்களை தொடர்ந்து உண்ணும் ஒருவருக்கு நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உண்டென உலக சுகாதார ஸ்தாபனம் (W.H.O) எச்சரிக்கை செய்துள்ளது. இவ்விடயத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட சர்ச்சைக்குப் பின் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், கனடா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவை உட்பட பல்வேறு நாடுகள் இவ்விடயத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இன்றும் இயற்கையான சூரிய வெளிச்சத்தின் உற்பத்தியில் நடைபெறும் தாவர மற்றும் விலங்கு வளர்ச்சியில் உலகம் முற்றாகத் தங்கியிருக்கும் இவ்வேளையில் மரபணுமூலம் இயற்கைக்கு மாறாக நடைபெறும் தாவர, விலங்கு உற்பத்திகளினால் எதிர்காலம் கேள்விக் குறியாகும் என நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பிரித்தானிய அதிகாரிகள் முன்பள்ளி பாடசாலைகளில் இத்தகைய இயற்கைக்கு மாறான உணவுகளை வாபஸ் பெறுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி முன்னுதாரணமாக திகழ்கிறது.

தமிழில் - கப்பார்

TIEFSTE PREISE!!




1950.-
statt 2190.-



Polstergruppe Caruso,
Leder schwarz,
Bettsofa + Schublade

Möbel Ferrari
Kleine Preise
Grosse Auswahl

www.moebel-ferrari.ch

HINWIL Wässeristrasse 28
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Direkt-Kedit - 6 Monate ohne Zins